www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 122 மே 22 - ஜூன் 04,1997 விலை 10.00

# பேச்சுவார்த்தை இப்போதைக்கு இல்லை!

- ஜனாதிபதி



## வன்னிப் படையெடுப்பு:

# ஆக்கிரமிப்பு யுத்தம்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இரு வாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா.300
வெளிநாடு-U.S.$.50
(தபால் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05

தொலைபேசி-593615, 584380
தொலைமடல்-594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

# ஆணைக்குழு முடிவு!

கடந்தபயங்கரவாத காலகட்டத்தில் காணமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் மூன்றும் மே 31ந் திகதியுடன் தமது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுகள் மூன்றினதும் விசாரணைகள் இன்னமும் முடியவில்லை. அவற்றிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அரைவாசி மட்டுமே விசாரித்து முடிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாணைக்குழுக்கள் மூன்றில் ஒன்றிற்கு 15500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் 7500 முறைப்பாடுகள் மட்டுமே விசாரித்து முடிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இன்னும் 6500 முறைப்பாடுகள் விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளன. இது இப்படியிருக்க இப்போது இவற்றின் நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் இவ்வாணைக் குழுக்கள் மூன்றையும் இணைத்து ஒரு தனி ஆணைக்குழுவை நியமிக்க முடிவெடுக்கப் பட்டுள்ளதாயும் இது எதிர்வரும் யூன் 1ம் திகதியில் இருந்து இயங்கும் எனவும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

# ஆஸ்பத்திரியில் அரசியல் தலையீடு!

அம்பாறை மாவட்டத்தில் பழம்பெரும் வைத்தியசாலை கல்முனை ஆதார வைத்தியசாலையாகும். ஆனால் இன்று இவ்வைத்தியசாலை எந்த அடிப்படை வசதிகளுமற்று தினமும் இங்கு வரும் நோயாளிகளுக்கு தேவையான மருத்துவ வசதிகளை வழங்க முடியாத நிலையிலுள்ளது.

கல்முனையைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளான காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, சாய்ந்தமருது, துறைநீலாவணை, நற்பிட்டிமுனை, கல்லாறு, சென்றல் காம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட நோயாளிகள் தினமும் இவ்வைத்தியசாலையையே நாடி வருகின்றார்கள்.

இதைவிட இங்கு அடிக்கடி இடம்பெறும் மோதல்களில் அகப்படுவோரும் இவ்வைத்திய சாலைக்கே கொண்டு வரப்படுகிறார்கள்.

ஆனால் இவ்வைத்தியசாலை அடிப்படை வசதிகளற்று பழைய கட்டிடங்களும் பழைய தளபாடங்களுடனும் அதே நூற்றாண்டு கால பழமையுடனேயே இன்னமும் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

இவ்வைத்தியசாலை எதிர்நோக்கும் வசதியீனங்கள், மருத்துவப் பொருட்களின் தட்டுப்பாடு, ஆளணிப்பற்றாக்குறை தொடர்பாக அம்பாறை பிரதி சுகாதாரப் பணிப்பாளர், சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேநேரம் சுகாதார அமைச்சர் பௌசி இவ்வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் செய்ததும் குறிப்பிடத்தக்கது. அரசியல் தலையீடுகளினால் தான் இவ் வைத்தியசாலை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக இங்குள்ளோர் தெரிவிக்கிறார்கள்.

ஏனெனில் கல்முனைக்கு அருகில் அண்மையில் புதிதாக தரமுயர்த்தப் பட்டுள்ளதோடு சிலதினங்களுக்கு முன்னரும் அதற்கு பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இவ் வைத்திய சாலை குறுகிய காலத்துக்குள் சுகாதார அமைச்சின் அனைத்து சலுகைகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை ஆதார வைத்திய சாலையில் நிலவும் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்காமல் போகுமானால் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கலாமென இங்கு பணிபுரிவோர் கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

மாவட்ட வைத்திய அதிகாரியான டொக்டர் கே. முருகானந்தன் அவர்கள் அவ்வைத்தியசாலையின் ஆளணிப்பற்றாக்குறை தொடர்பாக அம்பாறை பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளருக்கு ஏப்.16 அன்று எழுதிய கடிதத்தில் உள்ள புள்ளிவிபரங்கள் மேலே.

### இதோ வெற்றிட விவகாரம்!

| வசதி | இருக்கவேண்டியது | தற்போது இருப்பது | தேவை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| 1. வைத்திய அதிகாரிகள் - | 21 | 10 | 11 | - |
| 2. நிபுணர்கள்- | 08 | - | 08 | - |
| 3. பல்நிபுணர் - | 01 | - | 01 | - |
| 4. நிருவாக அதிகாரி - | 01 | - | 01 | - |
| 5. பதிவு உதவி வைத்தியர் - | 02 | 04 | - | 02 |
| 6. பார்மஸிஸ்ட் - | 09 | 02 | 07 | - |
| 7. டிஸ்பென்ஷன் - | - | 02 | - | 02 |
| 8. ரேடியோ கிறாபர் - | 02 | 02 | - | - |
| 9. தாதிகள் - | 75 | 55 | 20 | - |
| 10. மிட்வைப் - | 09 | 05 | 04 | - |
| 11. அற்றெண்டர்ண்ஸ் - | 70 | 21 | 49 | - |
| 12. சுகாதார தொழிலாளி - | 36 | 08 | 28 | - |
| 13. சாரதி - | 03 | 01 | 02 | |
| 14. ஈசிஜி பதிவாளர் - | 02 | 01 | 01 | - |
| 15. தொலைபேசி இயக்குனர் - | 03 | 0 | 03 | - |

# ஆபத்து?

சுயாதீன தொடர்பு ஊடக சாசனமொன்றைத் தயாரிக்கும் பொது உடன்பாடொன்றுக்கு வந்துள்ள ஆளும் கட்சியினதும், எதிர்க் கட்சியினதும் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மே மாத முதல் வாரத்தில் உடன்பாடொன்றில் கையொப்ப மிட்டுள் ளனர்.

இலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இப்பொது சுயாதீன தொடர்பு ஊடகச் சாசனமொன்றைத் தயாரிப் பதற்காக அரசியல் கட்சி பேத மின்றிச் செயற்படத் தாம் உடன்படுவதாக கூறும் பா.உ.கள் இதில் கையொப்ப மிட்டுள்ளனர். இவ்வுடன்பாட்டில் ஆளும் கட்சிப் பா.உகளின் கையொப்பங்களைப் பெற டிலான் பெரேரா, டலஸ் அழகப்பெரும, றெஜீனோல்டட குறே ஆகியோர் முன்னின்று செயற் பட்டனர். இதேசமயம் கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு அதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பா. உகளின் கையொப்பங்களைப் பெறமுன்வந் தார். பாராளுமன்றத்தில் சிறுபான்மை இன அரசியல் கட்சிகளின் பாஉ.களின் கையொப்பங்களைப் பெற ஐ.தே.க. பா.உ மஹிந்த சமரசிங்ஹ முன்னின்று செயற்பட்டார். இவ் அனைத்துத் தரப்பினரதும் உடன்பாட்டுடன் தயாரிக்கப்பட்ட சுயாதீன தொடர்பு ஊடகச் சாசனத்தை அரசியலமைப்பினுள் உள்ளடக்கு வதற்காக 4 வார காலத்தினுள் அது யோசனை யாகப் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப் படவுள்ளது. தொடர்பூடகச் சாசனத்தை வரைவதற்கு ஆளும் கட்சியைப் போலவே எதிர்க் கட்சியினது பாஉ.களும் இந்நாட்டுத் தொடர்பூடக நிறுவனங் களும் அதன் பிரதிகளும் உள்ள டக்கப் பட்ட விஷேட குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட தொழிலாளர் சாசனம் போல இதுவும் நடைமுறைப்படுத்தப்படாமலே போகுமா அல்லது ஒலிபரப்பு மசோதா போல் அமையுமா என்பது அது தயாரிக்கப்பட்ட பின்பு தான் தெரிய வரும் என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

# சார்க்கினுள் குழப்பம்!

சார்க் வலயத்தினுள் உப வலயங்கள் இரண்டை ஏற்படுத்த முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக இலங்கையும், பாகிஸ்தானும் தமது விருப்பமின்மையைத் தெரிவித்துள்ள மையால் சார்க் அமைப்பினுள் ஒருவித குழப்ப நிலை எழுந்துள்ளது.

சார்க் வலயத்தினுள் உப வலயமொன்றை ஏற்படுத்துவது சார்க் அமைப்பின் நிலைநிறுத்தத்துக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதால் அவ்வாறான உப வலயமொன்றை ஏற்படுத்தும் விடயங்களைக் கருத்திலெடுக்காது விட முடியாது என மாலைதீவின் பிரதி வெளிநாட்டமைச்சர் சொலோ ஷிஹாப் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பங்காளாதேஷ், நேபாளம், பூட்டான், ஆகியவற்றை ஒரு வலயமாகவும், இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, இந்தியா ஆகியவற்றை இன்னொரு உப வலமாகவும் அமைக்க இப்போது யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய யோசனை தொடர்பாக இலங்கையும், பாகிஸ்தானும் தமது விருப்பமின்மையைத் தெரிவித்துள்ள அதேசமயம் இம்முறை சார்க் மாநாட்டின் போது மேற்கூறிய முரண்பாடு விஷேட கவனத்துக்கு உள்ளாகும் அடையாளம் தெரிகிறது. அமைச்சர் மட்டத்தைப் போலவே நாடுகளின் (அரச) தலைவர்கள் மட்டத்திலும் சார்க் வலயத்தினுள் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்கும் முயற்சியொன்று எடுக்கப்படவுள்ளது.

மே 5ம்திகதியன்று முடிவுற்ற சார்க் வெளிநாட்டுச் செயலாளர்களின் பேச்சுவார்த்தைகளில் மேற்கூறப்பட்ட பிரச்சினை கவனத்திற்குட் பட்டிருந்ததுடன், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மாலைதீவுப் பிரதியமைச்சர் ''வலயத்தினுள் உப வலயத்தை அமைக்கப்போவது பற்றி நிலைப் பாட்டுக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் வலயத்தினுள் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து நடவடிக்கையும் எடுக்க அங்கு எல்லா நாடுகளதும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.'' எனக் குறிப்பிட்டார்.

ஏதாவது இரு அல்லது மூன்று அல்லது நான்கு நாடுகள் ஒன்று சேர்ந்து தமது நாடுகளுக்கிடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கையில் அம் முயற்சியானது சார்க் நாடுகளுக் கிடையிலான ஒத்துழைப்பிற்கும், ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத் தாத விதத்தில் மேற்கொள்ளப்பட வேணடிய விதம் தொடர்பான பின்னணியை அமைக்கவும் தீர்மானிக்கப் பட்டதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

வலயத்தில் ஒரு நாடோ அல்லது பல நாடுகளோ சிற் சில நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளச் செல்வதில் அதனூடாக வலயத்தின் நட்புக்குக் குந்தகம் விளைவிப்பதைத் தவிர்க்கும் பொறிமுறையொன்றை (mechanism) ஏற்படுத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. உப வலயமொன்றை அமைப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனை தொடர்பாக அரச தலைவர்கள் மாநாட்டின் முடிவில் தமது நிலைப்பாடு தெரியப் படுத்தப்படும் எனவும் ஷிஹாம் தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளுக்கிடையில் வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வலயத்தினுள் சுதந்திர வர்த்தக வலயமொன்றை ஏற்படுத்தத் தேவையான யோசனைகளைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட குழு எதிர்வரும் ஜுன் மாதத்தில் பூட்டானில் கூடி முடிவெடுக்கவுள்ளது. அங்கு வரி விலக்கு ஏற்படுத்துவது தொடர்பாக யோசனைகள் தயாரிக்கப் படவுள்ளது எனத் தெரிவித்த பிரதி அமைச்சர் பூட்டான் பேச்சுவார்த்தை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று எனக் கருதுகிறார்.

சார்க் வலயத்தின் பொருளாதார ஒத்துழைப்பு இம்முறைய மாநாட்டில் விஷேட கவனத்துக் குள்ளாகும். கடந்த பத்து வருடங்களினுள் சார்க் அமைப்பினூடாக ஆற்றிய சேவை தொடர்பாக விமர்சனங்கள் முன் வைக்கப் பட்டாலும், பத்து வருடங்களினுள் அதனூடாக ஆற்றப்படும் சேவைகளும், கிடைத்த அனுபவங்களும் எதிர்காலத்தில் அமைப்பை மேலும் பலப்படுத்தும் என்றார் அமைச்சர் வெளிநாட்டுச் செயலாளர்களின் நிலைப்பாட்டுக் குழுவில் பேசப் பட்ட விடயங்கள் மத்தியில் பெண்கள், குழந்தைகள், தொலைத் தொடர்பு, போக்குவரத்து ஆகிய தலைப்புக்கள் அடங்கும்.

# கோணேசர் கோவில் மணி

ஏறத்தாழ நான்கு வருடங்கட்கு முன்பு திருகோணமலையின் கோணேசர் கோயிலுக்கு மணியும் கோபுரமும் கட்டும் ஆலோசனையின் பேரில் மணி ஒன்றைச் செய்விக்கு முகமாக லண்டனில் கணிசமான அளவு பணம் (3-4000பவுண்) திரட்டப்பட்டது. ஆயினும் அப்பணம் கோயில் மணிக்கு என்று திருகோணமலையில் அமைக்கப்பட்ட செயற் குழுவுக்கு அனுப்பப்பட்டதாகவோ அல்லது மணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ தெரியவில்லை. இது மிகவும் கவலைக்குரியது. எனவே பணந்திரட்டினோர் பணத்தை உரிய காரியத்திற்குப் பயன்படுத்துவது நல்லது. அல்லது வழங்கினோரிடம் திருப்பிக் கொடுப்பது நல்லது.

இதை விட வருந்தத்தக்க இன்னொரு விடயம் கோயில் மணி பற்றி நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் (எவரதும் பேர் கூறாமல்) பணிவுடன் கோரிக்கை விடுத்து எழுதிய கடிதம் ஒன்றை லண்டனிலிருந்து வரும் பொறுப்பான ஒரு ஆங்கில ஏட்டிற்கும், இன்னொன்றை ஒரு லண்டன் தமிழ் ஏட்டுக்கும் அனுப்பினேன். இரு பத்திரிகை ஆசிரியர்களும் கடிதத்தைப் பிரசுரிப்பதாக உறுதி கூறி பல மாதங்களாகியும் சொன்னதைச் செய்யவில்லை. என் கடிதத்தில் எவர் மீதும் குற்றஞ்சாட்டியோ தனிப்பட்ட முறையில் தாக்கியோ எழுதவில்லை. அத்துடன் அதை என்பேரிலேயே எழுதினேன். பிரசுரிக்கமுடியாது என்று காரணங்கூறி மறுத்திருந்தால் பத்திரிகை ஆசிரியர்களது முடிவை மதிக்கலாம்.

பொதுப்பணம் பற்றிய அசட்டையும் அது பற்றிப் பத்திரிகைகள் பேசத் தயங்குவதும் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் நிதி ஒழுங்கீனங்களை மேலும் ஊக்குவிக்கும் என்பதாலேயே இப் பிரச்சினை பற்றி எழுத முற்பட்டேன். எவ்வாறாயினும் கோணேசர் கோவிலின் பேராற் சேர்க்கப்பட்ட பணம் விரைவில் நல்ல முறையில் பயன்படுமாயின் மகிழ்ச்சி.

*சிவசேகரம்*
*லண்டன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னி: ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிறுத்து!

வன்னியை நோக்கிய படையெடுப்பு தொடங்கப்பட்டு விட்டது. வவுனியா யாழ் வீதியை முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதைப் பிரதான நோக்கமாகவும், தமது செயற்பாட்டு மையமாக வன்னியை உருவாக்கியுள்ள புலிகளை அப்பகுதியில் பலவீனப் படுத்துவதனை நோக்கமாகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஜயசிக்குறுய் படை நகர்வு தொடர்ந்து மூன்றாவது நாளாக



பல நூற்றாண்டுகளுக்கு முந்திய வரலாற்றை சிங்கள மயப்படுத்தி சிந்திக்கும் தேசிய வெறியூட்டல் மரபு, பௌத்த சிங்கள பேரின வாதத்திற்குப் புதிதல்ல, இந்த மரபு தேசிய உணர்வு பெற்ற இன்னொரு தேசியத்தை நசுக்குதலில் திருப்தி யுறும் ஒன்றாக இன்றுவளர்ந்து விட்டிருக்கிறது. வடக்கு கிழக்கு யுத்தத்திலீடுபடும் படையினர் அனைவருமே இந்தத் தேசியத்தின் காவலர்களாக, சிங்களக் கொடியின் ஆற்றலை விரிவுபடுத்த வந்துள்ளவர்களாகப் போற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் கௌரவங்களும், விருதுகளும்அவ்வாறே அமைகின்றன. இந்த நிலையில் சமத்துவத்தையும் அங்கீகாரத்தையும் கௌரவமான சுதந்திரத்தையம் எதிர்பார்க்கும் ஒரு தேசத்தின் அரசியற் கோரிக்கைக்கு, யுத்தத்தின் பின் சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புவது எப்படி? இந்த ஒரு நிலையில்தான் புலிகள் சரியா தவறா என்ற விவாதங்க ளுக்கும் அப்பால் நின்று வடக்கு கிழக்கின் மீதான எல்லாப் படை நடவடிக்கைகளையும் ஆக்கிரமிப்பு யுத்தமாகக் கருதி எதிர்க்க வேண்டி யுள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் மீது கட்டிவிழ்த்து விட்டுள்ள யுத்தமாக அவற்றைக் கணிக்க வேண்டியிருக்கிறது.

நடைபெறுகிறது. யாழ் நகரைக் கைப்பற்றி குடாநாட்டின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் விதத்தில் தனது வெற்றிக் கொடியை நாட்டிய பாதுகாப்பு அமைச்சர் அநுருத்தவின் அடுத்த பிரதான திட்டமாக சில மாதங்களுக்கு முன்பே இப்படை நகர்வு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும், அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளவும் படைகளைத்தய ர்செய்யவும், ஒரு விதத்தில் புலிகளை திசைதிருப்பவுமே அதற்கு முன்பாக மன்னாரில் ஒரு படையெடுப்பு நடாத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது. சிங்கள வார இதழ் ஒன்று மிகவும் விரிவாக வன்னிப் படையெடுப்புக்கான முஸ்தீபுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதையும், புலிகளும் தம் பங்குக்கு சகல தயாரிப்புகளையும் செய்து வருவதையும் பற்றி எழுதியிருந்தது. கூடவே இந்த யுத்தம் மிகவும் முக்கியமான ஒரு தீர்மானகரமான யுத்தமாக அமையப் போகும் ஒன்று என்றும், முன்னைய யுத்தங்களைப் போலல்லாமல், புலிகள் இந்த யுத்தத்தில் மிகவும் தீவிரமாக - தமது முழுச் சக்தியைப் பாவித்தேனும் - பங்கு கொள்வர் என்றும் அது எழுதியிருந்தது.

வவுனியாவிலிருந்து இந்தப் படையெடுப்பை அவசரமாக செய்ய வைத்த உடனடிக் காரணிகள் இரண்டு. ஒன்று வவுனியா விமானத்தளம் மீது புலிகளின் ஆட்டிலறி எறிகணைகள் வந்து விழத் தொங்கியுள்ளதால் வவுனியாப் பிரதேசத்தில் பாதுகாப்பு நிலையைப் பேணுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளமை. புலிகளை குறைந்தபட்சம் எறிகணை வீசக்கூடிய தூரத்திற்கு அப்பால் விரட்டுவது உடனடி அவசியமாக உள்ளது. இரண்டாவது, தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கொலையொன்றில் அமைச்சரின் மகன் சம்பந்தப்பட்டிருந்த போதும், அவரது மகன் மீதான எந்த விசாரணையும் நடாத்தப்படவில்லை. யுத்தம் தீவிரமுறும் பட்சத்தில் இப்போது எதிர்க் கட்சியினர் அவர் மீது எழுப்புகின்ற கேள்விகள் ஏற்படுத்தக்கூடிய அரசியல் நெருக்கடியை குறைத்துக் கொள்வது இலகுவாக இருக்கும். வன்னியில் ஓரளவுக்கு கணிசமான வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அவர் மீதான தாக்குதல்கள் அவ்வளவு தூரம் எடுபடமாட்டா என்பது அவரது கணிப்பு.

எவ்வாறாயினும், இலங்கையின் இன்றைய அரசாங்கம் சமாதானத்தை யுத்தத்தின் மூலமே கொண்டுவரமுடியும் என்று முடிவு கட்டியபின் புலிகள் மீதான தாக்குதல் ஒன்று, அதுவும் அவர்கள் செறிவாயுள்ள வன்னிப்பகுதியில் நடாத்தப்படும் என்று எதிர்பார்ப்பது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. 'பாதுகாப்புப் படைகள்' என்ற பெயரும் இலங்கைப் படைகள் அழைக்கப்பட்டாலும், அண்மைக் காலமாக அதற்கான ஆட்திரட்டல்களின் பிரதானமான அம்சமாக இருப்பது பாதுகாப்பு அல்ல. மாறாக யுத்தமே ஆகும். யுத்தம் புரிய வேண்டும்; புலிகளை அழித்தொழித்து நாட்டை அவர்களிடமிருந்து மீட்க வேண்டும் என்ற அடிப்படையிலான பிரச்சாரத்தின் மூலமே படை திரட்டல் நடைபெறுகிறது. நாடுமுழுவதும் இது தொடர்பாக நடைபெறும் பிரச்சாரமும் யுத்தத்திற்கான பிரச்சாரமாகவே நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், இவ்வாறு திரட்டப்பட்ட படையினரை யுத்தத்தில் ஈடுபடுத்தாமல் வைத்திருப்பதும் ஒரு சிக்கலான விடயமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே வன்னியுத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது எவ்வளவுதான் சமாதானம் பற்றியும் அரசியற் தீர்வு பற்றியும் பேசினாலும், அதன் இன்றைய நடைமுறையாக இருப்பது யுத்தமே. யுத்தம் மட்டுமே ஒருவகையில் அதை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஒரு விடயமாக இருக்கிறது.

யுத்தத்தை நடத்துவது, சமாதான வழிக்கு வராத புலிகளை அடக்கி சமாதானத்தை நிலைநாட்டவே என்று நியாயப்படுத்தப்படுகிறது. ஒரு சில தமிழ்க் கட்சிகளும், சில தமிழ்ப் புத்திஜீவிகளும் கூட இவ்வாறான ஒரு யுத்தம், புலிகளைப் பலவீனப்படுத்துகிற அல்லது அழிக்கிற யுத்தம், சமாதானத்திற்கு முன் நிபந்தனையான ஒன்று என்று கருதுகிறார்கள்.

தமிழ் தேசத்தை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் புலிகளை தாக்குவது தவிர்க்க முடியாதது; ஆனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படாத விதத்தில் அதைச் செய்தால் சரி என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் வழமை போல இந்த மூன்று நாள் யுத்தத்திலேயே புலிகளின் அறிவிப்பின்படி அவர்கள் தரப்பில் இருவரே கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அரசாங்கக் கணக்கின்படி 23 பேர் கொல்லப் பட்டுள்ளார்கள்) ஆனால் ஆயிரக் கணக்கில் மக்கள் அகதிகளாகி வருகின்றனர். குண்டு வீச்சுகட்கும் ஷெல் அடிகட்கும் பல பொது மக்கள் பலியாகியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இராணுவம் படைநகர்வை செய்யும் பாதையில் இருமருங்கிலும் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. ஆக பொது மக்கள் பாதிக்கப்படாமல் யுத்தத்தை நடாத்துமாறு கூறுவதற்கு எந்த நேர்மையான எதிர்பார்ப்பும் இருக்க முடியாது. மாறாக, யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கே இத்தகைய கருத்துக்களை சொல்ல முடியும். (ஒரு வேளை விமானத் தாக்குலையும், கடலிலிருந்து ஷெல் வீசுவதையும் நிறுத்திவிட்டு தரைப் படை மட்டும் யுத்தம் புரிந்தால் இதற்கு ஓரளவாவது வாய்ப்பு உண்டு! என்று சொல்லலாம், ஆனால் இவர்கள் ஒரு போதும் விமானத் தாக்குதலையோ ஷெல்வீச்சையோ கண்டிப்பதில்லை) புலிகள் அழிக்கப்பட்டு இந்த யுத்தம் முடிந்து விட்டால், இங்கு சுமுக நிலை தோன்றி விடும் என்ற கனவுடன் அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்.

ஆனால், யுத்தத்தோடு சேர்ந்து நடந்து கொண்டிருப்பது என்ன?

யுத்தம், ஒரு வேற்று நாடொன்றின் மீது ஆக்கிரமிக்கும் நாடொன்றின் மனோபாவத்துடன் தான் நடந்து வருகிறது. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் படையினர் நடந்து கொள்ளும் விதம் கைப்பற்றப்பட்டவர்களை நடாத்தும் விதத்திலேயே அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கொடியேற்றியதும், யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின் அமைச்சர் ரத்வத்தை 'சப்புமல் குமார' என்ற பெயரால் அழைக்கப்பட்டதும் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். வவுனியாவிலுள்ள பறையனாலங்குளம் 'சப்புமல் புரமாக' மாறியது இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியிலிருந்து கைப்பற்றிய 'சப்புமல்குமார' (இப்பெயரை சப்புமால் குமரையன் என்றும், பராக்கிரமபாகுவின் படைத்தளபதிகளில் ஒருவனாக இருந்த இவன் தென்னிந்தியாவை சேர்ந்தவனென்றும் ஒரு வரலாற்றுக் குறிப்புக் கூறுகிறது) - பின்னாளில் 6ம் புவனேகபாகு என்று பெயர் சூட்டப்பட்டவன் இவனே - வாக தன்னை நினைக்கும் சிங்கள பௌத்த ஆதிக்க மனோபாவம் பாதுகாப்பு அமைச்சரினூடாக வெளிப்படுவதையே இச்சம்பவம் காட்டுகிறது. புவனேகபாகு நல்லூர் கந்தசாமி கோவிலை கட்டுவித்தவன் என்பதற்காக அவனுக்கு வடக்கின் பழைய இலக்கியங்களில் நற்பெயர் உண்டு. இந்தப் பெயரைத் தானும் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற எதிர்பார்ப்பும் கூடவே அமைச்சரின் இப்பெயர் சூட்டுதலின் பின்னணியில் இருக்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முந்திய வரலாற்றை சிங்கள மயப்படுத்தி சிந்திக்கும் தேசிய வெறியூட்டல் மரபு, பௌத்த சிங்கள பேரின வாதத்திற்குப் புதிதல்ல, இந்த மரபு தேசிய உணர்வு பெற்ற இன்னொரு தேசியத்தை நசுக்குதலில் திருப்தி யுறும் ஒன்றாக இன்றுவளர்ந்து விட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு யுத்தத்திலீடுபடும் படையினர் அனைவருமே இந்தத் தேசியத்தின் காவலர்களாக, சிங்களக் கொடியின் ஆற்றலை விரிவுபடுத்த வந்துள்ளவர்களாகப் போற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் கௌரவங்களும், விருதுகளும் அவ்வாறே அமைகின்றன. இந்த நிலையில் சமத்துவத்தையும் அங்கீகாரத்தையும் கௌரவமான சுதந்திரத்தையம் எதிர்பார்க்கும் ஒரு தேசத்தின் அரசியற் கோரிக்கைக்கு, யுத்தத்தின் பின் சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புவது எப்படி?

இந்த ஒரு நிலையில்தான் புலிகள் சரியா தவறா என்ற விவாதங்களுக்கும் அப்பால் நின்று வடக்கு கிழக்கின் மீதான எல்லாப் படை நடவடிக்கைகளையும் ஆக்கிரமிப்பு யுத்தமாகக் கருதி எதிர்க்க வேண்டியுள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் மீது கட்டிவிழ்த்து விட்டுள்ள யுத்தமாக அவற்றைக் கணிக்க வேண்டியிருக்கிறது.





ஆக்கிரமிப்புக்கான எந்த யுத்தமும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் ஆத்மாவை நசுக்கி விடவே செயயும். அதன் பின் சமாதானத்துக்கான எல்லா வாய்ப்பையும் அது விழுங்கி விடும். ஆக்கிரமிக்கப்பட்டவர்களுக்கும், ஆக்கிரமித்தவர்கட்கும் இடையிலான சமாதானம் என்பது அடக்குமுறை மட்டுமே.

போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று எல்லா ஆக்கிரமிப்பாளர்களுடனும் மக்கள் 'சமாதானமாக' வாழ்ந்ததுபோல 'பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுடனும்' வாழ்வது தான் இன்றைய இலங்கையின் அரசியலுக்கு உகந்ததென்று கருதுபவர்கள், இந்த யுத்தத்தை வாழ்த்தட்டும்; புலிகளின் அழிவுக்காக இதை நியாயப்படுத்தட்டும்.

சுதந்திர வேட்கையுள்ள, கௌரவமான வாழ்வை விரும்புகிற மற்றெல்லோரும் ஒரே குரலில் எழுப்பவேண்டிய விடயம் இததான்:

**ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிறுத்து!**
**ஆக்கிரமிப்பு படைகளை வாபஸ்பெறு!**

www.tamilarangam.net



# கிழக்கின் ராஜாக்கள்?

0 சித்தா
0 ராசிக்
0 ஓட்டமாவடி முனாஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 90களில் அப்பாவி இளைஞர்கள் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களும், அரை உயிருடன் ரயர்போட்டு எரிக்கப்பட்ட சம்பவங்களும் எம்மக்கள் நேரில் கண்டதும், அறிந்ததுமான விடயங்களாகும். இக்கொலைகள் அனைத்தையும் 'முனாஸ்', மோகன் குருப் ஆகியோரே செய்து வந்தனர் என்பதும் தெரிந்த விடயம். இந்த முனாஸ், மோகன் கடந்த மூன்று வருடங்களாக எங்கோ தொலைந்து விட்டார்கள் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட மக்களுக்கு 'முனாசின்' ரூபத்தில் ''சித்தா'', ''ராசிக் குருப்'', ''ஓட்டமாவடி முனாஸ்'' போன்றவர்கள் தோன்றியிருப்பது மட்டக்களப்பு மக்கள் அனைவரினதும் தலையில் இடி விழுந்தது போல் அதிரச் செய்திருக்கிறது. கடந்த ஒரு வருடமாக பல மர்மக்கொலைகளைப் புரிந்தும், கடத்தல்களைச் செய்தும் மக்களை கலக்கத்தில் ஆழ்த்தியவன் தான் ''சித்தா''. இவன் கொலைகளை மட்டுமல்ல பல இளம் பெண்களைக் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்திய சம்பவங்களும் உண்டு. இவனால் கடத்தப்படும் பெண்கள் இவனால் கொடுக்கப்படும் பெண்புலிகளின் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள்.

செட்டிபாளையப் பகுதியில் இருந்து நகருக்கு தனியார் படிப்பகத்துக்கு வந்த 24வயதுடைய இளம்யுவதி ஒருவர் ஏப்.03ம் திகதியன்று சித்தாவினால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். இன்றுவரைக்கும் இப்பெண்ணுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. இப்பெண் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டாளா அல்லது இவரால் கொடுக்கப்படும் பெண்புலிப்பட்டியலில் சேர்க்கப்பட்டாளா என்பது தெரியாத ஒரு விடயமக உள்ளது.

ஓட்டமாவடி முனாஸ் - இவர் வாழைச்சேனை காகித ஆலை இராணுவமுகாமின் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்தவர். தான் சந்தேகம் எனக்கருதும் இளைஞர்களையும் யுவதிகளையும் விசாரணைக்காக அழைத்துச் செல்கின்றார். ஓட்டமாவடியினூடாகச் செல்லும், தமிழ் இளைஞர்களை அதிகார தோரணையில் அதட்டுகிறார். இதேவேளை வாழைச்சேனையில் இருந்து வெருகலுக்குச் செல்லும் பொதுமக்களிடமும், அரச ஊழியர்களிடமும் நீங்கள் புலிகளிடம் செல்கின்றீர்களா? என வாட்டி வதைக்கிறார். அங்கிருந்து கொண்டு வரும் பொருட்களை சோதனையிட்டு இவை புலிகளுடையதா என்று துளைக்கின்றார். இந்தப் புலிப் புலனாய் வின் போது நையப்புடைக்கப்பட்டவர்களும் உண்டு.

இதேபோன்று மட்டக்களப்பு நகரிலும் ஏனைய இடங்களிலும் ராசிக்குழுவினரின் கெடுபிடிகளும் அடாவடித்தனங்களும் அதிகரித்து வருகின்றது. தமிழீழம் என்று ஆயுதம் ஏந்தியவர்கள் இன்று தமிழ் இராணுவமாக மாறி இப்போராட்டத்தில் ஈடுபடுபவர்களும், இதற்கு ஆதரவு வழங்குபவர்களும் எங்களுக்கு எதிரிகளே என்று கூறி நகரில் இரவு பகலாக பொதுமக்களுக்கு பெரும் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றனர். அண்மைக் காலமாக இவர்களின் கெடுபிடிகளினால் இளைஞர்கள் நடமாடுவதற்கு பயப்பட வேண்டியுள்ளது. சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்படுபவர்கள் 24 மணித்தியாலத்துக்குள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் இளைஞர்கள் அவ்வாறு ஒப்படைக்கப்படுவதில்லை. இவர்கள் அரசாங்கத்திடம் இருந்து வாங்கும் கூலியை விட அதிகமாக வியாபாரிகளிடமும், மீனவ வள்ளங்கள் வைத்திருப்பவர்கள், வாகனங்கள் வைத்திருப்பவர்கள் போன்றவர்களிடம் இருந்தும் வரிகளை அறவிடுகின்றனர். அண்மையில் நகரிலுள்ள நகைக்கடை உரிமையாளர்களிடம் சென்று பத்தாயிரம் ரூபா பணம் அறவிட்டுள்ளனர். பணம் கொடுக்க மறுத்தால், ''புலிகளுக்கு கொடுப்பீர்கள் எங்களுக்குத் தரமாட்டீர்கள்'', ''எடுடா பணத்தை என்கிறார்களாம்'' பணத்தை பெற்றுக்



கொண்டவுடன் இந்த விடயத்தை யாரிடமும் மூச்சு விடக்கூடாது என்று கூறிச்செல்கின்றார்கள். இதேபோன்று மட்டக்களப்பு முகத்துவாரம் என்னும் இடத்திற்கு தினமும் காலையில் சென்று தோணி வலை வைத்திருப்பவரிடம் தங்களுக்குத் தேவையானளவு மீன்களை எடுத்துச் செல்கிறார்கள். இவர்களுக்கு மீன் இல்லையென்றால் தோணி ஓட்ட முடியாது இந்த நிலையை இவர்கள் யாரிடம் சொல்லி அழுவார்கள்?

மே 2ம் திகதியன்று வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பை நோக்கிவந்து கொண்டிருந்த பஸ் ஏறாவூர் வம்மியடி சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் சோதனைக்காக வரிசையாகச் சென்ற போது ஒரு இளைஞர் இன்னொரு நபரை முந்திச் செல்ல முற்பட்டபோது அவர் தடுத்துள்ளார். உடனே அந்த இளைஞன் தன்து கைக்குண்டை கழற்றி வீச முற்பட்டபோது அருகில் நின்ற பொலிசார் அதைத்தடுத்து விசாரித்த போது தான் ராசிக்குழு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனக்கூறியுள்ளார். இவ்வாறான இவர்களின் கண்மூடித்தனமான செயல்கள் அனேகமான இடங்களில் எல்லை மீறி வருகின்றது.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த க.பொ.த. (சா.த) பரீட்சை எழுதிவிட்டிருக்கும், வே. சுதாகரன் (18) என்ற இளைஞரும், கூலித் தொழில் செய்யும் சங்கரன் (22) என்ற இளைஞரும் ஏப்ரல் 26 அன்று காலை 10 மணியளவில் புலிகள் என சந்தேகத்தின் பேரில் இவர்களால் சுடப்பட்டனர். இவர்களின் பிரேதத்தை செஞ்சிலுவைச்சங்க மூலமாக புலிகளுக்கு அனுப்பிய போது அவர்கள் பிரேதத்தை ஏற்க மறுத்துவிட்டனர். இவ்வாறு தங்களுக்கு சந்தேகம் எனக்கருதப்படுபவர்கள் எல்லோருக்கும் மரண தண்டனை வழங்குவதே இவர்கள் பணி.

தற்பொழுது ரோந்து நடவடிக்கையின் போது இராணுவத்தினர் அநேக பாடசாலை வளவிற்குள்ளும் பொது மக்களின் வீட்டு மதில்களுக்குள்ளுமே பதுங்கி நிற்கின்றனர். ஏப். 04 அன்று கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலய வளவிற்குள் இராணுவம் வழமையாக நிற்கும் இடத்தில் குண்டு வெடித்தது. அன்றைய தினம் அவர்கள் அவ்விடத்தில் நிற்கவில்லை. பாடசாலைப் பெயர்ப் பலகை மாத்திரமே சேதமடைந்தது. தவணைப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு சிதறி ஓடினர். இதுபோன்ற ஒரு சம்பவம் ஏப். 25 அன்று தன்னாமுலை பாடசாலைக்கருகில் இடம் பெற்றது. இது பொதுமக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்ப்டுத்தியுள்ளது. இதனை புலிகள் தானா செய்கின்றனர் அல்லது இராணுவத்தினரே வேண்டுமென்று திட்டமிட்டு செய்கின்றனரா என்ற சந்தேகங்களும் பலரது மத்தியிலும் புரியாத புதிராக உள்ளது. இதேவேளை நகரின் சன நெருக்கடியான பகுதிகளிலும் குண்டுகள் வெடிக்கின்றது. ஏப்ரல் 19ந்திகதி ராஜா புத்தக நிலையத்தருகில் பி.ப.4மணியளவில் மதுபானம் வாங்கச் சென்ற இரு இராணுவத்தினரின் கைக்குண்டுகள் கீழே விழுந்து வெடித்ததால் இருவரும் காயங்களுக்குள்ளானார்கள். ஆனால் சம்பவம் நடந்த இடத்தில் இருந்த பொது மக்கள் தாக்கப்பட்டதுடன், 2 மணித்தியாலங்களாக நகருக்குள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

வாழைச்சேனை விநாயகபுரம் என்னுமிடத்தில் ஏப்ரல் 21ந்திகதி பி.ப. 4 மணியளவில் தேடுதலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்கிச் சென்றதனால் சுமார் 2 மணிநேர துப்பாக்கி சத்தங்களும், எறிகணைத்தாக்குதல்களும் நடந்த வண்ணம் இருந்தன. வாழைச்சேனைத் துறைமுகமுகாமில் இருந்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை கல்மடு அகதிமுகாமில் விழுந்ததால் வி. விஜயகுமார் (4), எஸ். பவளக்கொடி (30), எஸ். பேபி கமலாதேவி (20), எஸ். குமரகுரு (32), சா. கணபதிப்பிள்ளை (60) ஆகியோர் இறந்துள்ளனர். இவர்களுடன் சிவகுமார் சீதாலட்சுமி, சாரதா தேவி, தெய்வானை, பஞ்சவர்ணம், சிவமலர், சிவமணி, விஜயதாஸன், பூரணம்மா சோமசுந்தரம், இராசமணி ஆகியோர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல்' ஆன கதையாகிவிட்டது இந்த அகதிகளின் வாழ்க்கை. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்கள ... டமுனை ஊத்துச்சேனை, புணாணை போன்ற இடங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களினால் விரட்டியடிக்கப்பட்டவர்களே இவர்கள். இவர்கள் 1991ம் ஆண்டு வாழைச்சேனை பேத்தாளையில் அகதிகளாக அமர்த்தப்பட்டனர். கடந்த இரு மாதங்களுக்கு முன் இவ் அகதி முகாம் தீப்பிடித்து எரிந்ததால் இங்கிருந்த அகதிகள் கல்மடுவில் மீண்டும் அகதிகளாக அமர்த்தப்பட்டனர்.

இச்சம்பவம் நடந்த அதே தினம் இக்கிராமத்துக்கு அடுத்த கிராமமான கும்புறு மூலை கிராமத்திலுள்ள மூன்று இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். க. சபேசன் (19), ம. ரதீஸ்வரன் (16), ஐ.இன்பராஜ் (14) ஆகிய மூன்று பாடசாலை மாணவர்களும் இன்னமும் எங்கு இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. இவர்களுடைய பெற்றோர் முகாம்களுக்குச் சென்று கேட்டபோது தாங்கள் அப்படியான ஒருவரையும் பிடிக்கவில்லை என்று கூறுகின்றார்கள். இதேவேளை இருவாரங்களுக்கு முன்னர் இனங்காண முடியாத ஐந்து சடலங்கள் இராணுவத்தினரால் ஏறாவூர் வைத்திய சாலையில் போட்டு எரிக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

இது தவிரவும் மட்டக்களப்பில் இராணுவத்தினர் கடந்த இருவாரங்களாக தங்களது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டு வருகின்றனர். இதேவேளை, நகரிலுள்ள ஒவ்வொரு பாடசாலை முன்பாகவும் பொலிசார் தங்களது நிலைகளைப் பலப்படுத்துகின்றனர். இராணுவத்தினருக்கு பாடசாலை மாணவர்கள் மீதுள்ள நம்பிக்கையீனமே இதற்குக் காரணம். பாடசாலைச் சீருடையில் புலிகள் நடமாடுகின்றனர். இதற்கு மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்றே படையினர் கருதுகின்றனர். இதே நேரத்தில் மே. 08 அன்று இரவு 7மணியளவில் ஆரையம்பதி பிரதேச சபைத்தலைவரின் மெய்ப்பாதுகாவலர் ரி. சிவநாதன் (விஜி) புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். வாழைச்சேனை கல்மடு பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தமது தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் சௌந்தரராஜன் (48) மட்டக்களப்பு, வாழைச்சேனை கண்ணகிப்புரத்தைச் சேர்ந்த எஸ். சின்னத்துரை (45), பேத்தாளையைச் சேர்ந்த பழனிசாமித்தம்பி (57), பட்டியடியைச் சேர்ந்த நா. தர்மலிங்கம் (21) ஆகியோர் மரணமடைந்துள்ளனர். இச்சம்பவம் பாடசாலை விடுகை நேரத்தில் நடை பெற்றதால் 14 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் பதட்ட நிலைமை உருவாகியுள்ளது. நாவற்குடா வாவியில் மீன்பிடிக்கச் சென்ற இரு இளைஞர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது வி.ஜெயசீலன் (22) என்பவர் இறந்துள்ளார். அவரோடு சென்ற சுதர்ஷன் என்பவர் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கிண்ணியடி முகாமில் இருந்தும் முரக்கொட்டாஞ்சேனையில் இருந்தும், இராணுவத்தினர் இரவு வேளைகளில் பிரம்படித்தீவை நோக்கி தொடர்ந்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்வதால் இப்பகுதி பாடசாலைகள் மூடப்பட்டது மட்டுமல்லாமல் மக்கள் இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

ஏப்ரல் மாதம் புன்னைச்சோலை காளிகோயிலுக்குச் சென்ற சித்தா குழுவினர் அங்கு ஆயுதமுள்ளதெனக் கூறி கோயிலைத் திறந்து காட்டச் சொல்லியிருக்கின்றனர். திறக்க மறுக்கவே, கூரையைப் பிரித்து உள்நுழைந்து சோதனையிட்டுள்ளனர். கோயிலின் முன்னாலிருந்த அக்னி குண்டத்தையும் கிளறிப் பரிசோதித்துச் சென்றிருக்கின்றனர்.

இதுபோக மே. 13ம்திகதி சென்ற் மைக்கல்ஸ் வீதியில் இரவு 9.30 மணிபோல் குண்டொன்று வெடித்துள்ளது. இதனைத்தொடர்ந்து அங்குள்ள அனைவரும் பஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். சம்பவத்திற்கு முந்திய நாட்களிலும் இவ்வாறான இரவு விசாரணைகள் இடம்பெற்றுள்ளது. எனினும் இதன் மர்மம்தான் என்னவென்று தெரியவில்லை.

மதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள்: ஆட்பல வீழ்ச்சிக்கான காரணங்கள் எவை?

டி.சிவராம

சென்ற இதழ் தொடர்ச்சி...

தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கான ஆட்சேர்ப்பு 1984-85 இல் உச்ச நிலையை அடைந்தது.இதில் மிக அதிக அளவிலான ஆட்சேர்ப்பில் தமிழீழ விடுதலைக்கழகமே ஈடுபட்டது. 1985இல் அதன் போர்ப்பயிற்சி பெற்ற ஆட்தொகை பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்டதாயிருந்தது. (தமிழகத்தில் ஆறாயிரம், உள்ளூர்பயிற்சி பன்னிரெண்டாயிரம்) அக்காலத்தில் *E.P.R.L.F.* இன் படைப்பிரிவுத் தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் கூற்றுப்படி அவ்வியக்கத்தில் 7000க்கும் மேற்பட்ட போர்ப்பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.(இதில் 1500 பெண்களும் அடங்குவர்) *EROS* இயக்கத்தின் படைப்பிரிவில் 1800 பேரும் *TELO* அமைப்பின் போர் அணிகளில் 8000 அளவிலும் 1984-85இல் இருந்துள்ளனர். புலிகளில் 3000இற்கு மேற்பட்டவர்கள் இருந்தனர். இத்துடன் இவ்விய க்கங்களின் மக்கள் அமைப்புகளில் உறுப்பினராக இருந்த பெருந்தொகையான இளைஞர், இளைஞிகளுள் ஒரு குறிப்பிட்ட தொகையினர் குறுகிய காலத்தினுள் போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டு களத்தில் இறக்கப்படக் கூடிய நிலையில் காணப்பட்டனர். மற்றும் அக்காலத்தில் இயங்கிவந்த *N.L.F.T*, தமிழர் பாதுகாப்பு பேரவை, தமிழீழவிடுதலை நாகங்கள், தமிழீழ இராணுவம், தமி ழீழ விடுதலை இராணுவம் என்ப வற்றில் இணைந்து ஆயுதமேந்திய இளைஞர்களின் தொகையையும் நாம் கணக்கிற் கொண்டால் 1984-85இல் தமிழர் விடுதலை இயக்கங்களின் மிகக் குறைந்தபட்ச மொத்தப் படைப்பலம் 45000 என நாம் கூறலாம்.

இங்கு நாம் இன்னொன்றையும் மனதிற் கொள்ள வேண்டும். இக்காலப் பகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் போரில் பெரும் ஈடுபாடு கொண்டு தமிழகத்திலும், பெங்களூர் போன்ற தமிழர் வாழும் இடங்களிலும் பல இளைஞர்கள் இயக்கங்களில் சேர்ந்து போராட முன்வந்தனர். சிலர் இணைந்து போர்ப்பயிற்சியும் பெற்றனர். இப்படிச் சேர்ந்த தமிழகத்தவர் ஒருவர் இயக்கமொன்றில் உயர்நிலை அடைந்து லெபனான் பயிற்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழக இளைஞர்கள் மத்தியில் ஈழ விடுதலைப் போரில் இணைந்திட ஆர்வம் இருந்த போதும் இந்தியாவுடன் அன்றிருந்த இறுக்கமான உறவு காரணமாக இயக்கத் தலைமைப்பீடங்கள் அவர்களை தமது அணியில் சேர்த்திடப் பயந்தனர்.

மேற்கண்ட அடிப்படையில் பார்க்கையில் அதன் உச்சநிலையில் (1984-85) தமிழீழ விடுதலைப்போருக்கான ஆட்சேர்ப்பு, அன்று வடகிழக்கில் இருந்த தமிழ்ச் சனத்தொகையின் 2.8 வீதமாக இருந்ததைக் காணலாம்.

ஆனால் 1983இல் தமிழருக்கெதிரான வன்முறை நடைபெறமுன்னர் தமிழீழ விடுதலை இயக்கங்களில் ஆக்க் கூடிய பட்சம் 800பேர் கூட இருந்தார்களா என்பது சந்தேகமே.

எனினும் இத் தொகை உண்மையெனக் கொண்டு கணக்கிட்டால் அது அன்றைய வடகிழக்குத் தமிழ் சனத்தொகையின் 0.06 சதவீதமாகும். இது இரண்டே வருடகாலத்துள் 2.8 வீதமாக, அதாவது 45000ஆகக் திடீரென்று உயர்ந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இதன்பின்னர் 1986இல் ஏனைய இயக்கங்களை புலிகள் தாக்கி பலவீனப்படுத்தியமையாலும், இவ்வியக்கங்கள் இதன் காரணமாக இந்தியா சென்றதாலும் ஈழப்போருக்கான மொத்த ஆட்சேர்ப்பு வீதம் கணிசமான வீழ்ச்சி கண்டது. 1987இல் இந்திய படைகள் வட-கிழக்கிற்கு வருகை தந்த வேளையில் ஆட்சேர்ப்பு விகிதத்தில் இரு மாற்றங்கள் நிகழ்ந்தன.

ஒன்று: ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பிட வேண்டுமென *PLOTE, TELO, EPRLF, ENDLF, EROS* ஆகியன முடிவெடுத்ததன் காரணமாக ஆட்சேர்ப்பு, போர்ப்பயிற்சி என்பன அவற்றிக்கு தேவையற்றனவாயின. அத்துடன் டெல்லியும் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் தமிழகத்தில் இயக்கப்பயிற்சி முகாங்கள் இயங்குவதை விரும்பவில்லை.



இரண்டு: புலிகளுடன் போரில் இறங்கிய இந்தியப் படையினர் தமது மூலோபாயத்தின் ஓர் அங்கமாக தமிழ் இளைஞர், இளைஞிகள் அதிகமாக இயக்கத்தில் சேர்ந்திடக் கூடிய வாய்ப்புக்கள் இருந்த வட-கிழக்கின் பல பகுதிகளை முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து ஆயுதப்போராட்டத்தில் இணைவோரின் தொகையைக் கணிசமாக குறைக்க முற்பட்டனர். எனவே 1987-89ம் ஆண்டுகளில் வட-கிழக்குத் தமிழர் மத்தியிலான போர்ப் பங்கேற்பு வீதம் *(MILITARY PARTICIPATION RATIO)* கணிசமாக வீழ்ச்சி அடைந்தது.


இக் காலகட்டத்தில் *EPRLF, ENDLF,* என்பன மேற்கொண்ட கட்டாய ஆடசேர்ப்பின் *(Conscription)* மூலம் ஏற்பட்ட படைவிரிவாக்கத்தையும் விடுதலைப்புலிகளில் அன்றிருந்தோருடைய தொகையைய்யும் கூட்டிப்பாாப்பினும் கூட 6000க்கும் மேல் இருந்ததாக தெரியவில்லை. இது வட-கிழக்கு சனத்தொகையின் 0.3 சதவீதம் ஆகும். 1985ல் 2.8வீதமாக இருந்த ஆட்சேர்ப்பு வீதம் 1989ல் 0.3ஆக வீழ்ந்தது. ஆனால் இந்திய படைகள் வெளியேறிய பின்னர் மீண்டும் வட-கிழக்கு அனைத்திலும் புலிகள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியவுடன் திடீரென ஆள்இணைவு வீதம் பெருகிற்று. 1989 நவம்பர்-1990 ஜூன் ஆகிய ஆறுமாத காலத்தில் வட-கிழக்குத் தமிழ் இளைஞர், இளைஞிகள் மத்தியிலான போர்ப்பங்கேற்பு வீதம் 0.3இல் இருந்து 1.5 ஆகிற்று. இது பெரிய பாய்ச்சல். இந்த ஆறு மாத காலத்தில் வன்னிக் காடுகளில் சிறுத்து நலிந்து போயிருந்த புலிகளின் ஆட்பலம் திடீரென 15-16 ஆயிரமாற்று. இங்கு நாம் இருகேள்விகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

அ. தமிழ் மக்கள் மத்தியிலான போர்ப்பங்கேற்பு வீதம் 2.8 இருந்து (45000) 1.1ஆகக் (14000) குறைந்ததன் காரணங்கள் என்ன?

ஆ. இந்த போர்ப் பங்கேற்பு வீத வீழ்ச்சி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏதாவது பாதிபபினை ஏற்படுத்தி உள்ளதா?

முதலில் தமிழர் மத்தியிலான போர்ப் பங்கேற்பு வீதம் 1985க்கு பின் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்களை ஆராய்வோம்.

1983-93 காலப்பகுதியில் வட-கிழக்கு இலங்கைத் தமிழர் மத்தியிலான போர்ப்பங்கேற்பு விகிதங்கள் (சனத்தொகையின் விகிதமாக ஆட்சேர்ப்பு மட்டம்)




1) 1984-85 காலத்தில் மிக அதிக ஆட்பலத்தைக் கொண்டிருந்த *PLOTE, EPRLF TELO* ஆகிய அமைப்புக்களின் அழிவு. இவை இந்தியப் படைகள் போன பின் வட-கிழக்கில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டதாலும், பின்னர் இலங்கைப்படைகளுடன் சேர்ந்து செயற்படத் தொடங்கியமையால் "தமிழ் மக்களை நசுக்கும் சிங்கள அரச படைகளுக்கெதிரான போரில் இணைய வாரீர்" எனும் கோஷம் அர்த்த மற்றதாகி விட்டதாலும் இந்த இயக்கங்களின் ஆட்சேர்ப்பு தேவை முற்றாக சுருங்கி விட்டது.

2) தமிழ் மக்களை அடிமட்டம் வரை ஊடுருவிச் சென்று, ஈழ விடுதலைப் போரை நோக்கி மிக கணிசமாக அரசியல் மயப்படுத்திய ஏனைய இயக்கங்களின் மிக விரிவான மக்கள் அமைப்புக்கள் இல்லாமற் போனமை.

3) மிக மட்டுப்படுத்தப்பட்ட புலிகளின் பயிற்சி நெறி முறைகள்.

4. தமிழகம் என்னும் மாபெரும் பின்தளம் இல்லாமல் போனமை. 1984-85இல் இயக்கங்கள் மிகப்பெரிய தொகையான போராளிகளைச் சேர்ப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பாகவும் வசதியாகவும் பயிற்றுவிப்பதற்கும் பிரதான காரணியாக இருந்தது இப்பின்தளமே என்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

5) வடக்கிலும், குறிப்பாக கிழக்கிலும் நீண்டகாலமாக அதிகளவிலான போராளிகளை இயக்கங்களுக்கு வழங்கிய சில பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் புகுவதற்கு பிந்தியமை.

6) அரசின் நேரடி அல்லது மறைமுக ஆதரவுடன் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஊர்அழிப்பு, கட்டாயப்படுத்தப்பட்ட குடிசன வெளியேற்றம் மற்றும் குடிசன நசுக்கல் நடவடிக்கைகள் காரணமாக வடகிழக்கின் தமிழ்ச் சனத்தொகை வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி. அம்பாறையில் கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பகுதியில் இருந்த பதினான்கிற்கும் மேற்பட்ட விவசாய கிராமங்களிலிருந்து மக்கள் 1990இன் பின் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். மட்டக்களப்பில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான நெற்பயிர் காணிகள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாயின. இங்கும் பத்துக்கு மேற்பட்ட கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. திருமலையில் 1984க்கு முன் சனத்தொகைச் செறிவு கூடிய, வளமிக்க கிராமங்கள் பல -குறிப்பாக தென்னைமரவாடி, திரியாய், கும்புறுப்பிட்டி போன்ற பல இடங்கள் சாம்பல் மேடாயின.

இந்நிகழ்வுகள் வட-கிழக்கின் மொத்த சனத்தொகையிலும், வளர்ச்சி வீதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தின என்பது வெள்ளிடைமலை.

7) இலங்கையின் ஏனைய பகுதிகளை நோக்கியும்,மேற்கு நாடுகளை நோக்கியும இடம்பெற்ற வட-கிழக்கு தமிழரின் புலப்பெயர்ச்சி. 1994ல் புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்ட ஓர் ஆய்வின் படி வட-கிழக்கிற்கு வெளியே, நாட்டின் ஏனைய மாகாணங்களில் 774,166 இலங்கைத் தமிழர்கள் வாழ்வதாகத் தெரிகிறது. இன்று இது குறைந்த பட்சம் 800,000 ஆகக் கூடியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதில் பெரும்பாலானவர்கள் 1987க்குப் பின் இடம்பெயர்ந்தவர்களே. இதைவிட புள்ளிவிபரத் திணைக்களம் அண்மையில் மேற்கொண்ட இன்னொரு ஆய்வின் படி வடமாகாணத்தைச் சேர்ந்த 324,900 தமிழர்கள் மேலை நாடுகளில் வாழ்கின்றனர். இது குடிவரவு குடியகல்வு திணைக்களப் பதிவுகளை மையமாகக் கொண்ட கணக்கு. இலங்கை கடவுச்சீட்டு இல்லாமல் கள்ளமாகப் போனவர்களையும், கிழக்கிலிருந்து சென்றவர்களையும் சேர்த்தால் நிச்சயமாக 400000 குறையாத வட-கிழக்குத் தமிழர் மேற்குலகை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர் எனக்கொள்ளலாம். ஆக, வட-கிழக்கின் தமிழ் சனத்தொகை அது இயல்பாக இன்று இருந்திருக்க வேண்டிய எண்ணிக்கையை விட எட்டு இலட்சமாயினும் குறைந்து காணப்படுகிறது என்பதே உண்மை. (இங்கு நாம் தெற்கையும், மேற்குலகையும் நோக்கி குறைந்த பட்சம் நான்கு இலட்சம் பேராவது 1985க்கு முன்னரே இயல்பான காரணங்களால் இடம்பெயர்ந்தவர்கள் எனக் கொள்கிறோம்)

8) புலிகளுடன் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக ஏனைய இயக்க ஆதரவாக இருந்த பல குடும்பங்கள் தமிழ் ஈழ விடுதலையை நோக்கிய ஆயுத பேராட்டத்திலிருந்து அந்நியப்பட்டுப் போனமை. நாம் ஏலவே கூறியது போல அரசியல் எழுச்சியை ஆழமாகவும் பரவலா கவும்,

→16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடரும் விவாதம்:

# மாற்றங்கள் அற்புத விளக்கைத் தேய்ப்பதால் வருவதில்லை

## ராதிகாவுக்கு இன்னொரு பெண்போராளியிடமிருந்து ஓர் எதிர்வினை

இ.சசிதா
ஒட்டிசுட்டான்

பெண்புலிகளும் பெண்விடுதலைப் பிரச்சினையும் என்ற ராதிகா குமாரசுவாமி அவர்களின் கட்டுரை (ஆய்வுரை?) படித்தேன். அதில்சில விடயங்களில் அல்ல,பல விடயங்களில் அவரது தவறான புரிந்து கொள்ளல்களை அவதானிக்க முடிகிறது.

ஆயுதந்தாங்கியவர்களெல்லாம் வன்முறையாளர்கள் என்ற வாதத்தை முன்வைக்கின்ற ராதிகா அவர்கள் ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எங்கள் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் வன்முறையாளர்களிடமிருந்து எமதுயிரை, உரிமைகளை பாதுகாத்துக்கொள்வதற்காகவே நாங்கள் ஆயுதம் ஏந்தினோம். இது வன்முறைக்காக ஏந்தப்பட்ட ஆயுதம் அல்ல; மாறாக எங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க ஏந்தப்பட்ட ஆயுதமே. ஆயுத மொழியில் பேசத்தயாராகிவிட்டவர்களுடன் தொடர்ந்தும் அன்புமொழியில் நாம்பேசியிருந்தால் இன்று எம்மை புதைத்த இடத்தில் புல் அல்ல பெரு விருட்சமே வளர்ந்திருக்கும்.

பெண்களை ஆயுததாரிகளாக்குவதன் மூலம் முழுச்சமூகமும் இராணுவ மயமாக்கப்படுகிறது என்றும், சமூகப்பிணக்குகள் கூட இராணுவக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டு, ஆயுதமுனையிலே தீர்க்கப்படுகின்றது என்றெல்லாம் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். இங்கு ஆயுதந்தாங்கிய பகைவர்களான சிங்களப்படையினருடன் மட்டுமே புலிகள் ஆயுதமுனையில் பேசுகின்றனர் என்பதை ராதிகா அவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

இந்த மண்ணில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஆதரவற்ற சிறுவர்களுக்கான செஞ்சோலை, அறிவுச்சோலை, பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வு நிறுவனம், குழந்தைகள் காப்பகங்கள், சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காக்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள், இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியிருப்புத்திட்டங்கள், சமூகப் பிணக்குகளைத்தீர்க்க நீதிமன்றங்கள் என்ற சமூக மேம்பாட்டுத்திட்டங்கள் பற்றியெல்லாம் கட்டுரையாளர் அறியவில்லையா? அல்லது இவையும் அவரது பார்வையில் இராணுவச் செயற்பாடுகள் தானா? பெண்கள்வன்முறையோடு தொடர்பற்றவர்கள் என்று குறிப்பிடுகின்றார். அப்படியானால் ஆண்கள் வன்முறையோடு தொடர்புள்ளவர்களா? மனிதவுரிமைப் போராளிச் சகோதரிக்கு ஒரு வார்த்தை. தமிழராய்ப்பிறந்த ஒருவருமே வன்முறையாளர் ஆகிவிடக்கூடாது என்பது தான் எமக்குள்ள விருப்பம். இனவாத வெறிபிடித்து அலைபவர்கள் ஆயுதப்போரை நடத்துவதை தவிர வேறெந்த வழியையும் எமக்கு விட்டுவைக்கவில்லை.

ஆயுதமுனையில் பெண்களுக்கான சமத்துவத்தையும் அதிகாரங்களையும் பெற்று விடுவோம் என்று எந்தப்பெண்புலி ராதிகாவுக்கு ரகசியத்தகவல் அனுப்பினார்?

எங்களுக்கும் ராதிகா அவர்களுக்கும் பிரதானமானதொரு வித்தியாசம் இருப்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பெரும் வெள்ளம் வந்து இருக்கின்ற எல்லாவற்றையும் அடித்துத்துடைத்துக் கொண்டு பெருங்கடலில் சேர்த்த பின் எங்கே என்ன இருந்தது, எவ்வளவு இருந்தது, மிச்சம் ஏதாவது உண்டா என்று கணக்கெடுத்து அறிக்கை எழுதிவைத்துவிட்டு சோம்பல் முறித்துக்கொள்பவர்கள் தான் ராதிகா சமூகத்தவர். வெள்ளத்தை வரவிடாது அணைகட்டத் தொடங்குபவர்கள் நாங்கள்.

அறிக்கை எழுதிக்கொண்டிருக்கும் ராதிகா, அணை கட்டிக்கொண்டிருக்கும் ராஜேஸ்வரியை சவாலுக்கிழுக்கின்ற ஞானசூனியப்போக்கை என்னவென்று சொல்வது?

மருளுகின்ற மான்களுக்கும் கூவுகின்ற குயில்களுக்கும் மத்தியில் ஆயுதமேந்தி சுட்டெரிக்கத்தயாராய் ஒரு பெண் நின்றிருந்தால் ''நீ வன்முறையாளி'' என்று குற்றம் சாட்டலாம். உனக்கென்ன பைத்தியமா என்று கேள்வி கேட்கலாம். அதே குற்றச்சாட்டை, அதே கேள்வியை, பாய்ந்து குதறத் தயாராகி குருதிவழியும் கோரப்பற்களுடனும், காமப்பசியுடனும் மனித மிருகங்கள் சுற்றிவளைத்து நிற்க அதன் நடுவே ஆயுதந்தாங்கி நிற்கும் பெண்ணிடமும் கேட்டால்? பலபேர் இன்னும் கனவுலகில் இருந்து வெளிவரவில்லை என்பது தெளிவாகவே தெரிகிறது. முதலில் கண்ணைத் திறந்து தூக்கம் கலைக்க வேண்டியது அவசியம் என கருதுகிறேன்.



தனது வாழ்வுரிமைக்காகப் போராட வேண்டிய கட்டாய தேவை இங்குள்ள ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கின்றது. இதில் இருந்து பெண்கள் விலகி நிற்க முடியாது. ஆண்களுடைய ஈகத்தின் மீது நெருப்பெரித்து பெண்கள் குளிர்காய நினைப்பதென்பது எவ்வளவு கேவலம். எங்களுடைய கடமைகளை அடுத்தவர் தலையில் போட்டுவிட்டு காலாட்டிக்கொண்டிருக்க எங்களால் முடியவில்லை.

நாங்கள் மென்மையானவர்கள் தான். எங்கள் பெண்மைத் தன்மை எங்கேயும் போய்விடவில்லை. அதனால்தான் நாங்கள் போராளிகளாயிருக்கின்றோம். எங்கள் கண்ணுக்கு முன்னே நடந்த அவலங்களை, அநியாயங்களை, குருதிக் குளிப்புக்களை தாங்க முடியாமல் தான் நாங்கள் ஆயுதந் தூக்கினோம். சிங்கள - இந்திய இராணுவத்தைத் தவிர வேறு எவரும் எம்மை ஆயுதந் தூக்க நிர்ப்பந்திக்கவில்லை. இந்த மண்ணில் இருந்து யதார்த்தத்தை உணர்ந்து கொண்டிருந்தால், ஆள் தேவைக்காகவே புலிகள் பெண்களை அணிதிரட்டினார்கள் என்ற தவறான வாதம் ராதிகா அவர்களால் முன் வைக்கப்பட்டிருக்காது. எங்கேயோ நின்றுகொண்டு யார் யாரோ எல்லாம் கேட்டார்கள் என்பதற்காக பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்டால், இப்படியான சில அவஸ்தைகளை வாசகர்கள் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இது வாசகர்களின் விதிப்பயன் அன்றி வேறென்ன?

'சீதாதேவி'க்கும் எங்களுக்கும் என்ன உறவு? அவரின் நிலைக்கு நாங்கள் எல்லாம் திரும்ப வேண்டும் என்று ஏன் ராதிகா விரும்புகிறார்? அல்லது திரும்ப முடியாமல் போகலாம் என்று ஏன் கவலைப்படுகிறார்? தீயில் குளித்து தனது தூய்மையை நிரூபிக்க வேண்டிய தேவை என்ன வந்தது, தமிழ்ப் பெண்களுக்கு இப்போது?

பிற்போக்கானவை எனக்கருதி எமது தமிழ்ச்சமூகம் தூக்கியெறியத் தயாராகிவிட்ட விடயங்களை கட்டுரையாளர் திரும்பவும் ஞாபகமூட்டுகிறார். வாழ்க அவரது முற்போக்குப் பணி! வளர்க அவரது சமுதாயத் தொண்டு!

தமிழ்ப் பெண்களின் இந்த மாற்றம் நிரந்தரமானதா என்றோர் கேள்வியை எழுப்புகிறார் சகோதரி. நியாயமான கேள்வி. மாற்றங்கள் அற்புத விளக்கொன்றை கொண்டு வந்து தேய்த்துப் பார்த்தவுடன் ஏற்பட்டுவிடாது. போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை நிரந்தரமானதாக்க நாங்கள் முயற்சிக்கின்றோம். தேசவிடுதலைப் போருக்கான மனரீதியான தயார்படுத்தலை ஒரு ஆரம்பப்படியாக கொண்டு, முற்போக்கு மனநிலைக்கு பெண்களை அழைத்துச் செல்ல விரும்புகிறோம். இந்த இடத்தில் இன்னொன்றையும் கூற வேண்டிய தேவை எமக்குண்டு.

முற்போக்கான மனநிலை, பெண்களுக்கான விடுதலை என்று நாம் கருதுவது ஆண்களைப்போலவோ அல்லது ஆண்களாகவோ மாற்றுவதை அல்லது மாறுவதை அல்ல. ஆண், பெண் என்பது இயற்கையின் படைப்பு. யாரைப் போலும் யாரும் மாறிவிடவும் முடியாது. மாறாக பெண் தனது ஆளுமையை உணர்ந்து கொண்டு தன்னை இரண்டாந்தர நிலையில் வைத்திருப்பதற்காக சமூகத்தால் போடப்பட்ட அநீதிகளை அழித்து, அதில் இருந்து வெளிவந்து சுயமரியாதையை நிலை நிறுத்தி அவளுள் உள்ள மனிதத்தை மதித்து கௌரவிக்கின்றவர்களை இனங்கண்டு, அவர்களுடன் கைகோர்த்து மதிப்பிற்குரியவளாக வாழத்தலைப்படும் நிலையையே நாங்கள் பெண்முன்னேற்றநிலை என கருதுகின்றோம்.

பெண்புலிகள் தனது வேலைகளுக்கு இலகுவாக இருக்கும் என்பதற்காக தலைமுடி வெட்டிக் கொண்டதையும், ஜீன்ஸ் சேட் அணிவதையும் பார்த்துவிட்டு இங்கு 'பெண்விடுதலையே ஆண்கள் மயப்படுத்தல்' என்று மயக்கம் கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

நாளை, வருகின்ற சமுதாயத்தில் எமது பெண்கள் (போராளிகள் அல்லாத) தமக்கு இலகுவானதாக, சுதந்திரமானதாக இருக்கின்றதென கூறிக்கொண்டு, ஜீன்ஸ் சேட் அணிந்து தலைமுடி வெட்டியபடி வாழத்தயார் எனில், அதை எமது வெற்றியாகவே கருதுவோம். பெண்களின் முன்னேற்றத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் போட்டுக் குழப்பும் வேலைகள் இங்கு அவசியமற்றவை.

பூப்புனித நீராட்டு விழா என்பது ஒரு பெண்ணுடைய அந்தரங்கத்தை அம்பலப்படுத்தி அவளை ஒரு பார்வைப் பொருளாக ஆக்குகின்ற வழக்கம் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதுவும் காலப்போக்கில் வரப்போகின்ற விழிப்புணர்வு கொண்ட தம்மைத் தாமே உணர்ந்து கொண்ட பெண்கள் யுகத்தில் அழிந்து போய்விடுமென்பதை என்னால் கூறமுடியும். அதற்கான ஆரம்ப அறிகுறிகளை இப்போதே இந்த மண்ணில் எம்மால் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.

யுத்தமே தமிழ்ச் சமூகப் பெண்களிடம் விரைவான மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பதை கூறுவதற்கு ஆய்வுகள் எதுவும் தேவையில்லை. கலாநிதிப்பட்டம் கூட தேவையில்லை. இந்த மண்ணில் பிறந்த சராசரிக்கும் கீழான அறிவைக் கொண்ட ஒருவரால் கூட கூற முடியும்.

தமிழ் இலக்கியங்களுக்கும், விடுதலைப் புலிகள் மகளிர் படையணி உருவாக்கத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட வேண்டிய அவசியம் என்ன வந்தது? இலக்கியங்களில் சொல்லப்பட்டவற்றைத்தான் நாங்கள் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் எங்களுக்கு இல்லை. இலக்கியங்களில் ''ஆயுதமேந்திய கன்னி'' இருந்தாளா? இல்லையா என்ற விவாதம் இங்கு அவசியமற்றது. ஆனால் இனிவரும் இலக்கியங்களில் நிச்சயம் அவர்கள் இடம் பெறுவார்கள். ஏன்? ஆயுதமேந்திய அன்னையர்கள் கூட இடம் பெறுவார்கள்.

தேசவிடுதலை என்ற இலக்கு நோக்கில் ஆண் - பெண் என்ற வேறுபாடுகள் அனாவசியமானவை. அந்த நகர்வில் அனைவரும் விடுதலைப் போராளிகளே. ஆனாலும் மனிதவுரிமைப் போராளிச் சகோதரிக்குத்தான் பெண் புலிகள் ஆண்களாகத் தெரிகிறார்கள். சிங்களப் படையினருக்குக் கூட அவர்கள் பெண்களாகத்தான் தெரிகிறார்கள். (சில தாக்குதல்களில் காயமடைந்து தப்பிய படையினரின் செவ்விகளை படித்திருந்தால் தெரியும்) ஏனெனில், பகைவனென்றாலும் அவனும் தமிழ் மண்ணில் நின்று பார்த்தவனல்லவா?

ராதிகாவின் ஆய்வுகளில் பெறப்பட்ட உறுதியான முடிவுகளில் ஒன்று புலிப்பெண் கடைசிவரை கன்னியாகவே இருப்பாள் என்பது. பாலியலை தளர்வூட்டும் சக்தியாக என்றுமே நாங்கள் பார்க்கவில்லை. குறிப்பிடக்கூடிய அளவு பெண் போராளிகள் திருமணம் செய்தவர்களாகவும், பலர் காதலர்களாகவும் உள்ளார்கள். தனக்குப் பிடித்த வாழ்வை அமைக்கும் உரிமை புலிப் பெண்களுக்கு வழங்கப்பட்டே உள்ளது.

இங்குள்ள பெண்கள் (புலிப்பெண்கள் உட்பட) கலைத்துவ அம்சங்கள் இல்லாதவர்களாகவே மாறி வருகிறார்கள் என்ற எச்சரிக்கைக்கு அவசியமே இல்லை. இங்கு போராளிகளே கலைஞர்களாகவும், கலைஞர்களே போராளிகளாகவும் நடமாடுவது, சர்வ சாதாரண காட்சிகள். நேரடியாக சமர்களங்களில் நிற்கும் பெண் போராளிகளின் ஓய்வு நேரங்களில் அவர்களுக்கருகில் இருந்தால் அவர்களுக்குள்ள கலையார்வங்களையும் கலைத்துவ அம்சங்களையும் கண்டு கொள்ளலாம்.

இறப்பிற்குப்பின் எந்த மனிதராய் இருந்தாலும் அவர் மரியாதைக்குரியவரே (சிங்கள இராணுவத்திடமோ, சிறீலங்கா அரசிடமோ இந்தக்கோட்பாடு இல்லையென்பதை நினைவிற்கொள்க.) அந்த வகையிலும் மக்களுக்காக உயிர்தந்தவர் என்ற முறையிலும் இங்கு வீரச்சாவுகள் கொண்டாடப்படுகின்றது. இங்கு போராளியின் சாவு வாழ்வின் முடிவல்ல. மாறாக அது எதிர்கால சமூகத்தின் அச்சமற்ற வாழ்தலுக்கான ஆரம்பமே.

உலகப் பெண்கள் இயக்கங்கள் சமாதானத்திற்காகப் போராடுகின்றன. ஏற்றுக்கொள்கிறோம். நாங்களும் அதைத்தான் விரும்புகின்றோம். ஆனால் பாருங்கள் 'அதை' யாரும் தங்கத்தட்டில் தூக்கி வைத்துத் தரத் தயாராக இல்லை. இதுதான் யதார்த்தம். ஊர்வலம் போய், கோசங்கள் எழுப்பி அறிக்கைகள் சமர்ப்பித்தால் அது வந்துவிடுமென்பதற்கு யார் உத்தரவாதம் தருவார்கள்? தந்தால் நாங்களும் தயார். இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதி ''சமாதானத்திற்கான போர்'' என்று அறிவித்துவிட்ட பின்னர் வெள்ளைக் கொடி பிடிக்கவா எங்களால் முடியும்? தன்னை ஒரு தாயாக, விதவையாக இனங்காட்டி ஆட்சிக்கு வந்து →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டு, போருக்குத் தயாராகி நிற்கும் சந்திரிகா அவர்களை கேட்க வேண்டியவிடயங்கள் எவ்வளவோ இருக்க, கண்ணால் காணாத எங்களிடம் ஏன் இவ்வளவு கோபம்? அல்லது விமர்சனம்? சிலவேளை சந்திரிகா சேலை கட்டி நகைகள் அணிந்து அவர் பார்வையில் 'பெண்' விம்பமாகவே படுவதனால் விட்டுவிட்டாரோ என்னவோ? ஆனாலும் ராதிகா அவர்களுக்கு நன்றி. விமர்சனங்களும் எங்களை வளர்க்க உதவுகின்றன.

பெண்ணியம் மானுடப் பெறுமானங்களை மதிக்கிறது. அது மனிதாபிமானமானது. வன்முறையற்றது மரணத்தை விட வாழ்வின் மீதான அக்கறையை அதிகம் கொண்டது. இதை நாங்களும் ஏற்றுக்கொண்டுள்ளவர்கள்தான். அச்சமில்லாத பிச்சையில்லாத சமூகத்தை வேண்டித்தான் நாங்களும் போராடுகின்றோம்.

தன்னை ஒரு மனித உரிமைப் போராளியாக இனங்காட்டும் ராதிகா அவர்கள், இந்த மண்ணில் இடம்பெறும் அவலங்களைத் தீர்ப்பதற்கு இதுவரையில் ஏதாவது ஆக்கபூர்வமான முயற்சிகள் செய்திருக்கிறாரா? (ஜீ.எல் பீரிசின் தீர்வுத்திட்ட உருவாக்கத்திற்கு உதவி செய்கிறார் என்ற பதில் தயவு செய்து வேண்டாம்.)

தமிழ்ப் பெண்கள் மட்டுமல்ல, இங்குள்ள ஒவ்வொருவரும் தமிழனாய்ப் பிறந்த ஒரே காரணத்துக்காக ஆயுதந்தூக்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டதற்கான அகப்புறக் காரணங்களை ஆராய்ந்திருக்கிறாரா? அநியாயமாகக் கொல்லப்படும் தமிழர்களுக்காக எப்போதாவது குரல் எழுப்பியிருக்கிறாரா?

யப்பான் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அம்பலப்படுத்திய இவர் கிரிஷாந்தி, ராஜினி போன்ற நூற்றுக்கணக்கான பெண்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு அல்லது அவர்களுக்கான நீதியைப் பெறுவற்கு என்ன முயற்சி மேற்கொண்டுள்ளார்?

ஆயிரக்கணக்கில் இங்கு விதவைகளாக்கப்படுகிறார்களே பெண்கள், அதைத் தடுக்க என்ன போராட்டம் நடத்தியிருக்கிறார் இந்த மனித உரிமைப் போராளி?

ஆளும் வர்க்கத்தோடு சேர்ந்திருந்து கொண்டு அழகாய் பேசக்கற்றுக் கொண்டதை தவிர உருப்படியாக இவர்போன்றவர்கள் சாதித்தது தான் என்ன?

வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத வேதனைகளை இந்த மண்ணில் உள்ளவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் வேளையில், பெண்புலிகளுக்கு பாலியல் சுதந்திரம் உண்டா, இல்லையா என்பது பற்றிய அநாவசிய ஆய்வு இவருக்கு தேவைதானா?

இறுதியாக வன்முறைகளுக்கெதிராக ராதிகா குரல் கொடுக்கட்டும். செயற்படட்டும். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் புலிகளுடன் இணைந்துள்ள பெண்களெல்லாம் ஒன்றும் தெரியாமல் விழுந்து விட்டார்கள், புலிகள் தலைமையால் தாங்கள் ஆண்கள் மயப்படுத்தப்படுகிறோம் என்பது தெரியாமல் பாதிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் தானாகவே கற்பனை செய்து கொண்டு அவர் கவலைப்பட வேண்டியதில்லை. எங்களைக் காத்துக்கொள்ளும் திறன் எங்களுக்கு உண்டு. நாங்கள் நாங்களாக இருந்து கொண்டுதான் போராடுகின்றோம். ஆயுதப்போரில் கலந்து கொண்டதனால் எங்கள் உரிமைகள் எதுவும் பாதிப்படையவுமில்லை. பாதிப்படையப் போவதுமில்லை. எனவே எதற்கு தேவையற்றவாதங்கள்? ○



# இரு தங்கப் பறவை

**பலஸ்தீனக் கதை**

பகுதி-01

*ஆங்கில மூலம்: யாகி (YAGHI)*

தமிழில்: ***எம்.கே.எம்.ஷகீப்***

நன்றி:*PALESTINE TIMES*

கடும் கோடை. எல்லாம் காய்ந்தும் வரண்டுமிருந்தது. 'இன்திபாதாவின் (எழுச்சி - இஸ்ரேலிய இராணுவ ஆக்கிரமிப்புக்கெதிராக பலஸ்தீன இளைஞர்கள், சிறுவர்கள் மேற்கொண்ட எழுச்சியை 'இன்திபாதா' எனும் சொல் குறிக்கிறது. இதில் கல்லுகளும் சுண்டுவில்களும் முக்கியம் பெறுகின்றன) நாட்களெல்லாம் இப்படித் தான் இருந்தது. இது இன்னொரு நாள். காற்றும் கர்வம் கொண்டு வீடுகளில் மோதியது. மரங்களையும், மனிதர்களையும், கூட விட்டு வைக்கவில்லை. அந்தச் சிறிய பலஸ்தீனக் கிராமத்தின், எல்லாரிலும், எல்லாவற்றிலும் மிகச் சூடாய் முட்டி மோதித் திரிந்தது. அழுக்குப்படிந்த செம்மண் காற்றுச் சுழன்றடித்து, இஸ்ரேலிய இராணுவத்திற்கெதிராய் கோஷமெழுப்பிக் கல்லெறிந்து கூக்குரலிட்டுக்கொண்டிருந்த சிறுவர்களின் முகங்களில் படிந்து குழப்பியது. அழுக்குக்காற்றில் சிறுவர்கள் திணறுப்பட்டார்கள்.

வளைகுடா யுத்தமும் அப்போது முடிந்திருந்தது. வென்றவர்கள் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள் சமாதான முயற்சிகளும், முன்மொழிவுகளும் வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் வாழ்க்கை என்றும் போல் குரூரமானதாகவே இருந்தது. மாற்றங்களென்று ஏதுமில்லை, மிக மிக மோசமாவதைத் தவிர. நேற்றையை விட நாளை கொடூரமிக்கதாகவே இருந்தது.

இந்தக் காலத்தின் ஒவ்வொரு நாளும்'ஹைதம்' தன் நண்பர்களுடன் இணைந்து கொள்வான். செழுமை மிகு தன் நாட்டுக்குள்ளும் அவன் வாழ்கிற கிராமத்துள்ளும் ஊடுருவி ஆக்கிரமித்துத் திரியும் இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது இவர்கள் கல்லெறிவார்கள். அவர்கள் பதிலுக்கு ரப்பர் தோட்டா நிரப்பிச் சுடுவார்கள்; கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசுவார்கள். யாரும் கூட்டமாய் இருக்க முடியாது. அடித்துத் துரத்துவார்கள். சிலவேளைகளில் ரப்பர் தோட்டாக்களுக்கு பதிலாக உண்மைத் தோட்டாக்களும் வரும். வந்தால் எப்படியாவது ஒரு உயிரைக் குடித்துதான் போகும்.

ஹைதமினதும், அவன் தந்தையினதும் அவன் முன்னோர்களதும் காலங்காலமான இந்தத் தாய்த் திருநாட்டை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்புக்கான வரலாற்று உரிமை அவர்களுக்கிருக்கிறதாக உலகத்துக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஹைதமால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு தேசம் அந்நியச் சக்திகளால் திருடு போய்க்கொண்டிருக்கிறது. திருடப்படவில்லை என்று உலகத்துக்குச் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் எப்படி? இவனுக்குள் ஒரே குழப்பம்தான்'

*''அந்நிய ஆக்கிரமிப்பு ஒழியட்டும்''*
*''எம் தேசம் என்றும் அழியாது வாழட்டும்''*
*''சுதந்திரமும், ஜனநாயகமும் எங்கும் மேவட்டும்''*
சிறுவர்கள் கோஷமெழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இது ஒன்றும் பெரிதாய் இஸ்ரேலிய வீரர்களை கிளறச் செய்யவில்லை. எனினும் வழமைபோல் ரப்பர் தோட்டாக்களை நிரப்பிச் சுட்டார்கள். இடையிடையே உயிர் பறிக்கும் சன்னங்களும் பாய்ந்தன. அவர்கள் கால்நடையாகவும், ஜீப்புகளிலும் திரிந்தனர். இளமை வெறி ஏறியிருந்தனர். எல்லாவற்றையும் விட அவர்கள் மிகப் பயங்கரமான எதிரிகளல்லவா...?

சிறுவர்கள் வெருண்டோடினார்கள். ஹைதமும் உயிரேந்திக்கொண்டு ஓடினான். முன்னால் ஓடியவன், ''ஹைதம் கெதியா ஓடி வா, அவர்கள் பிடித்தார்களென்றால் தொலைந்தாய், என்ன நடந்தாலும் இருக்குமிடத்தை மட்டும் சொல்லி விடாதே...' என்று கூவிவிட்டு விரைந்தான். ஹைதம், முன்னால் திறந்து கிடந்த கதவொன்றின் வழியே நுழைந்து ஒரு சிறு வீடொன்றை அடைந்தான். ஒரு பெண் கதிரையில் இருந்து கொண்டிருந்தாள். சிறுவனின் திடீர் நுழைவைக் கண்டு எழும்பி வந்து இவனருகில் நின்றாள். ''அவர்கள் துரத்தி வருகிறார்கள். எனக்கு கொஞ்சம் உதவ முடியுமா..' என்றான் சிறுவன் மூச்சிறைக்க.

'மெதுவாகக் கதை', கேட்டுவிடுவார்கள். இங்கே வைத்துப் பிடித்தார்களென்றால் இருவருக்குமே சிக்கல்...'' என்று விட்டு, அவனை உள்ளே கூட்டிச் சென்றாள்.

'உனது பெற்றோர் எங்கிருக்கிறார்கள்? உன் பெயரென்ன..?' ஹைதமைக் கேட்டாள்.

அந்த வயதான பெண்ணின் கை சிறிது நடுங்கிக்கொண்டிருந்தது. வெள்ளைப்புருவமும், நரைத்த முடியுமாக இருந்த அவளின் கண்களில் பரபரப்புத் தெரிந்தது.

''என் பெயர் ஹைதம். தாய், வீட்டில் என் சின்னத்தம்பிகளுடன் இருக்கிறாள். தந்தையை சிறையிலடைத்து விட்டார்கள். நான் தான் மூத்தவன். எங்கள் போராட்டம் தொடர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எங்கள் அவலக்குரலை உலகம் கேட்க வேண்டும், எங்கள் மீதான ஆக்கிரமிப்பையும் எங்கள் சொந்த நாட்டிலேயே நாங்கள் இரண்டாந்தரமாக இருக்கிற நிலைமையையும் இந்த உலகம் காண வேண்டும்...'' என்று ஒரு பெரியாளாகக் கதைத்தான். யுத்தம் அவனை வளர்ந்தவனாக ஆக்கியிருக்கும்!

சிறுவனின் முகம் மங்கிய மஞ்சள் நிறமாய் இருந்தது. வெகு சீக்கிரத்தில் நடக்கவிருக்கிற ஒரு அபாயத்தை முன்னறிவிக்கிறதையும் சற்றுக் கிலி கொண்டதாயும் அது தெரிந்தது. அவனின் மூச்சிரைக்கிற பேச்சால் அவனது வயிறு ஏறியிறங்கிக்கொண்டிருந்தது. அவனின் தலைமுடி கருப்புப் பட்டைபோல் மின்னியது. அவனின் கண், மூக்கு, வாய் எல்லாம் அவனது குடும்பத்துச் சாயலைக் கொண்டிருந்தது. அவனின் இயல்பான மஞ்சள் நிறத்துச் சாயல் அவனில் வித்தியாசமான ஒரு தோற்றத்தையும் கொடுத்தது. இத்தனைக்கும் அவனது வயது பதின்மூன்றுதான். ஆனால் அவனைப் பார்த்தால் அந்த வயதைவிட குறைவானவனாகவே தெரிந்தான்.

அந்த வயதான பெண் - சாரா - அவனுக்குப் புகலிடமளித்தாள். அவன் அவளுக்கு ஒரு பிள்ளையாகவே தென்பட்டான். அவளும் பல பிள்ளைகளுக்குத் தாயானவள்தானே. ஒரு தாய்க்குரிய பாசத்துடன் அவனை அணைத்துத் தடவிக்கொடுத்தாள்.

மகனே, இவர்களெல்லாம் போனபின் நீ இங்கிருந்து போய்விடு. நீ இங்கிருப்பதை அவர்கள் கண்டால் வந்து என் வீட்டை அடித்து நொருக்கிவிடுவார்கள். இதை விட்டால் வேறு போக்கிடமும் எனக்கில்லை. என்னைப்பார்க்க என் மகன்மார்களும் இல்லை. அவர்களெல்லாம் நாட்டுக்கு வெளியே எங்கேயோ இருக்கிறார்கள். இந்த ஓநாய்களிடமிருந்து ஆண்டவன் உன்னைப் பாதுகாக்கட்டும் மகனே, இவர்களுக்கு வயது முதிர்ந்த பெண்களிலும் கருணையில்லை, சிறுவர்களிலும் இரக்கமில்லை. நீயும் சிறுவன். இவர்களுடன் சண்டையிட முடியாதவன்.. இவர்கள் உன்னைப் பிடித்தார்களென்றால் என்ன செய்வார்கள் தெரியுமா?

நிறையக் கதைத்து உபதேசித்து வினவினாள். ''ஓம். தெரியும். அடித்து நொருக்கிவிடுவார்கள். என் நண்பர்களும் நிறைய அடிப்பட்டிருக்கிறார்கள். சிலருக்கு எலும்புகள் கூட முறிந்திருக்கிறது. சிலரது மண்டையையும் உடைத்திருக்கிறார்கள்... என்றாலும் உலகத்துக்கு எங்கள் நிலைமையைத் தெரிவிக்காமல் நாம் எப்படி இருப்பது? கைது செய்யப்பட்டவர்களும் எதுவுமின்றி துன்புறுத்தப்பட்டல்லவா கொண்டிருக்கிறார்கள். சிறைகளுக்குளே அவர்களது ஓலம் எவ்வளவு பலமாக எழுந்தாலும், உலகத்தின் காதுகளுக்கு கேட்கவா போகிறது...? நாங்கள் இங்கு கதைத்துக்கொண்டிருக்கையில் என் தந்தைக்கு என்ன என்ன கொடூரங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் என்பதனை ஆண்டவன் தான் அறிவான்...''

நெருங்கி வரும் 'சைரன்' ஒலிகளாலும் காலடிச் சத்தங்களாலும் அவனது பேச்சுக் குழம்பியது. ஒரு கலவரத்தின் சூழல் மேவியது. சாரா, அவனை இழுத்துத்தள்ளி ஒரு சிறிய இருட்டறைக்குள் தள்ளினாள். ''நான் வரும்வரை இங்கே இரு'' என்று விட்டு கதவை அடித்து மூடினாள். சிறுவனின் இதயம் வெடித்துவிடுமாப்போன்று துடித்தது. சப்பாத்துக்கால்கள் கதவை உதைக்கிற சத்தமும், இஸ்ரேலிய 'வீரர்களது' மிரட்டல் சத்தங்களும் இவன் காதுகளுக்குக் கேட்டன. பயந்தான். இவன் விதி முடிவு கட்டப்பட்டதாய்...


வரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெண் தாமரை இயக்கம்:



# சமாதானத்திற்கான யுத்தத்தின் புதிய சூழ்ச்சி!

எஸ்.பாலகிருஸ்னன்

வெண்தாமரை இயக்கத்தின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்கத் துக்கான செயற்திட்டங்கள் 1997 ஏப்ரல் 10 ம் திகதி வைபவரீதியாக கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வைபவத்தில் யாழ் நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது, உயிரிழந்த இராணுவ வீரர்கள் ஞாபகமாக நினைவாலயம் ஒன்றும், கொலைசெய்யப்பட்ட அப்பாவி மக்களின் ஞாபகமாக நினைவுச்சின்னம் ஒன்றும் கட்டியெழுப்புவது, இறந்த இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள், அரசுநிறுவனங்களுக்கு அலுவல்களுக்காகச் செல்லும் போது அவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படுவதற்கான ஜனாதிபதியின் கட்டளையை கொண்ட வெண்தாமரை இயக்க விசேட அடையாள அட்டையை வழங்குவது போன்ற செயற்திட்டங்களை (விளம்பரத்தில்) முதன்மைப்படுத்தி தேசிய நல்லிணக்கத் துக்கான செயற்திட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இச்செயற்திட்டங்களை சற்று ஆழமாக அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் ஆராய்வதும், வெண்தாமரை இயக்கத்தின் மேற்கூறிய செயற்திட்டங்கள்மூலம் தேசிய நல்லிணக்கத்தை அடைவதற்கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடுவதையும் நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

முதலாவதாக 1981 ஜுன் 1ம் திகதி அப்போதைய ஐ.தே.க. அரசின் பேரினவாத வெறியர்களினால் எரித்து சாம்பலாக்கப்பட்ட யாழ் மக்களின் அறிவியற் கருவூலமாகத் திகழ்ந்த நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பான விடயத்தைப் பார்ப்போம்.

1948ம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிவரை இன உறவு தொடர்பாக தொடர்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள நடவடிக்கைகளில் இரண்டு விடயங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று, ஒற்றை ஆட்சி முறையையும், பெரும்பான்மை ஜனநாயக நடைமுறையையும் பயன்படுத்தி சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள அரசை, சிங்கள பௌத்தர்களின் ஆயுதமாகப் பயன்படுத்துதல். இரண்டாவது, தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்கான ஆற்றல்களை அரச பலத்தினதும், இராணுவத்தினதும் துணையுடன் சீரழிப்பதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் மேலாண்மையை (Superiority) நிலைநாட்டிக்கொள்வது. இக்குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக அமைந்ததே யாழ் நூலக எரிப்பு சம்பவம். தமிழினக் கலாசாரப் படுகொலையில் மிகவும் முக்கியமான சம்பவமாக இது திகழ்கின்றது.

15 வருடங்களுக்குப் பின்பாவது செய்த தவறை உணர்ந்து அந்த குற்றவியல் மனநிலைக்கு பிராயச்சித்தமாக அந்நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்பமுயல்வது வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். ஆனால், இவ்வரசாங்கத்தினதும், வெண்தாமரை இயக்கத்தினதும் நடவடிக்கை இக்குறிக்கோளை கொண்டதா? அல்லது இந்நூலகம் ஐ.தே.க. அரசினால் எரிக்கப்பட்டது என்பதால் அக்கட்சிக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்களின் ஒரு நடைமுறையா? அல்லது இவ்வரசு யாழ் நகரை சின்னாபின்னமாக்கி, யாழ்ப்பாணத்தைக் கேந்திரமாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், அவர்களின் வாழ்வியலையும் சீரழித்த ரிவிரச படையெடுப்பின் விளைவுகளை மூடிமறைக்க மேற்கொள்ளும் முயற்சியா? அல்லது (சிங்கள) இராணுவ ஆதிக்கத்திற்குட்பட்ட தமிழ்ப்பிரதேசங்களில் அன்றாடம் காணாமற்போகும் தமிழர்கள் பற்றிய தகவல்களையும், தமிழர்களுக்கெதிராக நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதாரத் தடை, விடுதலைப் புலிகளுக்கெதிரான தாக்குதல்களாகக் கருதி தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் மூடிமறைத்து நியாயப்படுத்த இவ்வரசு மேற்கொள்ளும் சூழ்ச்சியா போன்ற கேள்விகள் எழுகின்றன. யாழ் மக்களின் வாழ்வியலையே சின்னாபின்னமாக்கிய இவ்வரசுக்கு யாழ் நூலகத்தைக் கட்டியெழுப்ப அருகதை இருக்கின்றதா? இருக்க வீடுகளின்றி வாழவழியின்றித் தவிக்கும் மக்களின் உடனடித் தேவை நூலகமா? வீடுகளா? இவ்வரசு பதவிக்கு வந்த பின் அதனது இராணுவ அடாவடித்தனங்களின் மூலம் சீரழிக்கப்பட்ட பொது மக்களின் வீடுகளையாவது கட்டிக் கொடுக்காமல், அவ்விதமாக வீடுகளை இடித்து சின்னாபின்னமாக்கிய மிலேச்சத்தனமான சம்பவங்களுக்காக அவ்வீடுகளின் உரிமையாளர்களிடம் மன்னிப்புக் கோராமல், இவையாவற்றையும் இவ்வரசின் மாபெரும் வெற்றியாகப் புகழ் பாடிவரும் இவ்வரசாங்கம், யாழ் நூலக எரிப்பு தொடர்பாக முதலைக்கண்ணீர் வடிப்பது யாரை ஏமாற்றுவதற்காக? இவ்வீடுகள் திருப்பிக் கட்டப்படல் வேண்டுமேயானால் ஒவ்வொரு வீட்டிற்கும் பல இலட்ச ரூபாய்கள் தேவைப்படும். ஆனால் இவ்வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுப்பதற்காக தமது வீடுகளை இழந்த மக்களுக்கு எதுவித உத்தரவாதத்தையும் வழங்காமல் நூலகத்தை கட்டியெழுப்ப மிகவும் மலினத்துவமான முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

### வெண்தாமரை இயக்கம்:

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற தகுதி வெண்தாமரை இயக்கத்திற்கு இருக்கின்றதா என்பது முதல் கேள்வி. வெண்தாமரை இயக்கம் என்பது பொதுஜன முன்னணி அரசின் பேரினவாத யுத்த செயற்திட்டத்தின் ஒரு அங்கமாகும். இந்த யுத்தத்திற்கு சிங்கள மக்களின் ஆதரவைத்திரட்டுவதும், யுத்தத்தில் பாதிப்புறும் சிங்கள இராணுவத்தினரின் தேவைகளைக் கவனிப்பதையும், முதன்மைக் குறிக்கோளாகவும், அரசாங்கத்தின் தீர்வுப் பிரேரணைகளை ஆயுத 'மாகப் பயன்படுத்திக்கொண்டு அவற்றை மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்துவதன் மூலம் அரசின் யுத்தத்தை நியாயப்படுத்தக்கூடிய வகையில் சமாதான முகமூடியை அணிந்து கொள்வதை அடுத்த குறிக்கோளாகவும் கொண்டு ''சமாதானத்திற்கான யுத்தத்தை'' முன்னெடுப்பதில் முன்னின்று உழைப்பது வெண்தாமரை இயக்கமாகும்.

இந்த யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சீரழிவுகளையோ அல்லது பொல்கொட, அலவ்வை, தியவன்ன ஓயா போன்ற பிரதேசங்களில் அரசின் சீருடையணிந்த பொலிசாரினால் அப்பாவித்தமிழ் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக எதுவித அவதானத்தையுமே செலுத்தாத சமாதான இயக்கமே வெண்தாமரை இயக்கம். அதுமட்டுமல்ல இக் கொலைகளுடன் தொடர்புபட்டவர்களை நீதிமன்ற விசாரணை முடியும் முன்னமே விடுதலை செய்து சேவைக்கு அனுப்பியதன் மூலம் தமிழரின் படுகொலையாளர்களை பாதுகாத்துவரும் ஒரு அரசின் அமைப்புதான் வெண்தாமரை இயக்கம். இவ்வியக்கத்திற்கு தமிழர்களுடனான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் தகுதி இருக்கின்றதா? இது மட்டுமல்ல, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளதுடன், அக்கட்சியைச் சேர்ந்த சிலரால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்சிக்குள்ளேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறியுள்ள வெண்தாமரை இயக்கம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த விளைவது யாரை ஏமாற்றுவதற்காக? எனவே இவ்வியக்கத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் நோக்கத்தை இனம் காணுதல் மிகவும் முக்கியமானதாகும்.

### புத்திஜீவிகளின் பங்களிப்பு:

இந்த அரசாங்கத்தின் ''சமாதானத் துக்கான யுத்தத்தை'' விமர்சனங்களுக்கு அப்பால் ஏற்றுக் கொண்டும், மேடைகளிலே யுத்தத்தை அரைகுறையாக விமர்சிப்பதன் மூலமும் இவ்வரசுக்கு முக்குக் கொடுத்து கொண்டிருக்கும் புத்திஜீவிகளும், பத்திரிகையாளர் சிலரும் இந்த திட்டத்தின் வேலைகளைப் பொறுப்பேற்று நடைமுறைப் படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. தேசிய நல்லிணக்கம் என்பது கட்சி, இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பால் பிரசைகள் ஒன்று கூடி சுதந்திரமான, சமாதானமான, நீதியான சூழ்நிலையில் ஏற்படுத் தப்படும் புரிந்துணர்வின் அடிப்படையில் அடையவேண்டியதொன்றாகும். அது வெண்தாமரை போன்ற கருத்தியல் ரீதியில் பேரினவாதத்திற்குக் கடமைப்பட்டுள்ள அரசியல் ரீதியில் பிளவுகளுக்கு உட்பட்டுள்ள ஒரு இயக்கத்தினால் ஏற்படுத்தக் கூடியதொன்றல்ல என்பதை இந்த புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் உணர முடியாதவர்கள் அல்லர். சுய தேவை கருதி இவ்வரசுக்கு மண்டியிட்டுள்ள இவர்களுக்கு இம் முரண்பாடுகள் ஒரு பெரிய விடயமாகத் தென்படாமை ஒரு ஆச்சரியப்படவேண்டிய விடயமுமல்ல. எனினும் இது தன்மானத்தையும், சுயகௌரவத்தையும் இழக்க விரும்பாத ஒவ்வொரு தமிழ் பிரஜையும் ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

எனவே, யாழ் நூலகம் கட்டப்படுவதோ அல்லது அதற்காக நல்லிணக்க முயற்சியை திறந்த மனப்பான்மையுடன் ஏற்றுக் கொள்ள முடியாது.

வெண்தாமரை இயக்கம் விளம்பரப் படுத்தியுள்ள திட்டங்கள் எல்லாமே யுத்தத்தை முதன்மைப்படுத்துவதையும், யுத்தத்தில் அரச தரப்பு பங்காளிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. பேரினவாத தேவை கருதி முன்னெடுக்கப்பட்ட இந்த யுத்தத்தில் உயிர்நீத்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு விசேட சலுகைகள் வழங்க முன்வந்திருக்கும் வெண்தாமரை இயக்கம், இதே இராணுவத்தினால் கொலையுண்ட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் பற்றி எதையுமே பேசாத வெண்தாமரை இயக்கத்தின் இனவாத நிலைப்பாடு அதன் தேசிய நல்லிணக்கத்தின் உள்நோக்கத்தை தெளிவுபடுத்தப் போதுமானவையாகும். கொல்லப்பட்ட அப்பாவிகள் தொடர்பான நினைவுச்சின்ன அடிக்கல் நாட்டு விழாவில் ஐ.தே.க. அரசினாலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இதன் மூலம், இவ்வரசு பதவிக்கு வந்ததன் பின் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் உறவினர்களையும் பங்குபற்ற வைத்து இவர்கள் எமது அரசினால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள்'' என்ற உண்மையை இவ்வரசோ அல்லது வெண்தாமரை இயக்கமோ பிரகடனப்படுத்தியிருந்தால், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தகுதியை ஏற்படுத்திக் கொள்ள உதவியிருக்கும். ஆனால், கொல்லப்பட்ட தமிழர்களையெல்லாம் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் இந்நாட்டு மக்களின் ஆதரவைத் திரட்டுவதோ தவறான விடயமல்ல. யாழ்நூலகத்தை மக்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்புவது தேசிய நல்லிணக்கத்துக்கான மிகவும் சிறந்ததொரு வாய்ப்பாகவும் அமையும். யாழ் நூலகத்தை திருப்பிக் கட்டி முடிப்பதென்பது இழந்த நூலகத்தை மீண்டும் பெற்றுக் கொள்வது என்பது மட்டுமல்ல. இதை நாட்டின் ஒரு தேசிய சமாதான சின்னமாகத் திகழவைக்கக்கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஆனால் இவை பக்கச்சார்பற்ற இனவாதத்திற்கெதிரான, பிரசைகளைக்கொண்ட சமாதான இயக்கத்தின் பணியாகுமேயன்றி முழுத்தமிழினத்தின் வயிற்றிலும் தொடர்ந்தும் உதைத்துக்கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தின் செயலாக அமைய முடியாது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான தனது கடமைப்பாட்டையோ அல்லது தயார் நிலையையோ ஜனாதிபதியோ அல்லது வெண்தாமரை இயக்கமோ இதுவரை நிரூபிக்க வில்லை. மறுபக்கம் பேரினவாத எதிர்ப்பார்ப்புகளைப் பாதுகாப்பது தொடர்பான தமது கடமைப்பாட்டை மிகவும் தெளிவாக வலியுறுத்தி வருகிறன்றது இவ்வரசு. யுத்தம், திருகோணமலைப் பிரதேச சிங்களவர்கள் குடியேற்றம் வட பகுதி தமிழ்ப்பிரதேசங்களில் ''சப்புமல் குமாரர்களின்'' திருநாமங்களை சூட மேற்கொண்டுள்ள முயற்சிகள் போன்றவை இவ்வரசின்தும் வெண்தாமரை இயக்கத்தினதும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சாதனைகள்தான் என்பதை மறந்து விட்டு இவர்களின் போராளிகளுடன் இணைத்து இனம் கண்டுவரும் இவ்வரசுக்கு தேசிய நல்லிணக்கம் என்பது பெரும்பான்மையினத்தினர் தமிழர்களுக்கு வழங்கும் பிச்சையாகக் கருதுகின்றமையையே காணக்கூடியதாக இருக்கின்றது.

சமாதானம், ஜனநாயகம், சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றின் மூலமே தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்பட முடியும். எனவே, போர் நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களின் சமத்துவம் சட்ட ரீதியாக நிலைநாட்டப்படுவதன் மூலம் தோன்றும் சமாதான சூழல் இன்றி யுத்தத்தின் மூலமும், அரச பலாத்காரங்களின் மூலமோ அல்லது செங்கல்லும், புத்தகமும் தரும்படி தென்னிலங்கை மக்களைப் பலவந்தப்படுத்துவதன் மூலமோ தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

இதை வெண்தாமரை இயக்கமோ, அதற்கு முக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் புத்திஜீவிகளோ உணரப்போவதில்லை. இந்நல்லிணக்கத்துக்கான திட்டங்கள் வெண்தாமரை இயக்கத்தின் சமாதானத்துக்கான யுத்தத்தை நியாயப் படுத்தவே உதவுமேயன்றி உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவப்போவதில்லை. இவற்றை தமிழ் மக்கள் சரியாக உணர்ந்து செயற்படாவிட்டால் ''சமாதானத் திற்கான யுத்தத்தின்'' புதிய சூழ்ச்சியில் சிக்கிக் கொள்ள நேரிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'அமைதிப்படை' நாட்களில்...

# பழிவாங்கும் படை!



உடுவிலில் இருந்த இந்திய அமைதிப்படையின் தலைவர் மேஜர் பரமேஸ்வர ஐயர் நல்ல மனிதர் என்று பரவலாகப் பெயர் எடுத்திருந்தவர். மக்களின் பிரச்சினைகளை அனுதாபத்துடன் கேட்டறிந்து, கட்டுப்பாட்டைப் பேணுவதில் அவர் தீவிர முயற்சி மேற்கொண்டிருந்தார். நவம்பர் 25ம் திகதி டச்சு வீதிப்பகுதியில் சோதனை நடத்திக் கொண்டிருக்கும் போது அவரும் அவரது மூன்று ஆட்களும் கொல்லப்பட்டனர். உடுவில் மகளிர் கல்லூரியில் பொறுப்பேற்றிருந்த இராணுவ கப்டன் சர்மா இதனால் பெரிதும் ஆத்திரமுற்றார். அந்தப் பகுதி ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது. தஞ்சரட்ணம் என்ற பென்சன்காரார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டார். எழுபது வயதுக்கும் மேலான கெமரன் தலைப்பாகை அணிந்தவராய் ஒரு பால் போத்தலுடன் உடுவில் சந்திக்கு பாண் வாங்க வந்தபோது அங்கேயே சுட்டுக்கொல்லப்பட்டார். ஷெல் தாக்குதலால் காயமுற்ற தனது தாயை மருத்துவச் சிகிச்சைக்காக அவரது மகன் சைக்கிளில் எடுத்துக் கொண்டு உடுவில் - மானிப்பாய் வீதியில் ஆர்க்லேனுக்குக்கருகில் வந்து கொண்டிருக்கையில் உடுவில் சந்தியிலிருந்து இந்தியப்படை வீரர்கள் சுட்டதில் தாய் இறந்து போக, மகன் மட்டுமே உயிர்தப்ப முடிந்தது. உடுவில் திருச்சபை உறுப்பினரான ஆசிரியை ஒருவர் அன்று மட்டும் குறைந்தது 12 பொது மக்களாவது கொல்லப்பட்டனர் என்று குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பில் தனது பாட்டியுடன் இருந்த ஒரு பல்கலைக்கழக மாணவி பின்வருமாறு கூறுகிறார்: ''பண்டத்தரிப்பிலும் அதற்கு அருகாமையிலுள்ள சண்டிலிப்பாய், சங்கானையிலும் மக்கள் எந்தநேரமும் ஷெல் அடியும், தாக்குதலும், தேடல் வேட்டையும் நடக்கலாம் என்று நிரந்தமான அச்சத்தில் இருந்தார்கள். விடுதலைப்புலிகள் எங்காவது ஒரு இடத்திற்கு போய் அங்கு சில வெடிகளைத் தீர்த்துவிட்டு பின் ஓடி விடுகிறார்கள். பின் இந்தியப்படை வீரர்கள் அங்கு கொலை வெறியுடன் ஓடுகிறார்கள். சந்தை மீண்டும் ஆரம்பமானதும் யாரோ ஒருவர் அங்கு ஒருமுறை வெடிதீர்த்து விட்டு ஓடி விட்டார். இராணுவ வீரர்கள் பொது மக்களைப் பிடித்து அடிக்க ஆரம்பித்தார்கள். இதில் கீரை விற்றுக்கொண்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டார். சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு வீதியில் இந்திய அமைதிப்படை வீரர்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு விவசாயியைச் சுட்டுக் காயப்படுத்தினார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவரை மாதகலிலும் பண்டதரிப்பிலும் இருந்த இந்திய அமைதிப்படை முகாம்களுக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற போது சிகிச்சை மறுக்கப்பட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். விவசாயி இறந்து போனார். மறுநாள் இந்திய அமைதிப்படை முகாம்கள் பொது மக்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்தது.

எங்கள் வீட்டு வளவுக்குள் எந்த நேரமும் படைவீரர்கள் நுழைந்து தேடுதல் வேட்டையாடுவார்கள் என்று எந்த நேரமும் நாங்கள் பயந்து கொண்டிருந்தோம். இது மாதிரியான ஒரு தேடுதல் நடவடிக்கையின்போது பக்கத்து வீட்டிலிருந்த ஒரு பெண்ணை ஒரு இராணுவ வீரன் அடித்து அவளை ஓர் அறைக்குள் பலவந்தமாகத் தள்ளினான். வீட்டிலிருந்த மற்றவர்களும் நாங்களுமாய் சேர்ந்து கூச்சலிட்டோம். வேறொரு இராணுவப் படைவீரர்களின் குழு அந்த இடத்திற்கு வர ஆரம்பித்ததும், முதலில் வந்த படைவீரர்களின் கோஷ்டி ஓடி விட்டது. வந்த கோர்ணல் மரியாதையானவர். விஷமிகள் கண்டுபிடிக்கப்பட்டு, இராணுவ நெறி முறைகளை மீறியதற்காக அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. பண்டத்தரிப்பில் ஒரு முறை எனது மாமியும் ஒருமுறை இராணுவ வீரர்களால் துன்புறுத்தப் பட்டபோதும் அவள் ஒன்றுக்கும் அசையாமல் உறுதியோடு இருந்தாள். மிகப் பின்தங்கிய இந்தியக் கிராமங்களிலும் கூட இராணுவம் பயிற்சிகளில் ஈடுபடும் போது இந்த மாதிரிப் பிரச்சினைகள் திருப்பியும் திருப்பியும் நடந்தவண்ணமாகவே இருக்கிறது என்று ஒரு கேர்ணல் எங்களிடம் கூறினார். புகார்கள் பெருமளவில் வந்து குவிவதற்கு முன்னதாகவே இராணுவப்பிரிவு அந்த இடத்தை விட்டுப் போய் விட்டது. விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்த முன்னைய பிரஜைகள் குழு இந்திய அமைதிப் படையின் கீழ் மீண்டும் செயற் படுத்தப்பட்டது. தான் தனது முகாமிலிருந்த போது எப்படித் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று விபரித்து ஒரு இராணுவ கோர்ணல் சில சிறு சன்னங்களையும் பிரஜைகள் குழுவுக்குக் காண்பித்தார். ''நீங்கள் இதை நிறுத்த வேண்டும். நான் மற்றவர்கள் மீது அக்கறை கொண்டவன். இந்தத் தடவை நான் எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை. அடுத்த தடவை இப்படி ஒன்று நடந்தால் இந்தப் பகுதி முழுதும் ஷெல் தாக்குதல் நடத்துவேன்.'' என்று அவர் அவர்களிடம் தெரிவித்தார். பிரஜைகள் குழு அவரிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டது. ஒரு இராணுவ நடவடிக்கையின் போது, அந்தக் கோர்ணல் வயர்லஸ் மூலம் தனது வீரர்களுக்கு கட்டளை பிறப்பித்ததை நான் கேட்டேன். யாரையும் சுடவேண்டாம் என்றும் தேவைப்பட்டால் துரத்தி அடிக்குமாறும் அவர் கூறிக்கொண்டிருந்தார். ஆனால் ஒரு படைவீரன் கொல்லப்படும் போது இந்த மாதிரியான அறிவுறுத்தல்கள் எவ்வளவு தூரம் நல்லபடியாகக் கடைபிடிக்கப் படும் என்பது எனக்குத் தெரியாது''.

நவம்பர் 7ம்திகதியன்று விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றிய தகவல்களின் விளைவாக இணுவிலிலும் மரு மடத்திலும் இந்தியப்படைகள் மிகவும் கெடுபிடியாக இருந்தன. மேற்கிலிருந்து ஒரு ஒழுங்கை வழியாக அகதி முகாம்களுக்காக அரிசி மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்த ட்ராக்டர் ஒன்று இணுவில் ஆஸ்பத்திரிக்குத் தெற்கில் சில யார் தூரத்தில் காங்கேசன்துறை வீதியைக் கடந்தது. கடக்கும் சமயம் அது இந்திய அமைதிப்படையின் தடைச் சுவர் மீது மோதி எதிரிலிருந்த கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் நுழைந்தது. மருத மடத்திலிருந்த இந்திய அமைதிப் படை சென்றி உடனே ஷெல் அடித்ததில் சன்னங்கள் ஆஸ்பத்திரிக்கு மேலாகச் சென்று ஒழுங்கையில் விழுந்தன. ஒரு சன்னம் பேராசிரியர் சந்திரசேகரத்தின் வீட்டின் மீது விழுந்தது. கால்களை வெளியில் நீட்டிய வண்ணம் ஒரு மேசையின் அடியில் பேராசிரியர் உறங்கிக்கொண்டிருந்ததனால் பேராசிரியரின் கால்கள் இச்சன்னத்தால் மோசமாகச் சிதைந்து போனது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணித்தியாலயங்களின் பின்னர் இறந்து போய் விட்டார்.

நவம்பர் முதல் வாரத்தில் அச்சுவேலியில் சில விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப்படையின் மீது கிறனைற்றுக்களை வீசி எறிந்து விட்டு அங்கிருந்து சட்டத்தரணி பாலசிங்கத்தின் வீடு வழியாகத் தப்பிச் சென்று விட்டனர். இதில் இரண்டு இந்தியப்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். பாலசிங்கம் வீட்டிற்குள் நுழைந்த இந்தியப் படையினர் இந்தச் சம்பவத்தில் சிறிதும் சம்பந்தப்படாத புரொக்ரரையும் அவரது மனைவியையும் அங்கிருந்து இன்னொரு நபரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பிறகு அந்த மூவரும் கொல்லப் பட்டனர்.

வரும்..



கறுப்பாய் முகில் திரண்டே
நெருங்குண்டு உடைப்புவிழக்
கொட்டிற்றே பெருமழையும்
கொட்டிற்றே.
நிலங் குடித்து இயலாது,
ஏறாமடையாக,
நீாப்படுக்கை தெருவிற்கல்லோ உயர்ந்திற்று-
ஆனாலும்,
நான் வரண்டு நிலம் வெடித்து
வாய் பிழந்துதான் கிடந்தேன்.

தெரு மருங்கே
தலையெல்லாம் தீப்பிடித்து
வாகை எரியும் வண்ணம்,
அது பூத்துத்தான் குலங்க
நான் மட்டும்
மருந்துக்கும் பூக்களற்ற-மொட்டை மரமாகித்
தனித்திருந்தேன்.

இன்றைய காற்றுக்கும் கை சொத்தி-
பனியை வீசிப் பாலுறுப்பைக் குதிர்த்தாது,
உதிர்ந்து நனைந்த மலரின் இதழ் புரட்டவென்று
எத்தி எத்தித் தோற்றுத் திரும்பவும் எத்தும்-
தோற்கவென்றே.

எதைத்ததான் நானிழந்து போனேன்
எதைத்தான்?
பழையபடி எதுதான் இன்றில்லை-
இனிய நண்பர்,
புத்தகங்கள்,
தூரக் காற்றில் கசிகிற பாடல்,
ஆவி கிளம்பும் இஞ்சுப் பிளேன்ரீ,
சிகரட்,
கதகதப்பான போர்வை,
அணைத்துப் படுக்கவொரு தலையணை,
கவட்டுக்குள் இன்னொன்று---
----
எதை?

லாகிரி நுரைத்தெழும் வாழ்வு
இன்றேன் வசப்படாது போயிற்று?
எனக்கான மாந்தர்களெல்லாம்
இன்றென்ன-மாண்டா போயினர்?

வேறு எதைத்ததான் நானிழந்து போனேன்?
இன்னும் வாராத
வுன் கடிதத்தைத்தவிர.

றஷ்மி

19970505 மாலை 09மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



அண்மையில் ஈ.பி.டி.பி இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள ராஜேந்திரன் ராமேஷ்வரன் (34), ராஜேந்திரன் ராமமூர்த்தி (30) ஆகிய இரு பாராளுமன்ற உறுப்பினர்களதும (இருவரும் சகோதரர்கள்) பேட்டி இது. இப்பேட்டியின் போது ராமமூர்த்தி 'என்னை விட இது குறித்து எனது சகோதரனிடம்அதிக விபரங்களைப் பெறலாம், அவர் தான் இப்பிரச்சினையில் கூடியளவு பங்குள்ளவர்,' என கூறியதைத் தொடர்ந்து ராமேஷ்வரன் (மதன்) அவர்களிடமே இப்பேட்டியை முழுமையாகப் பெற்றோம். ஈ.பி.ஆர்.எல்.எப். காலத்திலிருந்து அங்கம் வகித்துவரும். ஈ.பி.டி.பி. இயக்கத்த. ன் மூத்த உறுப்பினரான இவர் 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டவர். தெரிவு செய்யப்படவில்லை. ஈ.பி.டி.பி. இயக்கத்தின் சார்பில் வெற்றிபெற்ற ஒரே ஒரு முஸ்லிம் உறுப்பினரான எம்.ஏ.சப்ருல்லா வை 1994 செப்டம்பர் 2ம் திகதி விலகச் செய்தே, ராமேஷ்வரன் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டார். ராமேஸ்வரன் எடுத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 239 ஆகும் இதில் 237 வாக்குகள் ஊர்காவற்துறையிலும் 1 வாக்கு வட்டுக்கோட்டை தொகுதியிலும், 1 வாக்கு யாழ் தொகுதியிலும் கிடைத்தது. இவ்வளவு குறைந்த வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டதானது ஒரு உலகச் சாதனையாகும். இவரது தம்பி ராமமூர்த்தி பெற்ற மொத்த வாக்குகள் 1050 ஆகும்.

# 'நாம் செய்ததெல்லாம் பூச்சியமே!'

## பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.ராமேஷ்வரன்



ஆர்.ராமேஸ்வரன்



ஆர்.ராமமூர்த்தி

நேர்காணல்: என்.எஸ்.குமரன்

**ஈ.பி.டி.பி.க்குள் உங்கள் அரசியல் செயற்பாட்டின் ஆரம்பத்தைக் கூறமுடியுமா?**

நான் 1982இல் ஈ.பி.ஆர்.எல்.எப்பில் சேர்ந்தேன்.3வருடம் அதில் இருந்தேன். இந்தியாவில் ஆயுதப் பயற்சியும் பெற்றிருந்தேன். அதிலிருந்து விலகியபின் இந்தியாவுக்குச் சென்றேன். 1990இல் அங்கிருந்து டக்ளஸ் நான் எல்லோரும் இலங்கை வந்து வேலை செய்யத் தொடங்கினோம். அப்போது தான் ஈ.பி.டி.பி என்றபெயர் மக்கள்மத்தியில் அறிமுகமானது.

**நீங்கள் அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினர் என்கிறீர்களா?**

ஈ.பி.டி.பி.யை ஆரம்பித்ததில் டக்ளசுக்கு எவ்வளவு பங்களிப்பு உள்ளதோ, அவ்வளவு பங்களிப்பு எமக்கும் உண்டு.

**அமைப்பு இயங்குவதற்கு பிரேமதாச ஆதரவு இருந்ததாமே?**

ஆம். பிரேமதாச காலத்திலேயே இந்தியாவிலிருந்து வந்து சேர்ந்தோம் அவரது உதவிகளால் ஈ.பி.டி.பி இயங்க முடிந்தது.

**அது எப்படி பிரேமதாச ஈ.பி.டி.பி.க்கு ஆதரவு வழங்க முன்வந்தார்?**

புலி எதிர்ப்பு விடயத்தில் இரு சாராரும் கருத்தொருமித்து இருந்த படியால் அவர் அதனை பயன்படுத்திக்கொண்டார்.

**என்ன நோக்கத்துக்காக ஈ.பி.டி.பியை தொடக்கினீர்கள்?**

தமிழ்முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக. மூன்றாம் தலைமையொன்றின் அவசியத்தை நிரப்புவதற்காக.

**அப்படியெனில் ஈழம், புரட்சி, என்பதை உங்கள் நோக்கமாக இருக்கவில்லையா?**

சே...சே, அப்படியொன்றும் இருக்கவில்லை. தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ளும் வகையிலேயே தொழிற்படத் தொடங்கினோம்.

**உங்களை விலத்துமளவுக்கு உங்களுக்கும் இயக்கத்துக்குமிடையில் என்ன பிரச்சினை வந்தது?**

இது நீண்டகாலமாக புகைந்துகொண்டிருந்த பிரச்சினை. டக் ளஸின் தன்னிச்சையான சர்வாதிகார போக்குக்கு எதிராக தொடர்ந்து அமைப்புக்குள் பிரச்சினை கிளப்பி வந்துள்ளோம். நான் மட்டுமல்ல இன்னும் இன்றுஇருக்கும்பல தோழர்களுக்கும் இந்தப் பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கிறது. தீவுப்பகுதி மக்கள் படும் கஷ்டம் குறித்து எத்தனையோ தடவை சொல்லியும் அது குறித்து அக்கறை செலுத்தவில்லை. அங்கிருக்கும் தோழர்களை சரியான வகையில் பராமரிப்பது கூட கிடையாது. எந்த தீர்மானமும் ஜனநாயக அடிப்படையில் எடுப்பதில்லை. மத்தியகுழுவென்று இருப்பது வெறும் பேருக்கே. இது போன்ற பிரச்சினைகளுக்கு எதிராக அவ்வப்போது எழுப்பப்பட்ட கேள்வியின் விளைவாகவே இன்று நாங்கள் வெளியேற்றப்பட்டுள்ளோம்.

**ஆனால் மாறாக உங்கள் மீது, பாலியல் வல்லுறவு புரிந்துள்ளமை, வியாபாரத்தில் ஈடுபட்டது போன்ற கட்சியின் கொள்கைக்கு முரணான பிரச்சினைகளுள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நிக்களஸ் கொலையோடு சம்பந்தம் போன்ற கருத்துக்கள் பேசப்படுகிறனவே?**

இது அபாண்டமான குற்றச்சாட்டு. நாங்கள் வியாபாரம் செய்ததாக கூறப்படுகிறதே அப்படியானால் அவர்களுக்கு பங்கில்லை என்கிறார்களா? இறுதியாகக் கணக்கு வழக்குகளை முடித்து ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் நான் கொடுத்திருக்கிறேனே இதற்கு அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்.

நெடுந்தீவு கொலை பற்றி என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? அதுதான் இப்போது யாழ் மாவட்ட பொறுப்பாளராக இருக்கும் ஜெகனிடம் கேளுங்கள். அது தவிர பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு மிகவும் அபாண்டமானது. என் மீது தனிப்பட்ட ரீதியல் களங்கம் விளைவிக்கும் குற்றச்சாட்டு. உண்மையில் இதிலீடுபடுபவர்களை எம்மால் பட்டியல் போட முடியும். எங்களை வீணாக சீண்டினால் எல்லாவற்றையும் அம்பலப்படுத்தி விடுவோம். புத்தகமே எழுதிப் போடுவோம்.

**நீங்கள் இன்றும் பாராளுமன்ற உறுப்பினர் தானே?**

ஆம், நாங்கள் சுயேட்சை குழு-2இன் சார்பில் தெரிவுசெய்யப்பட்டவர்கள். ஈ.பி.டி.பியின் செயலாளரால் எங்களை நீக்கஞ் செய்யமுடியாது.

**விலக்கப்பட்டபின் எத்தனை முறை பாராளுமன்றம் சென்றுள்ளீர்கள்?**

அதன் பின் ஒரு முறைதான் பாராளுமன்றம் கூடியது. சில அச்சுறுத்தல்கள் காரணமாக அதற்கு போகவில்லை.

**எம்.பி.என்ற ரீதியில் உங்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு?**

எமக்கு ஈ.பி.டி.பி.யினால் தான் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இப்போது எங்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. அதற்கான சில ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். உத்தியோகபூர்வமற்ற முறையிலும் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்கிறோம்.

**அப்படியாயின் உங்களுக்கு உயிராபத்துக் குரிய அச்சுறுத்தல் உண்டென்கிறீர்களா?**

ஆம். தொடர்ந்துமுண்டு. தனக்கு எதிராக தொழிற்படும் எவரையும் அழிப்பதே டக்ளஸின் கொள்கை. என்னுடனான பிரச்சினையினால் எனது செயலாளர் குணசீலனை கடத்திச்சென்று பார்க் வீதி அலுவலகத்திலுள்ள அவர்களது ரகசிய சிறைக்கூடத்தில் 85 நாட்கள் வைத்து சித்திரவதை செய்தனர். முதல் ஒருவாரமாக பட்டினி போட்டனர். பின்னர் மின் சார வதை புரிந்ததுடன், அடித்து கொடுமைபடுத்தினர். தற்போது அவர் எங்களுடன்தான் உள்ளார். யாழ் அலுவலகத்தில் அமைப்பின் வேலைகளை அக்கறையுடன் செய்து வந்த ஒரு தோழருக்கே இந்த கதியென்றால் பிறகு நீங்களே யோசியுங்கள்.

**சுவிஸ் பேங்கில் டக்ளஸின் கணக்கில் 100 கோடி ரூபாவுக்கும் மேல் பணம் இருப்பதாக சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளீர்களே?**

அந்த 100 கோடி ரூபா விடயம் அவதூறானதல்ல. சீ.ஐ.ஏ. வெளியிட்ட அறிக்கையொன்றில் பல குழுக்களைச் சேர்ந்தவர்களின் சுவிஸ் பேங்க் கணக்கில், எவ்வளவு இருக்கிறது என ஒரு பட்டியலை வெளியிட்டிருந்தது. தற்செயலாக எமக்கு எட்டிய அந்த அறிக்கை குறித்து நாங்கள் கேள்வி எழுப்பிய போது அதிகாரத்தோரணையில் அதனை மழுப்பிவிட்டார் டக்ளஸ். இதுவரை இயக்கத்தின் பேரில் எதுவித சொத்துமில்லை. எல்லாமே டக் ளஸின் சொந்தச் சொத்தாகவே உள்ளன. இந்தியாவிலிருந்து வரும்போது உடுத்த உடுப்போடு வந்து சேர்ந்த அவரிடம் இவ்வளவு சொத்து எப்படி?

**றோ போன்ற நிறுவனங்களினால் குறிப்பிட்ட சில வேலைகளை முடிப்பதற்காக வழங்கப்பட்ட பணங்களே அவை என பேசிக்கொள்ளப் படுகிறதே?**

அப்படி இருக்காது என நான் சொல்லமாட்டேன். டக்ளஸின் அரசியலானது கஜானாவை நிரப்புவதற்கான சந்தர்ப்பவாத அரசியலே. அதற்காக யாருடனும் அவரால் சேரமுடியும். ஆனால் பணம் கிடைக்கும் வழி அது மட்டுமல்ல. இன்றுயாழ் மாவட்டம் முழுதுமாக -தீவுப்பகுதி உட்பட- நூறுக்கும் குறைவான தோழர்களே கடமையில் உள்ளனர்.. ஆரம்பத்தில் 400 பேர் இருந்தார்கள். இவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ லங்கா பாதுகாப்பு அமைச்சினால் ஆமிக்கு கொடுக்கப்படும் அதே அளவு சம்பளம் வழங்கப்படுகிறது.

ஒருவருக்கு 7000 அளவில் இருக்கும். அதை விட வேறு வசதிகளும் உண்டு. இவர்களுக்கான பணம் அத்தனையையும் டக்ளசே பெறுகின்றார். 400பேருக்கு 600பேர் என்று பட்டியலனுப்பி எடுக்கப்படும் பணத்தில் சிறியளவு தொகையே அங்கு பணிபுரியும் தோழர்களுக்கு அனுப்பப்படுகிறது. இது தவிர எங்களுக்குக் கிடைக்கும் 21,000 கொடுப்பனவில் எங்களுக்குக் கிடைப்பது 8000 ரூபாவே. மிகுதி எங்கே. எனது தம்பி ராமமூர்த்தியின் வாகனத்தையும் விற்றுப் போட்டார்கள். எம்.பி.மார் பெரும்பாலும் ஆட்டோவில்தான் பிரயாணம் செய்கின்றனர். எனவே பணம் கிடைக்கும் வழிகள் பல அவருக்கு. அங்கு உயிரைப்பணயம் வைத்து வேலைசெய்யும் தோழர்களின் ரத்தத்தில் இவர்கள் பிழைப்பு நடத்துவதை எப்படி ஏற்க முடியும்.

**இது குறித்து நீங்கள் கேள்வி எழுப்பியதில்லையா?**

ஏனில்லை. பலதடவை இது குறித்து கதைத்த இடங்களில் வாக்குவாதப்பட்டதுதான் மிச்சம். இவர்களுக்கு களநிலமை எதுவும் தெரியாது. நான் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இதுவரை நானும் ராமமூர்த்தியும் பாஸ்கரன் எம்.பியும் மட்டுமே அங்கு தொடர்ந்து இருந்து வந்துள்ளோம். பாராளுமன்றத்துக்கு கூட ஆறுமாதத்துக்கு ஒரு முறை தான் என்னால் வரமுடிந்தது. எனவே அங்குள்ள நிலமை எங்களுக்குத் தான் தெரியும்.

**இனிமேல் பாராளுமன்றத்தில் எவரை ஆதரிக்கப்போகிறீர்கள்?**

நாங்கள், சுயேட்சையாக இருந்து கொண்டே எம்மீதான சட்டப்பிரச்சினைகளுக்கு உதவி செய்யக்கூடிய தரப்பினரை நாங்கள் ஆதரிப்போம்.

**அப்படியானால் யு.என்.பி.யையா ஆதரிக்கப் போகிறீர்கள்?**

நாங்கள் விலக்கப்பட்டதன் பின் கரிசனையோடு எங்களைப்பற்றி ஆள் அனுப்பி விசாரித்தவர் ரணில் விக்கிரமசிங்க தான். எனவே 80 வீதம் அவர்களுக்கு ஆதரவளிக்கக் கூடிய சந்தர்ப்பமே உண்டு.

**அப்படியென்றால் உங்கள் அரசியல் இலக்குதான் என்ன?**

எந்த தமிழ் அமைப்பு, தமிழ் மக்களின் நலனுக்காக தொழிற்படுகிறது? எல்லோருமே ஆளுங்கட்சியை சார்ந்து தானே இருக்கிறார்கள்.

**பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் உங்களை தெரிவு செய்த மக்களுக்கு நீங்கள் இது வரை செய்ததென்ன?**

பூச்சியம்

**இனி என்ன அவர்களுக்கு செய்யப் போகிறீர்கள்?**

பூச்சியமே. நாங்கள் செய்ததும் செய்யப்போவதும் பூச்சியமே. நான் பெரிசா வெட்டிப் பிடுங்கினதாகவோ, வெட்டிப்பிடுங்கப்போகிறேன் என்றோ பொய் சொல்லத் தயாரில்லை. இது வரை மனிதாபிமானத்தோட மக்களுடன் நடந்துகொண்டுள்ளேன் அவ்வளவுதான். ●

---

# பேச்சுவார்த்தை இப்போதைக்கு இல்லை!

## ஜனாதிபதி.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் 'கெப்பிட்டல் ரேடியோ'வுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியொன்றிலிருந்து சில பகுதிகளை தமிழாக்கம் செய்து இங்கு தருகிறோம்.

**நீங்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளீர்களா?**

நாங்கள் ஈடுபட வேண்டிய, செய்ய வேண்டிய முக்கிய விடயங்கள் பல உள்ளன. இது தான் ஒரு முக்கியமான விடயம் என்றில்லை. பாராளுமன்றம் மூலம் நாம் வெற்றிகொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய உண்டு. பாராளுமன்றத்துக்கூடாக தீர்மானிக்கப்பட வேண்டிய அரசியல் தீர்வுப்பொதியை எடுத்துக் கொண்டால் இதில் புலிகளூடாகச் செய்ய வேண்டியவை மிகமிக சொற்பமே. முழு தேர்தல் தொகுதிகளையும் இதற்காக தயார் செய்யும் பொறுப்பு எம்மிடம் தான் இருக்கிறது. புலிகள் ஒரு காரணி மட்டுமே.

**அப்படியானால் ஐ.தே.க இதற்கு ஆதரவு அளிக்குமென நீங்கள் நினைக்கிறீர்களா?**

எனக்கு சொல்லத்தெரியாது. அதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காகவே நாம் இப்போது செயல்படுகிறோம். பிறகு, ஐ.தே.கவுடனான பூரண உடன்பாட்டை பெறுவதற்கான எமது உச்ச முயற்சியை மேற்கொள்வோம்.

**அவர்கள் ஆதரவு அளிக்காவிட்டால்....**

அப்படியானால் எங்களிடம் எங்களது தீர்வு இருக்கும்.

**புலிகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? எவ்வாறிருப்பினும் புலிகள் இனப்பிரச்சினை தொடர்பில் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாதல்லவா..?**

ம்..ம்.

**அப்படியானால், எப்போதாவது அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் உத்தேசம் உண்டா?**

சிலவேளைகளில் பேசவேண்டி வரலாம். ஆனால் அதற்கான, காலம், பேசும்முறைகள் என்பனவற்றை நாங்கள் ஏற்கெனவே வரையறை செய்துள்ளோம். பேச வேண்டிய நேரம் நிபந்தனைகள் என்பவற்றை நாம் தீர்மானிக்க வேண்டும். எப்போது நேரம் வருகிறதோ அப்போது பேச்சுவார்த்தையை முன்னெடுப்போம்.

**அண்மைய நிகழ்வுகளினால் இப்போது புலிகளின் இராணுவ நிலை மோசமடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரலாம் என்று நம்பப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

புலிகள் இன்னமும் விரும்புகிறார்கள் என்பது உண்மையே. ஆனால் சரியான நேரம் வரும்போதும், அவர்கள் எங்களது நிபந்தனைகளை ஏற்கும் போதும் தான், நாம் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம்.

**உங்கள் அரசு இனப்பிரச்சினையை ஒரு உள்நாட்டு பிரச்சினையாக கருதிவருகிறது. அப்படியிருக்கையில் நீங்கள் பேச்சுவார்த்தையின் போது ஒரு மூன்றாவது மத்தியஸ்தத்தை எதிர்பார்க்கிறீர்களா?**

இல்லை. அது அந்தப் பேச்சுவார்தை காலத்தில்யார் நல்ல மூன்றாம்தரப்பாக, நல்ல மத்தியஸ்தராக இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தில் எமக்கு விருப்பமில்லை. எமக்கு நாமே மத்தியஸ்தம் வகுத்துக்கொள்ளலாம். எனினும் அந்த காலத்தையும் சூழலையும் பொறுத்தும் அதை செய்பவர் யாரென்பதைப் பொறுத்தும் ஒரு ஒழுங்குபடுத்துபவரை நாம் தெரியலாம். சில வேளை அது ஒரு வெளிநாட்டைச் சேர்ந்த ஒழுங்குபடுதுபவராக இருப்பது சிறப்பாக இருக்கலாம். சில வேளைகளில் அவர் ஒரு இலங்கையராக இருப்பது கூட பொருத்தமாக இருக்கும். இதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். எங்களிடம் மத்தியஸ்தர்களுக்கான ஒரு நீண்ட பட்டியலே உண்டு. நிறையப் பேர் எமக்கு தங்களது சேவையை வழங்கத் தாயாராக உள்ளனர். நாம் தெரிவு செய்துகொள்ளலாம்.



**பேச்சுவார்த்தைக்கான தருணம் இதுவல்ல என நீங்கள் கருதினால் புலிகளை இராணுவரீதியாக தோற்கடிப்பதில் தொடர்ந்தும் ஈடுபடுவீர்களா?**

நீங்கள் தோற்கடிப்பது என்று எதைக் கருதுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது.

**அதாவது இராணுவரீதியில்...**

அதில் சந்தேகமேயில்லை.

**இராணுவத்தின் இறுதி இலக்கு எது? புலிகளை தோற்கடிப்பதா அல்லது அவர்களை அடக்கி விட்டு கட்டாயமாக பேச்சுவார்த்தைக்கு கொண்டு வருவதா?**

பல வழிகள் உண்டு. இதற்கெல்லாம் நான் ஆமென்று சொல்லும் போது. அதற்கு வேறு காரணங்களும் உண்டு. எவ்வளவு தூரத்துக்கு புலிகள் எம்மோடு போரிடுகிறார்களோ அவ்வளவுக்கு நாமும் போரிடுவோம். அதாவது அவர்களை தோற்கடிப்பதற்காக போரிடுவோம். ஆனால் ஒருவரை நீங்கள் பகுதியாக தோற்கடிக்கலாம் அல்லது முழுமையாகவும் தோற்கடிக்கலாம். பகுதியாக தோற்கடிப்பதில் கூட பல அளவு மட்டங்கள் உண்டு. இவையெல்லாம் அரசாங்கம் எடுத்துச்செல்ல வேண்டிய தந்திரோபாய முடிவுகளும் கூட.

**சரி, ஆனால் புலிகளைத் தோற்கடிப்பது என்பது மிகவும் கஷ்டமான ஒன்றல்லவா?**


நாம் அவர்களை பகுதியாக தோற்கடித்து இருக்கிறோம். அவர்களிடமிருந்து முழு யாழ்ப்பாண குடா நாட்டையும் கைப்பற்றியுள்ளோம். அத்துடன் அவர்கள் இப்போது அங்கு

—▷16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ''புலிகள் பயங்கரவாதிகளாம்'' அமெரிக்கத் தூதுவர் சொல்கிறார்!

கோமதி

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளின் போதும் அமெரிக்காவின் நலனையும் அது கருத்திற் கொள்ளாமல் விடப் போவதில்லை, என்பதை நாம் அறிவோம்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பதை அறியும் ஆவல் எல்லோரிடமும் உண்டு. உலக நாடுகளின் பிரச்சினைகளை தானே முன்னின்று தீர்த்து வைப்பதில் மிகுந்த கரிசனையான நாடாக தன்னைக் காட்டி வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். உள்நாட்டு (மற்றும் ஏனைய நாடுகளுடனான) பிரச்சினைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நாடுகள் தனது தயவை நாடி வருமென எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அமெரிக்கா அப்படியான சந்தர்ப்பம் வாய்க்கும் போது பயன்படுத்திக்கொள்ளத் தவறுவதில்லை. அல்லது அப்படியான சந்தர்ப்பத்தைத்தானே உருவாக்கவும் செய்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் தனது தேவையை நிறைவேற்றுவதற்காக சண்டியனாகவும் நடந்து கொள்கிறது. அமெரிக்காவின் சண்டித்தனம் உலகமறிந்த விடயம்.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து முதற்தடவையாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவரினால் பேட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. ''லக்பிம'' (11-05-1997) எனும் பத்திரிகையிலே இப்பேட்டி வெளியாகியுள்ளது.

தூதுவர் பீட்டர்பேர்லி (PERTER BURLEIGH), அமெரிக்க ஜனாதிபதியில் கிளின்டனால் இலங்கைக்கும், மாலைத்தீவுக்குமான தூதுவராக 1995 ஏப்ரல் 21ம்திகதியன்று பிரேரிக்கப்பட்டார். 1996 ஜனவரி 19ம் திகதியன்று இவர் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவிடம் தனது நியமனத்தை பாரமளித்தார். 1967ஆம் ஆண்டு இவர் வெளிநாட்டுச் சேவையில் இணைந்து கொண்டார். சேவையில் இணைந்து கொண்ட போது இவரது முதல் நியமனமும் இலங்கையாகவே இருந்தது.

இவர் இலங்கையில் பணிபுரிவதற்காகவே ''சிங்களத்தை'' கற்றிருப்பவர். தற்போது சிங்கள மொழிப் பரிச்சயமுள்ள இவர், கடந்த 25 வருட காலமாக இலங்கையில் ஆங்கிலமொழிச் செல்வாக்கு அதிகரித்திருப்பது குறித்து கவலையடைந்திருக்கிறாராம்!!!

அவரது பேட்டியின் குறிப்பிட்ட சில பகுதிகள் இங்கு பிரசுரமாகிறது.

**★ வடகிழக்கு யுத்தத்தின் தற்போதைய நிலை குறித்து உங்கள் கருத்தென்ன?**

இப்பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காணவேண்டும். இந்த யுத்தத்தினால் அப்பாவி மக்கள் மிகவும் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர். கடந்த வருடம் யாழ் குடாநாட்டை ஸ்ரீலங்கா அரசு மீள கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயம். இலங்கையில் வடக்கு - தெற்கு என்ற பேதமில்லாமல் பொருளாதார, சமூக, தேசிய அக்கறையை உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் வேண்டும்.

**★ நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கிறீர்களா?**

தூதுவராக நியமிக்கப்பட்டதன் பின் அங்கு செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் 1969இலும், 1970இலுமாக மூன்று முறை யாழ் சென்று வந்துள்ளேன்.

**★புலிகள் இயக்கம் தனியான ஈழ நாட்டைக்கோரி நிற்கின்றனர். இது பற்றிய உங்கள் கருத்து எப்படிப்பட்டது?**

அமெரிக்க அரசின் கொள்கை மிகவும் தெளிவானது. நாங்கள் இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மைக்கு ஒத்துழைப்பு வழங்குவதை அறிவித்தல் அவசியம்.

**★அரசின் தீர்வுயோசனைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

அதனை வாசிக்க எனக்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. இது பிரச்சினையைத் தீர்க்க நல்ல ஒரு விடயம் என்பதே அமெரிக்க அரசின் நிலைப்பாடு.

**★மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

ஏனைய நாடுகளிலும் பிரச்சினை தீர மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவம் மிகுந்த பயனளித்துள்ளது. எனவே இருதரப்பும் அதனை உணர வேண்டும்.

**★ புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக கொள்ள நீங்கள் உடன்பாடா?**

அமெரிக்க அரசாங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள ''சர்வதேச பயங்கரவாத நிதர்சனம்'' ("Pattorns of Global Terrorism") எனும் வருடாந்த அறிக்கையின் புதிய வெளியீட்டில், புலிகள் இயக்கமானது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அமைப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**★அமெரிக்கா மட்டுமா புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக பெயர் குறிப்பிட்டுள்ள**

புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்துள்ள விடயத்தை மட்டும் நான் அறிவேன். அந்தத் தடை எந்த அடிப்படையின் கீழானது என்பது எனக்குத் தெரியாது. புலிகள் இயக்கமானது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அமைப்பாக இனங்காண்பதில் சர்வதேச சமூகமும் உடன்படுகின்றன.

**★ பயங்கரவாத நடவடிக்கை தொடர்பாக அமெரிக்கா எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?**

கடந்த வருடம் பயங்கரவாதத்துக்கு எதிராக புதிய நடைமுறை விதிக்கோவைகளை எமது நாட்டில் நிறைவேற்றியுள்ளோம். அந்தச் சட்டத்தின்படி ஏதாவதொரு இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், முதலில் அந்த அமைப்பை பயங்கரவாத இயக்கமாகக் கொள்ளல் அவசியம். தற்போது வோஷிங்டன் அது குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

**★ இந்த ஆய்வின்படி புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக பெயர் குறிப்பிடப்படுமா?**

புலிகள் உட்பட பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்புகள் பல குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அது குறித்து கருத்து கூறுவது உசிதமில்லையென நினைகிறேன். ஆனால் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக கொள்ளப்பட வேண்டுமென்ற வாதத்தை எமது நாட்டில் பலம் வாய்ந்த அமைப்புகள் முன்வைத்து வருகின்றன.

**★ பயங்கரவாத நடவடிக்கைகளை தடுப்பதற்காக இலங்கை அரசு என்ன செய்யலாம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சகல நாடுகளுடனும் ஒத்துழைப்பை கட்டியெழுப்பவேண்டும். சர்வதேச ஒத்துழைப்புடன் கட்டியெழுப்பப்படும் சரியான வேலைத் திட்டமொன்றினாலேயே பயங்கரவாதத்தை ஒழிக்கலாம். ●

# நகர் வீரர் கொலை! பின்னணியில் அமைச்சரின் மகன்?

''சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்'' என்பது பிரபலமான ஒரு வாசகம்.

ஜொயெல்பெரேரின் கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் பிரதிபாதுகாப்பு அமைச்சரின் மகன் லொஹான் ரத்வத்தை, இன்னும் பொலிசாரின் சந்தேகப் பார்வையில் விழாதிருப்பது மேற்கூறிய பிரபல வாசகத்தின் உண்மை நிலை தொடர்பாக கேள்வியெழுப்புகின்றது.

பிரபல நகர்பயிற்றுனரான, பப்புவா நியுகினி நாட்டைச் சேர்ந்த ஜொயெல் பெரே (29), அந்நாட்டின் பிரபல அரசியல் பின்னணியைக் கொண்டவர். அவரது சகோதரர்பப்புவாநியுகினிஅரசாங்கத்தின் பிரதான பொருளாதார ஆலோசகர். அவரது தந்தை ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். இவர், இலங்கையின்பிரபல மொடல்அழகியான வனெசா செல்வரத்தினத்தை மணந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது மனைவி கொள்ளுப்பிட்டி கார்ல்டன் பொழுதுபோக்கு நிலையத்தில் தொழில் புரிந்ததன் காரணமாக, ஜொயெலுக்கும் அந்நிலையத்துடன் அதிக தொடர்பு இருந்தது. இவர்களிருவரும் சூதாட்டத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தனரென்று ஊழியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற தினம் ஜொயெல் பெரே, தனது நண்பனான ஜிடியோனுடன் (23) காலை 4.30 மணியளவில் அந்நிலையத்துக்கு சமூகமளித்துள்ளார். ஜொயெல், (அந்நிலையத்தின் உரிமையாளரின் மகனான பொபி என அழைக்கப்படும் அசோக தசில்வாவுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தார்.) பொபியுடன்கை குலுக்கிய போது ஏற்பட்ட சச்சரவின் காரணமாக பொபியுடன் இருந்த லொஹான் தனது இடுப்பில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஜொயெலை நோக்கிச்



சுட்டுள்ளார். இச் சம்பவம் நடைபெற்றதன்பின் பேர்பியும், லொஹானும் காரில் ஏறித் தப்பியோடிவிட்டனர். சுடப்பட்டு விழுந்து கிடந்த ஜொயெலை, ருச்சினா கான் எனும் பெண் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்று பல நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் கூட பொலிசார் லொஹானை சட்டத்தின் பிடிக்குள் சிக்கவைக்காமல் இருப்பது மேலிடத்துக்கு பயந்தே எனத் தெரியவருகின்றது.

லொஹானினால் சுடப்பாவிக்கப்பட்ட துப்பாக்கி, 9 mm வகையைச் சேர்ந்தது என்றும், அது பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டது என்றும் விசாரணைகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தை தொடர்பாக விருந்த பல குற்றங்கள், சம்பவங்கள் என்பன இதற்கு முதலும் பொலிசாரினால் மூடி மறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது, கண்டி நகரசபைக்கு போட்டியிட்ட ஐ.தே.க. அபேட்சகர் இவரால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விடுதியொன்றில் பொபியுடன் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக அந் நிலையத்தைச் சேர்ந்த காவலாளி தாக்குதலுக்கு உள்ளாகி தனது பார்வையை இழந்தார். இவை தொடர்பாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது ஜொயெலைச் சுட்ட சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளான ஜொயெலின் நண்பர் ஜிடியோன், ருச்சினா கான், விடுதியைச் சேர்ந்த மின் பொறியியலாளர் ஆரியரத்ன ஆகிய பலர், சாட்சி சொல்லத் தயாராக இருக்கும் இச் சந்தர்ப்பத்தில் லொஹானை கைது செய்து விசாரிக்காதது துரதிருஷ்டவசமானதே.

நீதியையும், ஜனநாயகத்தையும் தமது தாரக மந்திரமாகக் கொண்ட அரசாங்கத்தினை, பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரபல அரசியல்வாதியின் மகன் குற்றச்செயல்களில் ஈடுபடும் போது, அதற்கு அனுசரணை வழங்கி கைகட்டி பார்த்து நிற்பது மேலும் பல வன்முறைகளுக்கே இடமளிக்கும்.

பொலிசாரின் நடவடிக்கைகளை நோக்கும்போது மேலிடத்தின் உத்தரவின்பேரில்இச்சம்பவம்மூடி மறைக்கப்பட்டு விடும் என்றே தோன்றுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் புதல்வன் என்ற ஒரே காரணத்துக்காக இவ்விடயம் அசட்டை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ''வன்முறைக் கலாசாரத்தைக் கொண்ட கட்சி ஐ.தே.க'' என்று குற்றம் சாட்டும் பொ.ஐ.மு. அரசாங்கமும், வன்முறைக் கலாசாரத்தில் தான் ஒன்றும் சளைத்ததில்லை என்று தற்போது நிரூபித்து வருகிறது.

ஜனநாயகம், சமாதானம், மனித உரிமைகள் ஆகியவற்றின் காவலனாக பொ.ஐ.மு.வைக் காட்ட முயன்றவர்களது முகத்தில் அது கரிபூசியது தான் துயரம். ●

தர்சி

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 30

## குழந்தைகளின் அச்சம்!

### குழந்தைகளின் பரபரப்புக்கான சில ஏதுக்கள்:

ஒவ்வொரு குழந்தையும் தனக்கென பயங்களையும், கவலைகளையும் கொண்டிருப்பதை எல்லாப் பெற்றோர்களும் அறிவர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளின் மனப்பரபரப்பை அல்லது சஞ்சலத்தை உருவாக்குவதற்கான ஏதுக்கள் எவை என்பதை அறிந்திருப்பதில்லை. அவர்கள் அடிக்கடி இப்படிக் கேட்கிறார்கள்: ''ஏன் எங்கடை பிள்ளை இப்பிடிப் பயப்பிடுகுது... அதுக்கு இப்பிடிப் பயப்பிட ஒரு காரணமும் இல்லையே''. தனது குழந்தையின் கவலையைப் பார்த்த தகப்பனாருக்கு இப்படிச் சொல்லவேண்டியிருந்தது. ''உந்த அலட்டலை நிப்பாட்டு... உனக்குத் தெரியும். நீ சந்தோசமாக இருக்கிறாய் எண்டு'' குழந்தைகளின் பரபரப்பான மனோநிலைக்கு அல்லது சஞ்சலத்திற்கு காரணமாக இருக்கக்கூடிய சில ஏதுக்களைக் குறிப்பிடுவது, இவற்றை எப்படிக் கையாள்வது என்று புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

### கைவிடப்பட்டு விடுவேனோ என்ற பயங்கரமான சஞ்சலம்:

ஒரு குழந்தையின் மிகப்பெரிய பயம், தான் தனது பெற்றோரால் கைவிடப்பட்டு விடுவேனோ, அன்புக்குரியவரல்லவாகி விடுவேனோ என்பதுதான். ஜோன் ஸ்ரேன் பெக் கின் அழகிய வார்த்தைகளில் சொல்வதானால் ''ஒரு குழந்தை எதிர்நோக்கக்கூடிய மிகப்பெரிய பயங்கரம்தான், தான் அன்பு காட்டப்படவில்லை என்பதாகும். புறக்கணிப்பை நரகத்தைப் போல அவர்கள் அச்சத்துடன் உணர்கிறார்கள்.

புறக்கணிப்பினால் கோபமும், கோபத்துடன் ஒரு வகைப்பழி வாங்குமுணர்வும் ஏற்படுகிறது. தான் யாசிக்கும் அன்பு மறுக்கப்பட்ட ஒரு குழந்தை பூனையை அடிப்பதன் மூலமாகத் தனது குற்ற உணர்வை மறைத்துக்கொள்கிறது. இன்னொன்று பணத்தைத் திருடுகிறது. பணம் தன்மீது பிறரை அன்பு செலுத்த வைக்கும் என்று அது நம்புகிறது. இன்னொரு மூன்றாவது குழந்தை உலகத்தையே வெற்றி கொள்கிறது, அதேவேளை எப்போதும் குற்றஉணர்வு, பழிவாங்கல் மேலும் குற்ற உணர்வு என்று தொடர்கிறது.

குழந்தைகள் ஒரு போதும் கைவிடப்பட்டு விடுவோம் என்ற பயத்துக்கு ஆளாகக் கூடாது. வேடிக்கைக்காகவோ கோபத்திலோ ஒரு குழந்தை அவ்வாறான பயத்துக்குள்ளாக்கப்படக்கூடாது. கடைத் தொகுதிகளிலோ சந்தடியான இடங்களிலோ பராக்குப்பார்த்தபடி இழுபடும் குழந்தைகளிடம் ''சரியா, சொன்னபடி என்னுடன் வராவிட்டால், இங்கேயே விட்டிட்டுப் போய்விடுவேன்...'' என்று கத்துகின்ற தாய்மார்களின் குரலை நாம் அடிக்கடி கேட்கிறோம். இத்தகைய ஒரு கூற்று குழந்தைக்கு ஒரு நாளும் மாறாத, தான் கைவிடப்பட்டு விடுவேன் என்கிற அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது தட்டத்தனியனாக இந்த உலகத்தில் கிடப்பது போன்ற ஒரு அச்ச உணர்வுக்கு தூபமிடும் கூற்றாகும். அளவுக்கு மீறி பொழுதை வீணாக்கும் விதத்தில் பராக்குப் பார்த்தபடி நிற்கும் ஒரு குழந்தைக்கு இப்படி வார்த்தைகளால் மிரட்டும் விதத்தில் சொல்வதை விட கையைப் பிடித்து இழுத்துச்செல்வது சிறந்ததாகும்.

தாங்கள் பாடசாலையால் வரும் போது வீட்டில் தாயார் இல்லாது விட்டால் சில குழந்தைகள் பயப்படுகிறார்கள். அவர்களுக்கு, தாம் கைவிடப்பட்டு விட்டோமோ என்பது போன்ற ஒரு உணர்வு ஒரு கணம் தட்டி எழுப்பப்படுகிறது. நாம் முன் பொரு தடவை சொன்னது போல, வீட்டில் ஒரு சிறு தகவல் குறிப்பை எழுதிவைத்து விட்டோ அல்லது ஒரு ஒலிப்பதிவு நாடாவில் சொல்லிவிட்டோ (தாம் செல்லுமிடம் பற்றி) செல்வது நல்லது. ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்தி குழந்தைகளைப்பொறுத்தவரை மிகவும் பிரயோசனமான ஒன்றாகும். பெற்றோரின் அன்பும் பரிவும் கலந்த அமைதியான பேச்சு அவர்களை, தமது தற்காலிக பிரிவை பெரியளவு சஞ்சலம் இன்றி தாங்கிக்கொள்ள உதவுகிறது.

எமது வேலைகள் காரணமாக நாம் பிள்ளைகளைப் பிரிந்து போக வேண்டி ஏற்படும்போது, அந்தப் பிரிவுக்கு முதல் போதியளவு தயாரிப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும், சில பெற்றோருக்கு இப்படி ஒரு செய்தியை - விடுமுறைக்காகவோ, வேலை நிமித்தமோ அல்லது ஏதாவது சமூக விடயம் தொடர்பாகவோ வெளியே போவதை - சொல்லவே முடிவதில்லை. குழந்தைகளின் எதிர்வினைக்குப் பயந்து அவர்கள் இரவிலோ அல்லது பாடசாலையில் இருக்கும் போதோ போய்விடுகிறார்கள். யாராவது உறவினர்களோ, சகோதரியோ இதைப் பிள்ளைகட்கு விளக்க வேண்டும்.

மூன்றுவயதான இரட்டைக் குழந்தைகளின் தாய் ஒருவருக்கு ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. வீட்டில் இதன் காரணமாக ஒரு பதட்ட நிலையும், அச்சமும் நிலவியது. ஆனால் குழந்தைகட்கு எதுவுமே சொல்லப்படவில்லை. சத்திரசிகிச்சை நடக்க இருந்த அன்று, தாயார் கடைத் தெருவுக்குப் பொருட்களை வாங்கச் செல்வது போல காட்டிக்கொள்வதற்காக கையில் ஒரு பையுடன் புறப்பட்டுச்சென்றார். அன்றுபோன அவர் மூன்று வாரங்களாகத் திரும்பி வரவில்லை.

இந்த இடைக்காலத்துள் குழந்தைகள் வாடிவதங்கிப் போய்விட்டார்கள். தகப்பனாரின் எந்த விளக்கமும் அவர்களுக்கு எத்தகைய ஆறுதலையும் தரவில்லை. அவர்கள் உறங்குவதற்காக ஒவ்வொரு நாளும் அழுதார்கள். பகல் முழுவதும் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தாயின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில் குழந்தைகள் முன் கூட்டியே தயார் செய்யப்பட்டால், பிரிவை இலகுவாகவே ஏற்றுக் கொண்டு விடுவார்கள். அர்த்தமுள்ள தயாரிப்பு என்பது சாதாரண வாய்மொழி விளக்கங்களை விடவும் சற்று அதிகமான கவனத்துடன் செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.



இது குழந்தைகளுக்கே உரிய விளையாட்டு மற்றும் பொம்மைகளின் மொழியினூடாக சொல்லப்பட வேண்டும்.

இதைக் கவனியுங்கள்:

வைத்தியசாலைக்கு செல்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் தாயார் தனது மூன்று வயது மகள் ஜீற்றியிடம் தான் வைத்தியசாலைக்குப் போகப்போவது பற்றிக் கூறினாள். குழந்தை அவ்வளவு ஆர்வத்தைக் காட்டவில்லை. ஆனால் தாய் தன் குழந்தை இவ்வளவு அக்கறையற்றிருக்கிறாளே என்று முட்டாள் தனமாக யோசிக்கவில்லை. அவள் சொன்னாள்: ''அம்மா ஆஸ்பத்திரிக்குப் போன விளையாட்டு விளையாடுவோம்''. அவள் இதற்காகவே ஒரு தொகுதி பொம்மைகளைக் கொண்டு வந்தாள். அவை ஒரு வைத்தியர், ஒரு தாதி, மற்றும் குடும்ப உறுப்பினர்களை அது குறிப்பதாகக் கூறப்பட்டது. அந்தப்பொம்மைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அவர்களுக்காகத் தாய் பேசினாள்: ''அம்மா வருத்தம் சுகமாவதற்காக ஆஸ்பத்திரிக்குப் போகிறாள். அவள் வீட்டில் இருக்க மாட்டாள். ஜீற்றி அம்மா எங்கே எங்கே என்று தேடுகிறாள். ஆனால் வீட்டில் அம்மாவைக் காணவில்லை. அவள் அடுப்படியிலும் இல்லை. படுக்கையறையிலும் இல்லை. ஹோலுக்குள் போய்ப் பார்த்தால் அங்கேயும் இல்லை. அவள் ஆஸ்பத்திரியில் ஒரு டொக்ரைப் பார்க்கப் போயிருந்தாள். ஜீற்றி கத்துகிறாள்... எனக்கு அம்மா வேணும்... எனக்கு என்ரை அம்மா வேணும்... ஆனால் அம்மா ஆஸ்பத்திரியில் - தான் சுகம் பெறுவதற்காகப் போய் விட்டார். அம்மாவுக்கு ஜீற்றி மீது நல்ல விருப்பம். இதனால்தான் அவர் ஜீற்றியைக் காணாமல் தவிக்கிறாள். ஜீற்றியும் அம்மாவைக் காணாமல் தவிக்கிறாள். பிறகு அம்மா சுகமாகி வீட்டுக்கு வருகிறாள். ஜீற்றி சந்தோசப்படுகிறாள்.''

இந்தப் பிரிவும் மீள் சேர்க்கையும் சம்பந்தப்பட்ட நாடகம் திரும்பத் திரும்ப தாயாலும் மகளாலும் விளையாடப்படுகின்றன. முதலில் தாய்தான் அதிகமாக பேசினாள். ஆனால் விரைவிலேயே மகளே வேண்டிய பொம்மைகளை எடுத்து வைத்துக்கொண்டு பேசத்தொடங்கினாள். அவள் டொக்டருக்கும் தாதிக்கும் அம்மாவைக் கவனமாகக் கவனிக்கும்படியும் விரைவாகவே அவளை சுகமாக்கி அனுப்பிவிடும்படியும் கூறத்தொடங்கினாள்.

தாய் வைத்தியசாலைக்கு புறப்படும் முன் ஜீற்றி தாயிடம் ஒரு தடவை அந்த விளையாட்டை விளையாடும்படி கேட்டாள். ஜீற்றி சரியாக விளையாடியதுடன் தாயிடம் சொன்னாள். ''அம்மா கவலைப் படாமல் போய்வாங்கோ. நான் நீங்கள் வரும்வரை இங்கே இருக்கிறேன்''

போவதற்கு முன்பாக தாய் பல பயனுள்ள செயல்களைச் செய்தாள். அவள் ஜீற்றிக்கு ஒரு புதிய வீட்டுப் பணியாளை அமர்த்தினாள்; அவள் தனதும் மகளதும் பெரிய படம் ஒன்றை மகளின் அலங்கார மேசை மீது வைத்தாள். அத்துடன் அவளுக்கு ஒலிநாடாவில் ஒரு அன்பான செய்தியையும் பதிவு செய்து வைத்தாள். தவிர்க்க முடியாத தனிமை நேரங்களில் தாயின் படமும், ஒலிநாடா வசனங்களும் தாயின் அருகாக தான் இருப்பதாக ஜீற்றியை உணர வைத்தது.

*(வரும்)*

டொக்டர்.ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில்.அருண்

---

## தலைப்பிடப்படாத கவிதை

உறைந்த பனிச்சோற்றின்
வெண் நுரை மீதமர்ந்திருப்போம்:
குருத்து மணல் சீதளிக்க,
நெடுந்தூரம் வியாபிக்கும் கடுங்குளிர்.

அற்புதமான வைகறை
வெண் நுரைக் கொப்புளம்
உடைந்துருகி வழிந்தோட,
வெறியாய் குதிக்குமதன் மீதிளங்கதிர்கள்.

கூட்டுக் கரத்தையுள்
தாத்தாமார்களின் நரைத்த நிலாக்கள்
நிரை நீக்கி பளீரழகாய் சிரிப்புதிர்க்கும்.

இளங்குயில்கள் கூவிக் கூவிக் கூத்தாடும்
எனதூரின் ஒழுங்கை நெடுக மணமிருக்கும்.

அவற்றின் சிறகுகளை உடைக்கவும்
மண் கெல்லி புதைக்குமான
ஆண் புழுக்களில்லாத
அற்புத காலமொன்றில் வாழ்ந்திருந்தேன் பால்யத்தில்.

வெண் குருத்து தண்டு புதைய
நாற்று வீசி,களை பிடுங்கி,
செக்கலில் மனையேகும் கிராமத்து நங்கணங்கள்.

முள்ளடர்ந்த புதரிருளில்
நுரை கக்கும் அலை மடியில்
உயிரறுந்து மாண்டது மகா துயர்.
யார் மீட்பர் இனியெம் சொர்க்கத்தை?

எனது தேசமே
தொடர்ந்து நீ கூவுக!
வெண்புறாக்கள் மீதமர்ந்து
இனவெறிப்பாடலொன்றை
மெட்டமைத்துக் கூவு நீ.

காற்றுதிரும் நடு நிசியில்
தீகிறதென்னுயிர்க் கவிதை
இவ்வழகிய தீவிற்கினி யார் தருவர் விடுதலை?

ஒட்டமாவடி அறபாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புறக்கணிக்கப்படும் மலையக முஸ்லீம்கள்:

# வேர்களை அரிக்கும் விழுதுகள்!

எம். எச்.எம்.ஜவ்பர்

ஒன்றே முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தில், பெரும் எண்ணிக்கை கொண்ட இந்துக்களும், சொற்ப தொகையான முஸ்லிம்களும் உள்ளடங்கியுள்ளனர். இன்று மலையகம் முழுவதும் சிதறி வாழும் முஸ்லிம் தோட்டத்தொழிலாளர்களுக்கோ, நகர்ப்புறத்தை அண்மித்து வாழும் முஸ்லிம்களுக்கோ விஷேடமான கட்சியோ, தொழிற் சங்கமோ, அமைப்போ இல்லை. இன்று கூட அது பற்றி சிந்திக்கவும் இல்லை. தொழிலாளர் வர்க்கம் எனும் ஒரே குடையின் கீழ் சக தொழிலாளர்களுடன் நெருக்கமுடனும், நேயத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். அன்றைய இலங்கை - இந்திய காங்கிரஸ் தலைவர் அஸீஸாகட்டும், இன்றைய அஷ்ரஃப், அஸீஸ், பீ.ஏ. காதர் முதலான மலையகத் தலைவர்கள் கூட தனியான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை; இவர்களின் மீது. அண்மைக்காலமாக மலையக முஸ்லிம்கள் புறக்கணிப்புக்கும் ஒடுக்குதல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். சக தொழிலாளர்கள் பெறும் அற்ப சொற்ப உதவிகளையும், உரிமைகளையும் பெறுவதில் கூட உரித்தற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த அவலமான புறக்கணிப்பை, ஒடுக்குதல்களை சலனமேயின்றி மேற்கொண்டு வருபவர்கள் அல்லது அவ்வாறு இடம்பெறுவதற்கு உடந்தையாக இருப்பவர்கள் வேறு எவருமில்லை. தமது நேசிப்புக்கும் நட்புக்கும் உரிய சக தோட்டத் தொழிலாளர்களின் வேர்களிலிருந்து உற்பத்தியானவர்களே. நிகழ்ந்து வரும் சில சம்பவங்கள் மலையக முஸ்லிம்களின் இருப்பை கேள்விக்குரிய தாக்குகிறது.

சமூக சேவை அமைப்புகள், அரசியல் கட்சிகள், பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த படித்தவர்களாலேயே இந்த ஒடுக்குதல்களும் புறக்கணிப்புகளும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. கல்வி, தொழில், சமூக இருப்பு என்பவற்றை அடைவதில் மேற்குறித்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்களே கடுமையுடனும் கொடுமையுடனும் நடந்து கொள்கின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் 'மலையக பட்டதாரி மாணவர் ஒன்றியம்'' என்ற அமைப்பு, இந்தக் குறுகிய சிந்தனையுடன் தன்னை வளர்த்துச் செல்கின்றது. அண்மைய ஆண்டுகளில் அனுமதி பெற்ற முஸ்லிம் மாணவர்களை இவர்கள் தமது அமைப்புக்குள் இணைத்துக் கொள்ளவில்லை. இது பற்றி இவ்வமைப்பைச் சேர்ந்தவர்களிடம் உரையாடியபோது ''இது மலையகத் தமிழர்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பு. இதில் முஸ்லிம்களை இணைத்துக் கொள்ள வேண்டியதேவையில்லை.'' என்றனர். இந்தக் குறுகிய, வரட்சியான சிந்தனையுடன் வெளியாகும் புத்திஜீவிகள் நாளைய சமூக உற்பத்தியில் இதே விதமான பாத்திரத்தையே வகிப்பார்கள் என்பதிலும், முஸ்லிம்கள் இவர்களின் புறக்கணிப்புக்கும் உள்ளாகுவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

இது இப்படி இருக்க, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக கண்டியில் இயங்கும் COPE என்ற அரச சார்பற்ற அமைப்பும், முஸ்லிம் மாணவர்களை புறக்கணித்து வருகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டிருந்த மலையகத் தோட்டத் தொழிலாளியின் முஸ்லிம் மாணவன் சகல ஆவணங்களையும் சமர்ப்பித்த போதிலும், ''நீங்கள் முஸ்லிம்கள். உங்களுக்கு உதவ எத்தனையோ முஸ்லிம் அமைப்புகள் உள்ளன. அவற்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்'' என்பதாக ஒரு மலையக பல்கலைக்கழக விரிவுரையாளரும், கண்டியைச் சேர்ந்த ஒரு பாடசாலை அதிபரும் கூறியுள்ளனர்.

ஆனால், இதே அமைப்பில்தான் 50% மான சிங்களச் சகோதரர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர். ''அவர்களுக்கு வழங்கும் போது, ஏன் முஸ்லிம்களுக்கு வழங்கக்கூடாது?'' என்று சம்பந்தப்பட்ட மாணவர் கேள்வி எழுப்புகின்றார்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியிலும் முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம் வலுவடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. ஆரம்ப கட்டங்களில் முஸ்லிம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் அண்மைக்கால அனுமதிகளின் போது முஸ்லிம் மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புறக்கணிப்பு மலையக முஸ்லிம்களின் எதிர்காலத்தில் மேலும் வரட்சியை தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. இது பற்றி இந் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கதைத்தபோது ''முஸ்லிம் மாணவர்களின் விண்ணப்பங்கள் வந்துள்ளனதான். ஆனால் அவைகள் மலையகத்தைச் சேர்ந்தவர்களினுடையது அல்ல.'' என்றார். இது உண்மை அல்ல. மலையக முஸ்லிம் தோட்டத்தொழிலாளிகளின் பிள்ளைகளின் விண்ணப்பங்கள் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது பற்றி விசாரிக்கச் சென்ற பொகவந்தலாவையைச் சேர்ந்த முஸ்லிம் மாணவனுக்கு கிடைத்த பதில் திடுக்கிட வைக்கின்றது. ''இது மலையக மாணவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரி. உங்களுக்கு அட்டாளைச் சேனை கல்வியியற் கல்லூரி உள்ளது. அதற்கு விண்ணப்பியுங்கள்'' என்பதாக முக்கியமான அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இவரது பார்வையில் மலையக மக்கள் என்பது யாரைக் குறிக்கின்றது? மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மட்டுமா? அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரிக்கான வெட்டுப்புள்ளிகளை கல்வியில் பின்தங்கியுள்ள நுவரெலியா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெறுவது மிகவும் கடினமாகும். ஏறக்குறைய ஸ்ரீபாதக் கல்வியியற் கல்லூரிக்கான வெட்டுப்புள்ளிகளை விட ஒரு மடங்கு அதிகமாகும். இதனை நன்கு உணர்ந்த இவ்வதிகாரி இந்தப் பதிலை அளிப்பதினூடாக முஸ்லிம்கள் பற்றிய தனது ஓரங்கட்டும் போக்கை தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கை முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல் கட்சியான (?) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிடமும், பி.ஏ.காதர் முதலானவர்களை உள்ளடக்கிய மலையக மக்கள் முன்னணியுடனும் பேசிய போதிலும் இவ்விடயத்தில் அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.

நீண்ட பிரயத்தனங்களின் பின்னர் பிரதி அமைச்சர் சந்திரசேகரனைச் சந்தித்த போது அவரும் ''மிகவும் போராடிப்பெற்ற இந்தக் கல்வியியற் கல்லூரியில் மலையகத்தவர்களுக்கே முன்னுரிமை உண்டு. நீங்கள் அட்டாளைச் சேனைக்கு விண்ணப்பியுங்கள்'' என்று சாத்தியமற்ற பதிலையே வழங்கியுள்ளார்.

அண்மையில் தோட்டப்புற பகுதிகளுக்கான ஆசிரியர் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகத்தேர்வுக்காக அழைக்கப்பட்ட போதும் இந்தக் குறுகிய சிந்தனையே வெளிப்பட்டது. இந்து சமயம் கற்பிப்பதில் தேர்ச்சி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில் முஸ்லிம்களின் நிலை என்ன? தோட்டப்புற பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களின் நிலை என்ன? இம் மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்தை கற்பிப்பது யார்? க.பொ.த (சா/த)த்தில் சமயப் பாடம் முக்கியமாக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இம் மாணவர்களின் எதிர்காலம் எப்படி அமையும்? ஹட்டன் புனித கெப்ரியல் மகளிர் மகாவித்தியாலயம், டிக்கோயா த.ம.வி, நோர்வூட் த.ம.வி, போர்டைஸ் த.ம.வி போன்ற பல பாடசாலைகளில் இஸ்லாம் பாடம் படிப்பிப்பதற்கு முஸ்லிம் ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் கஸ்டப்படுவதாக அறிய முடிகின்றது.

ஆக, மலையக முஸ்லிம்கள் கல்வி, தொழில், உதவிகள் என்பவற்றைப்பெறுவதில் புத்திஜீவிகள் மட்டத்திலும், அரசியல் மட்டத்திலும் ஓரவஞ்சனையுடன் நடத்தப்படுவது தெளிவாகின்றது.

இலங்கையில் ஒடுக்கு முறைக்கு உட்படும் சமூகம் என்று நோக்கப்படும் மலையக தோட்டத்தொழிலாளர் வர்க்கத்துக்குள், அதே தொழிலாளர் வர்க்கத்திலிருந்து கிளைத்த புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், மலையக முஸ்லிம்கள் மீது புறக்கணிப்பினை மேற்கொள்கின்ற இந்த வேளையில், மலையக முஸ்லிம்கள் சில கேள்விகளை முன்வைக்கின்றனர்.

★ நீங்கள் நம்பியதை, அனுபவித்ததையே நாமும் நம்பினோம். அனுபவித்தோம். எதிர்காலத்தில் மலரவிருக்கும் விடிவு எங்களுக்கும் உரித்தானதாக அமையாதா?

★ ஒரே கூரையின் கீழ் உறவினர்களாய், நண்பர்களாய் வாழ்ந்த எங்களை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் அனுமதிப்பதன் மூலம் உங்களது இலட்சியம், தனித்துவம் பாதிக்கப்படுமாயின் இதே வெட்டுப்புள்ளியுடன் கூடிய அனுமதியை வேறு ஏதாவது கல்வியியற் கல்லூரிக்கு பெற்றுத் தருவீர்களா?

# 22வது இலக்கியச் சந்திப்பு:

# நிறைவான தடத்தை நோக்கி

துடைப்பான்

புகலிட இலக்கியப் பரப்பில் ஜனநாயகக் கருத்துக்களை, அரசியல், இலக்கிய சர்ச்சைகளை விவாதங்களை தொடர்வதற்கு ஆரோக்கியமான ஓர் ஜனநாயக அரங்கை நாம் தேட முயன்றால் ஐரோப்பிய இலக்கிய சந்திப்பு மையத்தைத்தான் நாம் சென்றடைய வேண்டியுள்ளது. மனித நேய நேசிப்புக்களையும், மனித உரிமைகளையும் திறந்த விவாத மனங்களையும் கொண்ட மனிதர்களின் கூட்டமைப்பாக அது எவ்வாறு செயற்பட முடிகின்றது என்பதற்கு 22வது இலக்கிய சந்திப்பு (கார்ல்ஸ்றூக - ஜேர்மன்) ஓர் சான்று. புகலிட தாக்கம், வாழ்வின் மீதான தேடல்களின் மீது நம்பிக்கைகளை இழக்க செய்யும் தருணங்களில் வாழ்வியலின் இருத்தலின் மீது பிடிமானங்களைத் தர முயலும் இச்சந்திப்புக்கள் இக்காலங்களில் இல்லையெனில் மன நோயாளியின் குறிகளோடு துடைப்பானின் வாழ்வு சில வேளைகளில் கீழ் நிலைப்பட்டிருக்கும்.

இன்டர் நெட்டில் தமிழ் - தமிழரின் வருங்கால வளர்ச்சி பற்றி ஜேர்மன் கீல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி நா. கண்ணன் அவர்களின் உரை புதிய தளத்தை விரித்துச் சென்றது. தகவல் வெகுஜன தொடர்புத் துறையில் பின்தங்கி இருக்கும் தமிழை எவ்வாறு இன்டர் நெட்டில் பயன்கொள்ள வைப்பது என்பது பற்றி மிகத்தெளிவாக விளக்கினார்.

தமிழ் எழுத்துக்களைக் கொண்டு இன்டர் நெட்டில் தகவல்களைப் பரிமாறுவதற்கு வடிவமைக்கப்பட்ட வேர்ட் ப்ராஸஸிங் சொஃப்ட் வேரை நேரடியாக இனிமேல் நாம் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை நா. கண்ணன் ஏற்படுத்தினார். உண்மையில் தமிழை இன்டர் நெட்டில் முழுமையாகப் பயன்படுத்தும் வசதி கிடைக்கும் பட்சத்தில், தமிழை விஞ்ஞான மொழியாக்கி விடுவதோடு சகல துறைகளிலும் பிரயோசனம் மிக்க பல காரியங்களைச் செய்ய முடியும்.

எனினும் இன்றைய இன்டர் நெட்டின் சகல வழிகளையும் ஏகாதிபத்திய நாடுகளே தங்கள் கைகளில் வைத்துள்ளன. இவை இவர்களின் கரங்களில் இருந்து மீளும் பட்சத்தில் மாத்திரமே கலை, கலாசார, அரசியல், சமூகப் பண்பாட்டுத் துறையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். இன்டர் நெட் பற்றிய விபரங்களையும் உதவிகளையும் பெற விரும்புவார்கள். நா. கண்ணனோடு தொடர்பு கொள்ளவும், உதவ என்றும் துடிப்பாய் உள்ளார். (இன்டர் நெட்டின் தமிழ் பெயர் இணையம், உபயம் - நா. கண்ணன்)

இச்சந்திப்பில் 'இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையும் தீர்வும்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய ரஞ்சித் லொக்பியர் (ஜெனிவா) இலங்கைத்தீவின் இன முரண்பாட்டிற்குரிய காரணங்களை சமூக - பொருளாதார, அரசியல் வர்க்கக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தார். சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை குழப்பகரமான முறையில் கையாளும் தற்கால ''தேசிய மார்க்சியர்கள்'' போல் அன்றி ரஞ்சித் லோக் பியரின் பார்வை வித்தியாசமாக இருந்தது. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் - சாத்தியக் கூறுகளும் வர்க்கப் போராட்டத்திலே தங்கியுள்ளதாக கூறிய அவர் வர்க்கப் பார்வையை நிராகரித்த எத்தீர்வும் தற்காலிகத் தீர்வாக மாத்திரமே இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். தேசிய வாதம் எப்பொழுதும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உதாசீனம் செய்து, அவை ஒர் குறிப்பிட்ட வர்க்கத்தின் நலன் மேலான அக்கறையோடு செயல்படும் கொடூரமான அதிகார வர்க்கமாக மாறும் அபாய நிலை தோன்றக்கூடும் என்றும் சொன்னார். இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இன்றைய மக்கள் விரோத நடவடிக்கைகளை இனம் காட்டிய ரஞ்சித் தேசியவாத எழுச்சிக்கூடாகப் பிரிந்த பல நாடுகள் இன வெறியின் உச்சத்தில் கோரத் தண்டவம் ஆடியதையும் அங்கு எங்ஙனம் ஏனைய தேசிய இனங்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் பாஸிஸ தன்மைக்கு எவ்வாறு இரையாக்கப்பட்டார்கள் என்பதையும் கூறினார். மார்க்சியம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில் இவ் உரையும், கலந்துரையாடலும் இலக்கிய சந்திப்பின் பிரயோசனத்தை எடுத்துக் காட்டியது.

இச்சந்திப்பின் போது ஏனைய நிகழ்ச்சிகளாக ''மொழிக்கான ஒரு திட்டம் - தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்'' பற்றி நா. கண்ணன் அவர்களும், மேற்கு நாடுகளின் வளர்ச்சி சூழல் பாதிப்பு மூன்றாம் உலக மக்களும் பெண்களும் எனும் விடயம் தொடர்பாக வாணிதாசன் அவர்களும், 20ம் நூற்றாண்டின் கவிதை பற்றி குமரன் அவர்களும், ''சாடிஸம் ஓர் அறிமுகம்'' எனும் தலைப்பில் கலாமோகன் அவர்களும், இன்றைய 'நவீன இலக்கியப்போக்குகள்' பற்றி டில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யாத்திரா ரவீந்திரன் அவர்களும் சமீப கால இலக்கிய வெளியீடுகள், அறிமுகம் விமர்சனமும் பற்றி கருணாகர மூர்த்தி அவர்களும் பேசினார்கள். இச்சந்திப்பில் சிறப்பு அம்சங்களாக தமிழகத்தைச் சேர்ந்த 'கருஞ்சுழி' ஆறுமுகம் அவர்களின் நாட்டுக்கூத்தும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இலக்கிய சந்திப்பு ஒரு பிரயோசனம் மிக்க தடத்தை நோக்கி நகர்வதை 22வது இச்சந்திப்பு இனம் காட்டியது. இவ்வகையில் 22வது இலக்கிய சந்திப்பு ஏற்பாட்டுக் குழுவைப் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பப்பி

_ரேவதி



சின்னண்ணா சொல்லேன் நீ அவுஸ்ரேலியன் நாய் எண்டு சொன்னியே, அது எப்பிடி இருக்கும் எண்டு.

கொஞ்சம் சத்தம் போடாமலுக்கு இருக்கிறியா. நான் கதைச்சுக் கொண்டு இருக்கிறனெல்லே.

ஒருக்கா சொல்லன் சின்னண்ணா.

ஏய். சத்தம் போடாத. பிறகு நான் உனக்கு சொல்லிறன்.

எப்ப சொல்லுவாய்?

கொஞ்சம் பொறடி சாந்தனை அனுப்பிட்டு வாறன்.

இவன் இனி எப்ப வந்து சொல்லுவான். அதுக்குள்ளை ரஞ்சி போயிடுவாளே. நான் நினைச்ச மாதிரியே ரஞ்சி அது பற்றி தெரிஞ்சு கொள்ள முடியேல்லை எண்ட உடனேயே போயிட்டு பிறகு வாறன் எண்டு போயிட்டாள்.

அது எப்படி இருக்கும். ரெக்ஸ்ரெய்ல்ஸ் முதலாளி வீட்டு அலிஸ்ரேஷன் நாயைப் போலை இருக்குமோ இல்லாட்டி, எங்கட பப்பி மாதிரி. சீ, இருக்காது. எனக்கு பப்பியினுடைய உருவம் கண்ணுக்குள்ளை வருது. அதின்ட அளவான சின்ன உருவமும், கறுப்பு நிறமும், கறுப்பு நிறத்தை கலைப்பது போல் சில இடங்களில் இருந்த தேவையில்லாத வெள்ளை நிறமும், மெத்தென்ற அமைதியான சுபாவமும், சீறிப் பாயும் ஆக்ரோஷமான தோற்றமும், பப்பி.........!

அது வெறும் பெயருக்குள் அடங்கி விடக்கூடிய ஒன்றா. ஏன் எனக்கு இப்ப அதை நினைக்கேக்குள்ளை ஒரு நெருடலான வேதனையா இருக்கு. நான் பப்பியை நேசிச்சேனா? சில வேளைகளில பப்பி பற்றின என்ர நினைவை எல்லாம் - காவடி எடுப்பவர்களின் முதுகில் குத்தி நூல் போட்டு இழுப்பார்களே அது போன்ற வேதனையை - அதே போல வேதனையோட இழுபட்டுக் கொண்டிருக்கும் அதின்ரை நினைவை இரத்தம் கொட்டக் கொட்ட பிடுங்கி எறியவேணும் போல கிடக்கு. ஏன் நான் ஒரு காலத்திலை எப்பிடியெல்லாம் பப்பியை வெறுத்தன். இப்ப நினைக்க அழுகைதான் வருகுது.

சின்னண்ணை, சாந்தன் அண்ணையை அலட்டி முடிச்சு அனுப்பிட்டு வாறான். எனக்கு அவனிட்ட அவுஸ்ரேலியன் நாயைப் பற்றி கேட்க வேண்டும் போலில்லை. கொழும்பில் நாய்களுக்கு வைத்தியம் செய்வதற்கென்றே நிறைய டொக்டர்கள் இருக்கிறார்கள் என்றும், சின்னண்ணன் இருந்த வீட்டுக்கு முன்னால் கூட ஒரு டொக்டர் இருந்தாரென்றும் அவன் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

அங்கை நிறைய பேர் காரிலை வருவார்களாம் நாய்களைக் காட்டுவதற்கெண்டு. விதம் விதமான நாய்களெல்லாம் தான் பார்த்தானாம். கட்டையாக, தாரா போல கூட நாய் இருக்காம் எண்டு அண்ணன் சொல்லிச்சுது. அங்கை குழந்தைப் பிள்ளைகளை வளக்கிற மாதிரி நாய்களையும் செல்லமாக வளப்பார்களாம். அதுகளுக்கெண்டு மெத்தை, தனியான சாப்பாட்டு கோப்பை எல்லாம் இருக்காம் எங்கட பப்பிக்கு நாங்கள் சாப்பாடு வைக்கிற மாதிரி மிஞ்சினதெல்லாம் வைக்கிறேல்லையாம். அதுகளுக்கெண்டே தனியாக இறைச்சி, மீன் சமைத்து கொடுப்பார்களாம். இப்பிடி சின்னண்ணை நிறையச் சொல்லிச்சுது.

அவனிட்ட இன்னும் நிறைய கேக்க வேணும் போல இருந்தாலும் இப்ப மனம் இல்லை.

பப்பி மனசுக்குள்ளை நிண்டு நெருடுது. அது எங்களுக்காகவே வாழ்ந்தது. அது எதனுடனும், எதற்காகவும் ஒப்பிடப்பட முடியாதது.

*

பப்பி எப்ப எங்கட வீட்ட வந்தது எண்டோ, எங்கை இருந்து வந்தது எண்டோ எனக்குத் தெரியாது. நானும் இதுவரையும் யாரையும் அந்த விசயத்தை பற்றி கேக்கேல்லை. எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலையெல்லாம் பப்பி எங்கட வீட்டிலை தான் நிக்குது. அப்ப கொஞ்சம் சின்னக் குட்டி மாதிரி ஞாபகம். அம்மாவை பொறுத்தவரையில் அது ஒரு குழந்தைதான். தம்பிக்கு அது ஒரு நண்பன். எங்களிடம் பப்பியைப் பற்றிய உணர்வு வெறுப்பிற்கும் விருப்பிற்கும் இடைப்பட்ட ஒரு உணர்வாகவே இருந்ததாக நான் உணர்கிறேன்.

பப்பியை பொறுத்தமட்டில் தம்பிக்கு யாரும் அடிக்கக் கூடாது. அடிச்சால் அதுக்கு பிடிக்காது. யாராக இருந்தாலும் பாஞ்சு கடிக்க வரும். நாங்கள் விளையாட்டுக்காக அடிச்சாலும் கூட அது உர் எண்டு கொண்டு வரும். அதாலை அவன் குழப்படி செய்தால் கூட யாரும் அடிக்கேலாது. பப்பி அவனுக்காக படுகிற பாட்டைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். அதுக்காகவே நாங்கள் அவனுக்கு அடிக்கிறேல்லை.

தம்பி நேஷரிக்கு போகேக்குள்ளை, பப்பியும் சேர்ந்து போகும். தம்பி துரத்துவான். மற்ற நாயளும் சண்டைக்கு வரும். ஆனா அது உறுமி உறுமி ஏதோ சொல்லிக் கொண்டு போகும். ஆரம்பத்திலைதான் மற்ற நாயள் இப்பிடி, பிறகு மற்ற நாயள் எதுவும் அதிருப்தியை தெரியப் படுத்திறேல்லை. தம்பி வகுப்புக்குள்ள போன உடனே றோட்டுக் கரையிலை கொஞ்ச நேரம் பாத்துக் கொண்டு நிக்கும். பிறகு வீட்டுக்கு வந்திடும்.

வழமையா ஸ்கூலுக்கு போறாக்கள் எல்லாம் போய், வேலைக்கு போற ஆக்கள் எல்லாம் போனாப்பிறகு, வீட்டிலை அம்மா மட்டும் ஏதாவது வேலை செய்து கொண்டு இருப்பா. பப்பி அம்மாவின்ர காலைச் சுத்தி சுத்திக் கொண்டு வரும். அம்மா காலையிலை மிஞ்சினது ஏதாவது இருந்தால் வைப்பா. சாப்பிட்டு போயிடும். முன் மாமர நிழலிலை படுத்திருக்கும், அல்லாட்டி ஊர் சுற்றப் போயிடும். சரியாக 12 மணி ஆகுதெண்டு அதுக்கு எப்பிடித் தெரியுமோ தெரியாது. ஓடிப்போய் தம்பிக்கு பின்னாலை வாலை ஆட்டிக்கொண்டு வரும். அவன் வீட்டுக்கு வந்த உடனேயே பாக்கை எறிஞ்சு போட்டு பப்பியைக் கட்டிப்பிடிச்சு கொஞ்சி, உருண்டு விளையாடுவான். பப்பியும் பாஞ்சு பாஞ்சு அவனுக்கு கிட்டப்போய் மூஞ்சியை நக்கிறதும், பிறகு தூர ஓடிப்போறதுமாய் விளையாடும். தம்பி ஸ்கூலில் இருந்து பப்பிக்கு போடுவதற்கென்றே பிஸ்கற் கொண்டு வருவான். அவனுக்கு பப்பிக்கு கொடுக்கிறதிலை ஒரு சந்தோசம். பப்பிக்கும் அவனிலை நல்ல விருப்பம். அவன் ஒண்டொண்டா போடப்போட அது சாப்பிடும். சிலவேளை ஒண்டைப் போட்டிட்டு மிச்சத்தைக் கையிலை வைச்சுக்கொண்டு கட்டிலுக்கு மேலை ஏறிநிப்பான். அது எட்டி எட்டிப் பார்க்கும். பிறகு பாஞ்சு எடுக்கப் போகும். அவன் ஓடுவான். அது விட்டுத் துரத்திக் கொண்டு போகும். அனேகமா இப்பிடி விளையாட்டு விளையாட்டாத்தான் அதுக்கு குடுத்து முடிப்பான். அவன் வந்து மத்தியான சாப்பாடு சாப்பிடேக்குள்ளையும் பப்பி பக்கத்திலை இருந்து பாத்துக் கொண்டே நிக்கும். அவன் அதிலையும் சாப்பிடச் சாப்பிடக் கொஞ்சம் வைப்பான். சாப்பிட்ட பிறகு மீதியையும் வைப்பான். அம்மா ஆரம்பத்திலை அவன் சாப்பிடாம கள்ளப்படுத்திறான் எண்டு பேசினாலும், பிறகு பேசிறதில்லை.

அவனுக்கும் அது விளையாட்டு மாதிரி. பப்பிக்கு ஒரு பிடி வைக்கிறது. பிறகு தான் ஒரு பிடி சாப்பிடுறது. அம்மா இப்படியாவது அவன் சாப்பிட்டும் என்று பேசாமல் இருந்து விடுவா. அதுக்குப்பிறகு அவன் விளையாடப்போனால் என்ன, என்ன செய்யப் போனால் என்ன அவனுக்கு பின்னாலையே பப்பியும் திரியும்.

ஆனா அதுக்கெண்டு ஒழுங்குமுறை ஏதாவது இருக்கோ என்னவோ தெரியாது. நாங்கள் வரேக்குள்ளையும் வாசலிலை வந்து வாலை ஆட்டிக் கொண்டு நிக்கும். இப்ப நினைச்சுப் பாக்கேக்க ஒரு மகிழ்ச்சியும் தான் அது அப்பிடி நிக்கிறது. நாங்கள் களைச்சுப்போய் வரேக்குள்ளை சந்தோஷமா வரவேற்கிறதுக்கு அது எப்பவுமே தயாராயிருக்கும். வந்து காலை நக்கும். எல்லாட்டி சட்டையை பிடிச்சு இழுக்கும். இப்பிடி ஏதாவது செய்து கொண்டு எங்களுக்குப் பின்னாலை வரும். அது அப்பிடியெல்லாம் செய்யேக்குள்ளை, நீங்கள் வருவது எனக்கு பெரிய சந்தோஷம் எண்ட மாதிரி இருக்கும். பழையபடி நாங்கள் எல்லாரும் சாப்பிட்டு முடிந்து அம்மா மீதம் வைக்கும் வரைக்கும் அது அமைதியா காத்திருக்கும். நாங்கள் ஒரு உயிருள்ள ஜீவன் சாப்பிடாம இருக்கே எண்ட எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமல் ஆறுதலாய் சாப்பிட்டு எழுந்ததை நினைக்க இப்ப வேதனையா இருக்கு. திரும்பவும் தம்பிக்கு பின்னாலையோ அல்லாட்டி மாமர நிழலிலையோ அல்லாட்டி அம்மாவுக்கு பக்கத்திலை திரியும்.

அதைப் பொறுத்தவரை ஊர்ச்சண்டை எதுக்குமே அது போறதில்லை. அதால அது சோம்பேறி என்பதல்ல. அது தனக்குள் ஏதோ ஒரு ஒழுங்கு முறை வைத்திருந்தது போல் தான் உள்ளது. எங்கள் வீட்டிற்கு பின்னால் வெறும் புல்லுடன் முள்பற்றையுமான காணி உள்ளது. அதோட எங்கள் ஊரைச் சுற்றியும் வடக்கும் மேற்குமாக வயல் இருக்கு. அதால முயல் அடிக்கிறதுக்கு வருவாங்கள். ஊர்நாயெல்லாம் சேர்ந்து கத்தி ஊரை அட்டகாசப்படுத்தும். செத்துப் போகும் முயலின்ர ரத்தம் எங்கையாவது கொட்டியிருந்தால் அதையும் நக்கிக் கொண்டு உற்சாகமாக கத்திக் கொண்டு போகுங்கள். பப்பி முதலில் என்னவெண்டு தெரியாமல் குரைத்துக் கொண்டு றோட்டுக்குப் போகும். பிறகு இன்னதுதான் எண்டு தெரிந்துவிட்டால் அமைதியாகிவிடும். அதற்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது போல. அது எங்களைப் போல சைவக்காரனும் தான்.

ஆனால் வேறை ஊர் நாய் வந்தாலோ எல்லாத்தோடையும் சேர்ந்து தானும் ஆக்ரோஷமாக கத்திக் கொண்டு நிக்கும். எங்கட பப்பியின்ர ரோசத்தை அப்பதான் பாக்கலாம். அப்ப அது கத்திற கத்தைப் பாக்க எனக்கே பயமாயிருக்கும். அந்த நாயை ஊர் எல்லையிலை கொண்டுபோய் விட்டிட்டுத்தான் அது அடங்கும். அதோட பாம்பைக் கண்டாலும் பெரிசாக கத்தும். சாரைப் பாம்பெண்டால் எங்கட வளவுக்கு வெளியிலை எப்பிடியாவது துரத்துறதோட நிண்டுவிடும். வேறை ஏதாவது பாம்பெண்டால் பெரிசாக் கத்தி எல்லாரையும் கூப்பிட்டுவிடும். அதை எல்லாரும் அடிச்சுச் சாக்கொல்லும் மட்டும் அது கத்திக் கொண்டேயிருக்கும்.

பப்பியைப் பற்றி நினைக்கேக்கை எல்லாம் முதல்ல ஞாபகம் வர்றது அந்த மத்தியான வேளை தான். அண்டைக்கு விரதநாள். எல்லாருமே பப்பியை மறந்து சாப்பிட்டாச்சு. பப்பியும் எங்கையோ போயிட்டுது. தம்பி கூட மறந்துபோய் சாப்பிட்டிட்டான். அம்மா பின்னேர நித்திரைக்காக முன் கட்டிலில் படுத்திருந்தா. பப்பி ஒரு ரண்டரை மூண்டு மணி அளவிலை வீட்டுக்கு வந்திருக்கும். சரியான பசியாய் இருந்திருக்கு. அம்மாவின்ர சாறியைப் பிடிச்சு இழுத்து அனுங்கிக் கொண்டு நிண்டுது. அம்மாவுக்கு முதல்லை என்னெண்டு விளங்கேல்லை. பப்பி போ அங்காலை எண்டு பேசினா. அது பிறகும் நிண்டு சாறியை பிடிச்சு இழுத்துக் கொண்டு இருந்திச்சுது. அம்மா எழும்பிப் போக, குசினி வாசல்லை நிண்டு அனுங்கிக் கொண்டு நிண்டிச்சுது. அதுக்குப் பிறகுதான் அம்மாவுக்கு ஞாபகம் வந்திச்சுது பப்பிக்கு சாப்பாடு வைக்கேல்லை எண்டு. அம்மா சாப்பாட்டை எடுத்து வைக்க, பெரிசா நன்றி தெரிவிக்கிற மாதிரி வாலை ஆட்டிக் கொண்டு சாப்பிட்டிச்சுது. அது களவெடுத்தும் சாப்பிட மாட்டுது. வேற வீட்டிலையும் சாப்பிடாது. நாங்கள் வைச்சாத்தான் சாப்பிடும்.

எப்படி அது ஒரு ஒழுங்கான பழக்கத்துக்குள்ளை வந்தது எண்டதை நினைக்க ஆச்சரியமா இருக்கும். ஒருவேளை அப்பா போட்ட அடியிலை தான் அது அப்பிடி ஒழுங்குக்கு வந்திருக்குமோ? அப்பா எண்டால் பப்பிக்கு சரியான பயம். நில் எண்டால் சொன்ன இடத்திலை நிக்கும். பத்தாததற்கு நாங்களும் எங்கட வீரத்தையும், கோபத்தையும் அதிலை தானே காட்டேலும். அதாலை எங்களுக்கும் அது கொஞ்சம் பயம். அம்மாவோ தம்பியோ வெருட்டினால் குழந்தைப்பிள்ளை மாதிரி பாஞ்சு பாஞ்சு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும்.

எனக்கெப்பிடி பப்பியிலை அனுதாபமும், என்னவெண்டு தெரியாத ஒரு உறவும் வந்திச்சு எண்டு தெரியாது. இப்பிடியா பப்பி எங்களுக்கு நல்ல பிள்ளையா இருந்ததாலையோ தெரியாது. பிறகெல்லாம், பப்பியை கிட்ட எடுக்க மாட்டன், ஆனா எப்பவாவது முதுகிலை தடவிப் போட்டுப் போவன். எனக்குப் பொழுது போகாத நேரத்திலை பப்பிக்கு எதையாவது எறிஞ்சு விளையாட்டுக் காட்டிக் கொண்டு திரிவன். அதெல்லாம் எப்பவாவதுதான். மிச்ச நேரம் நான் பப்பியை கணக்கெடுக்கிறதேயில்லை. நானென்ன அம்மாவையும் தம்பியையும் தவிர மற்ற ஒருத்தரும் பப்பி எங்கட வீட்டிலை இருக்கிற ஒரு உயிருள்ள ஜீவன் எண்டிறதையே கணக்கெடுக்கிறேல்லை. ஆனா அது எப்பவும் எங்களுக்குப் பின்னாலை எங்களை காவல் காத்துக் கொண்டே இருந்திச்சு.

அப்பா இறந்த நாட்கள் எல்லாம் மிகவும் பயங்கரமானவை. ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்த நாட்கள். எங்கும் வெளிக்கிட முடியாது. எங்கள் அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்குக் கூட மிகவும் சிரமப்பட்ட நாட்கள். முதன் முதலாக இவ்வுலகில் பயப்படுவதற்கு ஆவிகளைத் தவிர மிகவும் மோசமான பிராணிகள் வாழ்ந்து கொண்டிருப்பதாக உணர்ந்த நாட்கள். முதன் முதலாக நான் அச்சிறு வயதில் காக்கி உடை மனிதர்களுக்கு பயந்தோடிய நாட்கள். பிறகெல்லாம் அம்மா அநேகமா குசினி வாசல்லை அல்லாட்டி, பின் வாசல்லை அழுதுகொண்டே இருப்பா. அப்பெல்லாம் அது அம்மாவுக்குப் பக்கத்திலை அம்மாவைப் பாத்துக்கொண்டோ அல்லாட்டி அரைகுறையா கண்ணை மூடிக்கொண்டோ இருக்கும். அம்மா அழுறதைப் பாத்தோ அல்லாட்டி அதுவும் அப்பாவை நினைச்சோ தெரியாது அழும். நாங்கள் கூட சிலவேளை அம்மா அழுதா பக்கத்திலை வந்திருந்து அழாதேங்கோ எண்டு சொல்லுவம். பிறகு எங்கட வேலையா போயிடுவம். ஆனா பப்பி அப்பிடியில்லை. அநேகமா அப்பா செத்தாப்பிறகு பப்பி எப்பவும் அம்மாவுக்குப் பின்னாலை திரியும். நான் கூட சிலவேளை நினைச்சுப் பாக்கிறது அப்பான்ர ஆவி பப்பிக்குள்ளை இருக்கோ தெரியாது எண்டு.

ஒரு நாள் நாங்கள் எல்லாரும் விளையாடப் போயிட்டு வாறம். அம்மா குசினி வாசல்லை அழுது கொண்டு இருந்தவ, எங்களைக் கண்டிட்டு தெரியாத மாதிரி துடைச்சிட்டு இருந்தா. ஆனா நான் பப்பியைப் பாத்து தெரிஞ்சுகொண்டன். அம்மா எவ்வளவு நேரம் அழுது கொண்டு இருந்திருப்பா எண்டு. அதின்ர கண்ணிலை இருந்து மூன்று வழியா வழிஞ்ச கண்ணீரும், கலங்கிப் போயிருக்கிற கண்ணும் அது அம்மாவைப் பாத்துக் கொண்டு இருந்த பார்வையும் எல்லாமே எனக்கு

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனசுக்குள்ளை பதிஞ்சு போச்சு. அந்தண்டு நான் கூட அதுக்குப் பிறகு அப்பாவை நினைச்சு அழுதன். சிலவேளை பப்பி தன்பாட்டிலையும் அழுது கொண்டு மாமர நிழலிலை படுத்திருக்கும். வழமையா நாயெண்டாலே பயந்து ஓடிற நான். அதின்ர பார்வையிலை மட்டும் எப்பிடி ஏதோவொரு ஈரத்தையும் உறவையும் கண்டேன் எண்டு எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையிலை அப்பாவுக்குப் பிறகு எங்களுக்கு காவலா இருந்த என்னொரு ஜீவன்.

✸

ஆரம்ப காலங்களிலை சிலோன் ஆமி ஊருக்குள்ளை எல்லாம் வருவாங்கள். அப்பெல்லாம் பப்பியும் ஊர்நாயளும் எல்லாருக்கும் கத்தியே அறியப்படுத்தும். அவங்கள் துவக்குப் பிடியாலை அடிப்பாங்கள். அடியை வேண்டிக் கொண்டு கத்திக் கொண்டு ஓடும். நாயள் கத்தினதை வைத்தே ஆமி எந்த இடத்திலை வாறாங்கள் எண்டதை கண்டு பிடிக்கலாம். தப்பி ஓடிற ஆக்களும் ஓடலாம்.

ஆனா அதுக்குப் பிறகு இந்தியனாமி வந்து சண்டை தொடங்கினாப்பிறகு எங்கட வீட்டுக்கு ஒரு பத்து வீட்டு தள்ளி தொடர்ச்சியா ஷெல் வந்து விழும் நாங்களெல்லாம் விழுந்து படுக்கிறதும், புகைக்கூட்டுக்குள்ளை ஓடிப்போய் ஒளியிறதும், தம்பி பயந்து கத்திறதும் தொடர்ந்து கனநாளா நடந்திச்சுது.

அப்பெல்லாம் பப்பி யாருக்கும் யாரும் காவல் குடுக்க முடியாதெண்டு தெரிஞ்சோ என்னவோ தெரியாது, எங்களோடையோ அல்லது தனியாவோ மரத்துக்கு கீழை பயந்து ஒதுங்கியோ அல்லது எங்கையாவது தூர இடத்திற்கு ஓடியோ போயிடும். அநேகமா பப்பி கூடுதலான பயபீதியாலை நடுங்கிக் கொண்டு அழுது கொண்டு திரிந்தது அந்தக் காலங்கள் தான்.

அமைதியான நேரங்களிலை எங்கையும் போகாம எங்கட காலைச் சுத்திக் கொண்டே நிக்கும். இது வெறும் பாம்பைப் பிடிக்கிற மாதிரியில்லை. இது என்ட கையையும் எல்லாருடைய கையையும் மீறின விசயம் எண்டதை எப்பிடி பப்பி விளங்கிக் கொண்டிச்சுது எண்டு எனக்குத் தெரியாது. ஆரம்பத்திலை ஆமி வந்தா குலைத்துக் கரைச்சல் கொடுத்து அட்டகாசப்படுத்துகிற பப்பி, பிறகெல்லாம் வெறும் வாழை மரங்களுக்குப் பின்னாலை ஒழியவும் மூச்சு விடாமல் இருக்கவும் எப்படியோ கற்றுக்கொண்டது. ஷெல் வந்து விழும் பொழுது எங்கையாவது ஒழியவும், மரம் தட்டினால் கூட குண்டென்று பயந்து அய் என்று கத்தவும் பழகிக் கொண்டது.

பிறகெல்லாம் நாங்கள் வீட்டையே இருக்க முடியாதெண்டு அகதியா மாமியின்ர ஊருக்குப் போனதும், பப்பி எப்பிடியோ அந்த வீட்டை தேடி வந்தது. தம்பியும் அதைக் கண்ட உடனேயே ஓடிப்போய் தூக்கிக் கொஞ்சிக் கொண்டு வந்தான். அம்மா சாப்பாட்டோட ஓடி வந்தா அது சாப்பிட்டு கொஞ்ச நேரம் இருந்திட்டு போயிட்டுது. பிரச்சினை குறைவா இருக்கிற நேரத்திலை நாங்கள் வீட்டைப்பாக்கப் போகேக்குள்ளையெல்லாம் பப்பி எங்கட முத்தத்திலை இருந்து அழுதுகொண்டிருக்கும். வீடு வெறிச்சோடிக் காடுவத்திக் கிடக்கிற தோற்றமும், முன்வாசல்லை பப்பி மட்டுமே அழுது கொண்டிருக்கிறதும் மனசை என்னவோ செய்யும். சிலவேளை எங்களை அறியாமலே அழுகையும் வரும். பப்பியை முதுகிலை தடவி விட்டிட்டு, கொண்டு போன சாப்பாட்டையும் பப்பிக்கு வைச்சிட்டு, வீட்டை சுத்திப் பாத்திட்டு ஏதாவது எடுத்துக் கொண்டு அவசர அவசரமா போயிடுவம். பப்பி இரவோ அல்லாட்டி எப்ப வரக்கூடியதாயிருக்கோ அப்ப கிட்டத்தட்ட எட்டொம்பது கிலோ மீற்றர் தள்ளி நாங்கள் அகதியா இருந்த வீட்டுக்கு வரும். அம்மா அதைக் கண்டவுடனேயே குசினிக்குள் ஓடுவா ஏதாவது சாப்பாடு இருக்கா எண்டு பாக்க. வைக்கிற ஏதாவது சாப்பாட்டை சாப்பிட்டு கொஞ்சநேரம் இருந்திட்டு வந்திடும். ஏதோ இந்த வீட்டைப் பாதுகாக்கிற பொறுப்பு என்னுடையது எண்ட மாதிரி.

✸

நாங்கள் கடைசியா ஆமி யாழ்ப்பாணம் வந்திட்டான் என்றவுடனே வெளிக்கிட்டு வரேக்குள்ளை மட்டும் பப்பியைக் கொண்டு வரேல்லாமல் போயிட்டுது. எதை எடுக்கிறது எதை விடுறது என்று கூட யோசிக்க நேரமில்லாமலுக்கு நாங்கள் ஓட்டமும் நடையுமா வரேக்கை பப்பியும் எங்களோடை சேர்ந்து வந்திது. ஆனா கடற்கரை மட்டும் தான் அதாலை வரக்கூடியதா இருந்திச்சுது. வள்ளத்திலை நாங்கள் ஏறக்குள்ளை எப்பிடி பப்பியையும் ஏத்த முடியும்.

மனிசர்களே சா பற்றின பயத்தோடை பேய் அறைஞ்சமாதிரி இருக்க. எப்படியாவது தப்பினால் போதும் என்று பயந்து கொண்டு இருக்கும் பொழுது, பப்பியை ஏத்த முடியாமல் போயிட்டுது. ஒருவகையில் ஏத்த முடியாமல் போயிட்டுது என்று சொல்லிக் கொண்டாலும், நாங்கள் எங்களைப் பாதுக்காக்கிற அவசரத்திலை பப்பியை கவனத்திலெடுக்கவே இல்லை. ஆனா அது வள்ளத்துக்கு முன்னாலை நிண்டு அழுததும், அங்கு நிண்டவங்கள் கல்லெறிஞ்சு பப்பியை துரத்தினதும், அது கல்லெறி வேண்டிக் கொண்டே தூர ஓடிப்போய்ச்சுது. எனக்கு அழுகையும் வந்தது. ஆனா என்ன செய்ய முடியும். இது கூட எங்கட் கைக்கு அப்பாற்பட்டதுதானே. எங்களுக்கு கூட ஏற இடமில்லாமல் போயிருந்தால் எப்படி இருந்திருக்கும்.

அப்ப தான் கடைசியா பப்பியை பாத்தது. அது இப்ப எப்பிடி இருக்குமோ அல்லாட்டி செத்துப்போயிருக்குமோ தெரியாது. ஆனா எனக்கு அற்ப ஆசை அது நாங்கள் போகும் மட்டும் உயிரோட இருக்க வேணும் எண்டு. எங்களை விட்டிட்டு தனிய ஒருநாளும் இருக்காத பப்பி, நாங்கள் ஓடின இடமெல்லாம் அதுவும் சேர்ந்து வந்த பப்பி இப்ப மட்டும் வரேலாமல் போயிட்டுது. அது தன்ர காலாலை தானே எங்களோடை வந்திச்சுது. ஆனா கடலை மட்டும் அதாலை கடக்கேலாமல் போயிட்டுது. நாங்கள் கூட அதுக்கு ஒருமுறை உதவி செய்யாமல் போயிட்டம்.

அதுக்கு நாங்கள் இந்த உலகத்தின்ர எந்த மூலையிலை இருந்தாலும் கண்டுபிடிக்க முடியும். அப்ப கூட அது கடலுக்காலை எங்களிட்டை வர முயற்சி செய்து செத்துப்போயிருக்குமோ? இல்லை. ஒரு நாளும் அப்படி நடந்திருக்காது. பப்பி எல்லாத்தையும் யோசிச்சு செய்யிறது. கடலுக் குள்ளாலை வரேலாது எண்டிறது மட்டும் எப்பிடி அதுக்கு விளங்காமல் போயிருக்கும். அல்லாட்டி, ஆனையிறவு ஆமியின்ர பக்கத்தாலை வந்து அவங்கள் சுட்டு செத்திருக்குமோ. அவங்கள் சிலவேளை நினைச்சிருப்பாங்கள் யாழ்ப்பாணத்து நாயளும் தங்களுக்கு குண்டு கொண்டு வரலாம் எண்டு. என்ன நடந்திருக்கும் எண்டு என்னாலை எப்பிடித்தான் வெறுமனே சிந்திச்சு கண்டு பிடிக்க முடியும். சாப்பாடில்லாமல் செத்திருக்கவும் கூடும். அப்பிடி ஒண்டு நடக்கிறதை நான் விரும்பேல்லை. அப்படி சொல்லிறதை விட பப்பிக்கு எதுவும் நடந்திருக்கலாம் எண்டிறதை என்னாலை ஏற்றுக்கொள்ளேலாது எண்டு சொல்லாம். சிலவேளையிலை எங்கட வீட்டிலையே அழுது கொண்டு இருக்குமோ? எனக்குத் தெரியாது.

என்னுடைய கனவிலை அது கடற்கரையோரத்திலை அனாதையா செத்துக்கிடக்கிற மாதிரி ஒரு பிரமை. அது உண்மை ஆகக்கூடாது எண்டே இல்லாத கடவுளை எல்லாம் வேண்டிட்டன். அப்பிடி ஒண்டை ஏற்றுக்கொள்ள முடியாமலுக்கே எத்தினையோ நாள் அழுதிட்டன். அம்மாவோ அல்லாட்டி வேறு யாரெண்டாலும் ஏன் அழுகிறாய் எண்டு கேட்டால், பப்பியை நினைச்சு அழுறன் எண்டு எப்பிடி சொல்ல முடியும். எனக்கு கிடைத்த சாட்டெல்லாம் அப்பா இருந்திருந்தா நாங்கள் றோட்டோரம் அனாதையளாய் கிடக்க வேண்டி இருந்திருக்காது எண்டதுதான். அம்மாவுக்கு அப்பா பற்றின என்ன கதை கதைச்சாலும் கண்ணுக்குள்ள முட்டிக் கொண்டு வந்திடும். அதுக்கென்ன செய்யிறதெண்டோ அல்லாட்டி எல்லாம் தலைவிதி எண்டோ சொல்லி அழாதை கொஞ்ச நாளிலை எல்லாம் சரிவந்திடும் வீட்டுக்கு போகலாம் எண்டு சொல்லுவா. நானும் பிறகு எங்கையாவது எழும்பி போயிடுவன். எனக்குத் தெரியும் இது அப்பாவாலை இல்லை பாட்டாவாலையும் தடுக்க முடியாத ஒண்டெண்டு.

நாங்கள் இங்க சின்ன கொட்டில் வீட்டிலை கஷ்டப்படுறது பப்பிக்கு எப்படி தெரியும். எங்கட வாழ்க்கை அப்பிடிதானே.

சிலவேளையிலை எதேச்சையாக பாக்கேக் குள்ளை பப்பி முன்னுக்கு நிக்கிறமாதிரி இருக்கு. எத்தினை நாள் கற்பனை செய்தி ருப்பன் பப்பி வந்திட்டுது, அம்மாவின்ர காலைச் சுத்திக் கொண்டு நிக்குது எண்டு. எல்லாம் வெறும் கனவுதான். இப்ப கூட பப்பி ஓடி வராதோ எண்டு ஏக்கமா இருக்குது.

எல்லாம்.............!?





*தரமான சிங்களப் படங்களிலும் பாலியல் காட்சிகள்*

## யதார்த்தமா? வியாபாரமா?

சிங்களத் திரைப்படத்துறைக்கு 50 ஆண்டுகள் பூர்த்தியாகியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிங்களத் திரைப்படங்களில் பெண்கள் பற்றிய பிரதிபலிப்புகள், உள்வாங்கல்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது வினாவுக்குரியது. சிங்களத் திரைப்படங்களில் பெண்கள் யதார்த்தமாக சித்திரிக்கப்படுகின்ற போதும் அவர்களது இருப்பு அங்கு வினாவுக்குரியதாகவே உள்ளது. சுவர்ணா மல்லவாராச்சி இது தொடர்பாக குறிப்பிடுகையில் ''நான் நடித்த கதாபாத்திரங்களை நோக்கின், அப்பாத்திரங்களில் நான் ஏழ்மையான துன்பப்படும் பெண்ணாகவே வாழ்ந்திருக்கின்றேன். இதன் மூலம் இலங்கைப் பெண்கள் பெற்றுக் கொண்ட துணிபு, முயற்சி என்ன என்பது இன்னும் எனக்கு பிரச்சினையே. எனவே தற்போது இருக்கும் வரையறையிலிருந்து மீட்சி அவசியம்'' என்கிறார். (தினமின மார்ச் 8 )

சமீப காலத்தில் வெளிவந்த தரமான திரைப் படங்களான ''துன்வெனி எஹ'', ''கெலி மண்டல'', ''சுரபிதென'', ''செயிலம'', ''மீஹ ரக்கா'', ''லொக்கு துவ'', ''களனி பாலம'', ''யசோமா'' போன்ற ஐந்தாவது மண்டல திரைப் படங்கள் பெண்ணை மையமாகக் கொண்ட திரைக்கதையை கொண்டனவாக இருக்கின்றன. பெண்களின் துன்பநிலை, பாலியல் ரீதியான சுரண்டல் தன்மை, மோசமான சூழ்நிலையில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், தனது இருப்பினை பாதுகாக்க மேற்கொள்ளும் போராட்டங்கள் என்பனவற்றையே இத்திரைப் படங்கள் பெரும்பாலும் சித்திரிக்கின்றன. மேற் கூறிய திரைப்படங்கள் இவ்வாறு பெண்களின் பிரச்சினைகளை சித்திரிக்கின்றபோதிலும், குறிப்பிட்ட பெண்கள் தொடர்பான பாலியல் வரையறையை மீறும் முயற்சிகள் இத்திரைப் படங்களில் காணக்கிடைக்காமை குறிப் பிடத்தக்கது.

அதேபோல், பெண்களின் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் அதேவேளை, பாலியல் சார்ந்த காட்சியமைப்புகள் இப்படங்களில் விரவிக் கிடக்கின்றன என்பது பலரது அபிப்பிராயமாகும். மீஹரக்கா, பாலமயட்ட, செயிலம போன்றத் திரைப்படங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். பொதுவாக பெண்களின் பிரச்சினைகளை வலியுறுத்தும் போது கூடவே பாலியல் ரீதியான காட்சியமைப்புகளும் சித்திரிக்கப்படுகின்றன. இந்த தந்திரம் யதார்த்தம் என்ற ரீதியிலா அல்லது வியாபாரம் என்ற ரீதியிலா பயன்படுத்தப்படுகின்றது? மேலும்,

இப்படங்களில் பாத்திரத்தின் நடை, உடை மூலமும் பாலியல் தன்மைகள் வெளிப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. பாலமயட்ட, செயிலம போன்ற திரைப்படங்களில் இத்தன்மைகளைக் காணலாம்.

அத்துடன், என்னதான் பெண் மையத் திரைப்படமாகவிருப்பினும் பெரும்பாலான படங்கள் ஆண்களாலேயே இயக்கப்படுகின்றன. படம் பிடிக்கப்படுகின்றன.

இதனாலேயே ஒரு பெண்ணின் நடைகூட கெமராக் கோணத்தில் ரசிக்கப்பட்டு திரையில் எம்மை வந்தடைகின்றது.

கீதா குமாரசிங்கவின் கருத்துப்படி ''பெண்கள் பற்றி தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் பலவற்றில் பெண், இயக்குனர்களின் விற்பனைப் பொருளானாள். இதைத் தவிர வேறெதுவும் இடம் பெறவில்லை. நிர்வாணக் காட்சிகளைக் கூட இயக்குனர்கள் தமது படங்களில் புகுத்தியது, வியாபார உத்தியினாலாகும். உண்மையில் 'பெண்' எமது நாட்டு திரைப்படத்துறையில் விற்பனைப் பண்டமாக மாற்றப்பட்டிருக் கிறாள்'' என்கிறார்.

துன்வெனி எஹ, கெலிமண்டல, சுரபிதென, களனி பாலம, செயிலம, மீஹரக்கா, லொக்கு துவ, யசோமா போன்ற திரைப் படங்களின் திரைக்கதை பாலியலை சார்ந்ததாகவே இருக்கின்றன. எமது நாட்டு தொலைக்காட்சி நாடகங்களுக்கு குடும்பக் கதைக் கருவை விட்டால் வேறில்லை என தர்மசேன பத்திராஜா கூறியதைப்போல், நம் ஐந்தாம் மண்டல திரைப்படங் களுக்கு பாலியலை சார்ந்த கதைக் கருவை விட்டால் வேறு கதை இல்லை போலும். வர்த்தக திரைப்படங்களை விட முற்றிலும் வேறுபட்ட தன்மை கொண்ட இத்திரைப்படங்களில் கூட இந்நிலை காணப்படுவது மிகவும் சிந்திப்பதற் குரியதே.

ஆண் சிந்தனை வயப்பட்ட தன்மையும், நோக்கும் சிறிது சிறிதாக மருவி வரும் இக்கால கட்டத்தில், சமூகத்தினைப் பிரதிபலிக்கும் திரைப்படங்கள் இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதிருப்பதும் வேதனைக்குரியதே. இக் கட்டுரையின் ஆரம்பத்திலிருந்தே பட்டிய லிட்டுக்கொண்டு வரும் திரைப்படங்கள், இலங் கையின் தரமான படங்கள் வரிசையில் உள்ள, விமர்சகர்களால் விமர்சனத்துக்குட்பட்ட படங்க ளாக உள்ளன. ஆனால் இவை அனைத்திலும் காணப்படும் போக்கு, குடும்ப அமைப்பின் பாதுகாவலனாக மாறும்; போராடும் நிலை யாகும். ஆண் சிந்தனை, ஆணாதிக்க வரம்பு முறையாக நிலவும் 'குடும்ப அமைப்பு' பெண்ணின் இருப்புக்கும், சுதந்திரத்துக்கும் எங்ஙனம் அழுத்தம் கொடுத்திருக்கின்றது என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணரும் சந்தர்ப்பத்தில் (சில ஆண்களும் கூட) இலங்கையின் சிறந்த திரைப்படங்களாக இத் திரைப்படங்கள் வியாக்கியானம் செய்யப்பட்டு விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுவது கூட துன்பகரமானது. சமூக பொறுப்புணர்வையும், யதார்த்தத்தையும் இப்படங்கள் வெளிப்படுத் துகின்றன எனக் கூறப்படுகின்ற போதிலும், யதார்த்தம் இதுவல்லவே.

பெண் சமூகத்திற்குள் ஏற்பட்டு வரும் அமைதி யான மாற்றத்தை இதுவரை இயக்குனர்கள் கருத்தில் எடுக்காதது ஏன்?

பொதுவாக பெண்ணின் இரண்டாம் பட்சநிலை மேலே பட்டியலிடப்பட்ட எந்தத் திரைப்படத் திலும் கேள்விக்குள்ளாக்கப்படவில்லை. மாறாக அவர்கள், சித்திரிக்கப்படுகின்ற பிரச்சினை களில் இருந்து மீள முயற்சிக்கும், போராடும் வகையாக்வே உள்ளனர். இவ்வாறு தான் தரமான சிங்களத் திரைப்படங்களில் பெண் பாத்திரச் சித்திரிப்புகள் அமைந்துள்ளன.

நமது அண்டை நாடான இந்தியாவில் எடுக்கப் படும் தரமான திரைப்படங்கள் மேற்குறித்த வரையறையிலிருந்து விலகிச்சென்று பெண் களின் பிரச்சினைகளை ஆய்கின்றது. முசாபிர் அலியின் ''அன் ஜுமன்'' திரைப்படத்தில், போராட்டங்களில் ஈடுபடும் ஒரு பெண்ணின் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. கேநாத் மேத்தாவின் ''மிர்ச் மசாலாவில்'' கொடுமை நிறைந்த மோசமான ஆட்சிக்கு எதிராக போராடும் ஒரு பெண்ணின் போராட்டம் சித்திரிக்கப்படுகின்றது. பாலியல் தொடர்பாக ஓர் பெண்ணுக்கு இருக்கும் உரிமையை கல்பனா லஜ்மியின் 'ஏக்பால்' விளக்குகின்றது.

எமது சமூகத்தில் வாழும் பெண்கள் தனியே பாலியலைச் சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொள்ளவில்லை. மாறாக, உள ரீதியான வன் முறை ரீதியான பாதிப்புகளுக்கும், பிரச்சினை களுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

இவ்வாறான பிரதிபலிப்புகள் இல்லாத திரைப் படங்கள் தரமான திரைப்படங்கள் என பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது கவலைக்குரியதே.

பெண், இதுநாள் வரை வாழ்ந்து வந்த கீழ்த்தர அடிமை வாழ்க்கையிலிருந்தும் மற்றும் பொரு ளாதார வரையறையிலிருந்தும் விடுபட்டு, நவீன உலகின் பொறுப்புகளை சமமாக சுமக்கும் நிலைமை வரையிலான சமூக மாற்றத்தில் அவள் பெற்றுக்கொண்ட அவலங்கள் இத்திரைப் படங்களில் வெளிப்படவில்லையென்பது தவறாகாது. அவ்வாறெனில் இவை எவ்வகை யில் தரமான திரைப்படங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன?

எதிர்வரும் காலகட்டத்தில் இவ்வாறான மாற்றங் களுக்கு உட்ப்பட்ட திரைப்படங்களின் தேவை அத்தியவசியமாகின்றது. அதற்கான முயற் சிகளில் இயக்குனர்கள் (பெண் இயக்குனர்கள் உட்பட) இறங்குவார்களா என்பது கேள்விக் குறியே.

*- ரத்னா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெசாக்கின் முன் மாங்குளம்! அரசு உத்தரவு?

டி.சி

பரவலாக எதிர்பார்க்கப்பட்டது போலன்றி வவுனியா கிளிநொச்சி பாதையில் முன்னேறுவதில் அரசும் அதை எங்ஙனம் ஆயினும் தடுத்து விடவேண்டும்என்பதில்புலிகளும்மிகத் தீவிரமாக உள்ளனர்.

புலிகள்பலவாரங்களாக தாண்டிக் குளத்தின் ஊடாக படைகள் வடக்கு நோக்கி முன்னேறுவதை தடுக்க மிகப்பெரியளவிலான தயாரிப்புக்களில் ஈடுபடுகிறார்கள் எனக் கூறப்பட்ட போதும் அவர்கள் அனேகமாக படையினரை எதிர்க்காமல்பின்வாங்கி விடுவார்கள் எனும் ஓர் அபிப்பிராயம் இராணுவத் தலைமைப் பீடத்திடம் நிலவியது. கடந்த செவ்வாய்படைகள் முன்னேறத் தொடங்கிய போது இக் கருத்து புலப்படலாயிற்று. எனினும் தாண்டிக் குளத்தில் இருந்து புளியங்குளம்நோக்கிய படைநகர்வை முன்னேற்றத்தை தடுக்க புலிகளால் பெருமளவு ஆட்பலத்தை ஒன்று குவிக்க முடியாமல் இருக்கும் என எண்ணியிருந்த படையினர் மீது ஓமந்தைக்கு இரு மைல் தெற்காக உள்ள நரசிம்மன் கோவிலடியில் மிகக் கடும் எதிர்த்தாக்குதலை புலிகள் மேற்கொண்டனர்.

இதே வேளை படைகள், மணலாறில் இருக்கும் பராக்கிரம புர, கஜாபாகுபுர (முன்னர் கென்ட் டொலர் மற்றும் சிலோன் தியேட்டர்ஸ் பண்ணைகள்) ஆகிய முன்னணி முகாம்களில்இருந்து ஒதியமலை ஊடாக நெடுங்கேணி பகுதியை நோக்கி நகரத் தொடங்கின. இங்கு கடும் மோதல்கள் இடம்பெறுகின்றன. இதில்கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் புலிகளின் படைபலக் குவிப்பை நெடுங்கேணி மோதல்களை பெரும் பாச்சல் ஒன்றை மேற்கொள்ளலாம் என இராணுவ உளவுத் துறை அரசிற்கு அறிவித்திருந்தது.

இப்படி ஒன்று நடக்குமானால் 'ஜயசிக்குரு" நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும்படைகளுக்கு பாதுகாப்பாக விமானங்களையும் வளங்கல் அணிகளையும்பயன்படுத்த முடியாத ஓர் நெருக்கடி தோன்றி விடலாம்.


கடந்த ஒரு மாத காலமாக கிழக்கில்இருந்து ஆயிரக்கணக்கான புலிகளை பிரபாகரன்வன்னிப்பகுதிக்கு தருவித்ததன் நோக்கம் வெறுமனே யாழ்ப்பாணப்பாதை திறப்பை தடுப்பது மட்டுமல்ல. முல்லைத்தீவு போன்றதொரு பெரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான தயாரிப்புகளையும் பயிற்சியையும் படை பலத்தையும் குவித்திருக்கின்ற இந்நிலையில் இன்னோர் பெரும் போர் முனையை புலிகள் ஆரம்பித்துவிட்டால் அரசால் அதை எவ்வகையிலும் சமாளிக்க முடியாது. இந்த வகையில் வன்னியில் உக்கிரமாக விரிவடைந்து வரும் போர்க்களம் ஓர் திருப்பு முனை எனலாம். ஏனெனில் ஒன்று - அரசினுடைய இப் பல்முனை படையெடுப்பை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விடவேண்டும் என இராணுவ தலைமைப்பீடம் எண்ணுவதாகத் தெரியவருகிறது.

இத்துடன் மாங்குளம் வரை கைப்பற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதியினுடைய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு நெடுங்கேணிக்கூடாக மணலாறு தளத்துடன் தொடர்பிருப்பது அவசியம் எனவும் கருதப்படுகிறது.

அதிகாரபூர்வமற்ற இராணுவ வட்டாரங்களினூடாகவும் தெரிய வந்துள்ளது.

இதே வேளை வவுனியாவின் மேற்காகவுள்ள குருவிக்குளம்பகுதியில் நடைபெற்ற சண்டையில் ஈடுபட்ட இராணுவ அணிக்கு என்ன நடந்தது என்பது தெரியாமலிருக்கின்றது என வவுனியாவிலிருந்து சில ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும்சனிக்கிழமை வரை அரசு தனது தரப்பு இழப்புக்களை தெளிவாக வெளியவருவதற்கு விரும்பவில்லை. இழப்புக்கள் எவ்வாறு இருப்பினும், வெசாக்தினத்துக்கு முன்னர் மாங்குளம் அரசின் கைக்குள் வரவேண்டும் என்ற தலைமைப்பீடத்தின் ஆணையில் இதுவரை எந்த மாற்றமும் இல்லையென அதிகாரபூர்வமற்ற இராணுவ




தடுப்பதற்காக புலிகள் தமது அதிகபட்ச பலத்தை அப்பகுதியில் குவிக்காமல்இருக்கவே 'ஜெயசிக்குரு" நடவடிக்கை பல்முனைப்படையெடுப்பாக மேற்கொள்ளப்பட்டது.

புளியங்குளம் மாங்குளம் ஆகிய முக்கிய மையங்களை நோக்கி நகரும் பிரதான படையணி பலப்படுத்தப்பட்டு விடக்கூடாது என்பதற்காக பூவரசங் குளத்தில் இருந்து புறப்பட்ட அரசபடைகளை புலிகள் தடுப்பர். அங்கனம் தடுப்பதாயின் புலிகள் தமது தாக்குதல் அணிகளில் கணிசமான ஒரு பகுதியை திசைதிருப்ப வேண்டி வரும்.என்பது படையினரின் எண்ணம். அது போலவே பூவரசங்குளத்தில் இருந்து முன்னேறிய படைகளை குருவிக்குளம்பகுதியில்மறித்த புலிகள் கடும் பதில் தாக்குதலை புதனும் வியாழனும் மேற்கொண்டனர். கடுமையான கனரக பீரங்கித் தாக்குதலால் புலிகளின் நிலைகளை தவிடுபொடியாக்கிய பின்னர் முன்னேறுவதே படையினரின் வழமையான தந்திரோபாயம் ஆனால் இம் முறை புலிகள் மிகப் பலமான எறிகணைத் தாக்குதலை சமாளிக்கக் கூடிய கருங்கல்லாலான அரண்களை அமைத்திருந்தனர். எனவே தான் குருவிக் குளத்தில் பெரும் எறிகணைத்தாக்குதலின் பின் தாங்கிகள் சகிதம் முன்னேற முற்பட்ட படையினர் மீது பலமான பதிலடியை புலிகள் மேற்கொள்ளக் கூடியதாயிற்று.

இங்கு நடந்த கடும் சண்டையில் படைகளின் இரு கனரகத் தாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டதாக தெரிகிறது. சனிக்கிழமை வரை குருவிக் குளத்தில் கடும் தாக்குதலுக்குள்ளான படையணிக்கு அடுத்து என்ன செய்வது என்பது சரியாக தெரிய வரவில்லை. குருவிக் குளம் சண்டை காரணமாக ஓமந்தைப் பகுதியில் தமது நோக்கியும் குருவிக் குளம் மோதல்களை நோக்கியும்திசைதிருப்பி விட்டால் புளியங்குளம் நோக்கிய படைநகர்வு இலகுவாக அமைந்துவிடும் எனத் திட்டமிட்டே இலங்கை அரச படைகளின் 'ஜயசிக்குரு" நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதாகும். இதற்கு முன்னர் புலிகள் இப்படியான ஒரு செறிவான பல்முனைத் தாக்குதலை ஒரு போதும் எதிர் கொள்ளவில்லை என்பதே உண்மை.

இப்படியான ஒரு பெரிய பல்முனைப் படையெடுப்பை வன்னியில் மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கான பிரதான பாதையை திறப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான படைகளை அரசு இடம்மாற்றியமை நாம்ஏற்கனவே அறிந்ததே இதன் காரணமாக சண்டை தொடங்கிய பின்னர் படைகளின் பெரும் பகுதி வன்னியின் உட்பகுதிகளுக்குள் சிக்குண்டு இருக்கும் போது புலிகள் மாபெரும் தாக்குதல் ஒன்றை எதிர்பாராத விதமாக மேற்கொண்டு தனது முக்கிய நிலைகளில் ஏதாவது ஒன்றைநிர்மூலம் ஆக்கி விடலாம்என்று அரசு பயம் கொண்டு இருந்தது.

மன்னார் ஆனையிறவு, பூநகரி, கிளிநொச்சி, பரந்தன் கூட்டுத்தளம் மற்றும் தென்மராட்சி நிலைகள் என்பவற்றின் ஏதாவது ஒன்றின் மீது புலிகள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஆரம்பிப்பதற்காகவே என இராணுவ உளவுத்துறை உணர்ந்துள்ளது.

எனவே தான் வன்னிக்குள், புலிகளின் மொத்தப் படைபலத்தையும் வெளியில் இழுத்தெடுக்கக் கூடிய பெரிய பல்முனைப் படைநகர்வுகளில் அரசு இறங்கியுள்ளது. 'ஜயசிக்குரு" நடவடிக்கையில் அரசு தனது கணிசமான ஆட்பலத்தையும் விமானப்

இந்த ஆபத்தை உணர்ந்தே புலிகள் ஓமந்தைக்கப்பாலான படைகளின் முன்னேற்றத்தை மூர்க்கமாகத் தடுக்கும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

சனிக்கிழமை வரை 400க்கும் மேற்பட்ட படையினர் காயமுற்றதாகவும் 200 பேராவது இறந்திருக்கலாமெனவும் அனுராதபுர வைத்தியசாலை வட்டாரங்களினூடாகவும் வேறு வட்டாரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

ரத்வத்தவின் இந்த வீராப்பை வன்னிப்போர் சகதிக்குள் சிக்க வைத்து கிள்ளியெடுத்துவிடுவோமென தற்போதைக்கு புலிகள் கங்கணம்கட்டி நிற்கிறார்கள். எனினும் வன்னிப் போர் முனை எவ்வாறு திருப்பமடையுமென இந்த வாரமே தீர்மானிக்கப்படுமென எதிர்பார்க்கலாம். ●

## பேச்சுவார்த்தை....

இல்லை. இது அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு பகுதித்தோல்வியாகும்.

**ஆனாலும்அவர்கள்கிழக்கின்பெரும்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது அல்லவா?**

இல்லை. அது உண்மை இல்லை. வருவதும், சில குண்டுகளைப் போடுவதும், சிலரைச் சுட்டுக்கொல்வதும், பின்னர் காட்டுக்குள் ஓடி விடுவதும் "கட்டுப்பாடு" இல்லை.

கிழக்கின் முழுமையான கட்டுப்பாடு அரசாங்கத்திடமே உள்ளது. ஆனால் காட்டுக்குள் உள்ள சில சில பகுதிகள் அவர்களின்கட்டுப்பாட்டில்உள்ளது. அங்கே அவர்கள் தங்களது முகாம்களை வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள்மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் வந்து ஒரு தாக்குதலை நடத்திவிட்டு திரும்பிப் போய்விடுகிறார்கள். இது யாராலும் செய்யக்கூடிய ஒன்று தான்.

## புலிகள்............

கருத்தியல் ரீதியாகவும் ஏற்படுத்திடக் கூடிய ஒரு பலமான மக்கள் அமைப்பு புலிகளிடம் இல்லாமல் இருப்பதும் இதற்கோர் காரணம். 1986க்கு பின் தலைதூக்கிய பெரும்பாலும் நகர்ப்புறம் சார்ந்து வாழும் ஒரு சந்ததி ஈழப்போராட்டத்தில் இருந்து கணிசமாக அந்நியப்பட்டு கிடப்பதற்கு இது ஒரு பிரதான காரணி எனலாம். ஆனால் 1985க்கு முன்னர் கூட்டணியும் ஏனைய இயக்கங்களும் மக்களை அரசியல் மயப்படுத்தி ஆயுதப் போராட்டத்தை அவாவிடும் ஓர் பரந்து பட்ட எழுச்சியை உண்டாக்குவதனையே குறியாக கொண்டு செயலாற்றின. இக்காலப்பகுதியில் படித்த நகர்ப்புறம் சார் இளைஞரே பெருவாரியாக ஆயுதப் போரில் இணைந்தனர் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். இன்று இத்தரப்பினர் மத்தியில் போர் பங்கேற்பு வீதம் கணிசமாக வீழ்ச்சி அடைந்ததற்கு மேற்கூறிய விடயம் முக்கிய காரணி எனலாம்.

இனி இராண்டாவது கேள்வி வடகிழக்கு தமிழர் மத்தியிலான போர்ப் பங்கேற்பு வீதம் 2.8ல் இருந்து 1.1க்கு வீழ்ந்ததால் தமிழீழ விடுதலையை முன்னெடுத்தலுக்கான போரிடு திறன் பாதிக்கப்பட்டுள்ளதா? இதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சினிமா இலக்கியமும் கோட்பாட்டுப் - பிரச்சினைகளும்

## திரைப்படமும் பெண்களும்:


யமுனா ராஜேந்திரன்











சரிநிகர் ஐந்து இதழ்களில் (114-119) திரைப்படத்தின் தாக்கமும் பெண்ணின் வாழ்நிலையும் என்கிற தலைப்பிலான கே.எஸ். சிவகுமாரனின் கட்டுரையும், தொடர்ந்து ஔவையின் எதிர்வினையும் பதிலாக சிவகுமாரனின் மறுப்பும் வெளியாகியுள்ளது.

பொதுவாக தமிழில் தீவிர சினிமா ஆய்வு மரபோ விமர்சன மரபோ இல்லை. அம்ஷன் குமாரின் சினிமா ரசனை புத்தகமும் தியோடர் பாஸ்கரனின் தமிழ் சினிமா பற்றிய ஆங்கில நூலும் (The Eye of the perfect) இதற்கு விதிவிலக்கானவை. வங்காளம்/ மகாராஷ்டிரம்/கேரளா/ கர்நாடகா/ ஆந்திரா போன்றவற்றில் தீவிர சினிமா விமர்சன மரபை அவர்கள் வெளியிடும் புத்தகங்களில் காணமுடியும். ஸத்யஜித்ரே/ செம்பேன் உஸ்மான் படங்களில் இடம்பெறும் கிராமங்கள்பற்றிய அசலான கட்டுரைகளை வங்காளத்தினின்று வரும் சினிமா இதழ்களில் காணலாம். தமிழில் மூலச் சிறப்புள்ள விமர்சனங்கள் என்பது இல்லை.

சரிநிகர் பத்திரிகையில் கூட அரசியல் / மாற்று அரங்கு/ கவிதை போன்றவை பற்றி நுண்கள விவாதங்களோடு சினிமாக் கட்டுரைகளை வைத்துப் பார்ப்பவர்களுக்கு வெகுசாதாரணமாகவே நான் சொல்வதை அவதானிக்க முடியும். இதற்கான காரணங்களுக்கு முகாந்திரமாக சில அம்சங்களை விவரித்துவிட்டே சிவகுமாரன்/ஔவையின் விவாதக்களத்திற்குள் நுழைய முயல்கிறேன்.

சினிமா விமர்சனம் என்பது தமிழில் பட்டியல் தருவதாகவோ பார்வையாளனின் பரவச அனுபவத்திலினின்று தூற்றப்படுகிறவையாகவோ போற்றப்படுபவையாகவோ தான் இருக்கிறது. பல்வேறு நவீன சிந்தனைத்துறை வளர்ச்சிகளை உட்கொண்ட அணுகுமுறையாக தமிழ் சினிமா விமர்சனம் வளர்ச்சியுறவில்லை. உதாரணமாக பெண்நிலைவாத உளவியல் பகுப்பாய்வு விமர்சனம் (Feminist psycho analytical Criticism) கட்டுடைப்பு விமர்சனம் (De constructive Criticism) போன்ற முறையிலான அணுகுமுறைகள் பரவலாக இடம்பெறவில்லை. ரவிக்குமாரின் 'நாக்அவுட்' பற்றிய விமர்சனமும் அ. ராமசாமியின் சில விமர்சனங்களும் மட்டுமே தமிழில் இந்தக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன.

இப்போது நாம் சிவகுமாரனின் அணுகுமுறைக்கு வருவோம். அவர் எடுத்துக்கொண்டிருக்கின்ற தலைப்பு மிகப் பிரமாண்டமான பிரச்சினை. இரண்டு துறை கோட்பாட்டு அறிவின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டிய விமர்சனம்.

1. பெண்நிலைவாதத்தின் கோட்பாட்டு வளர்ச்சி/ முரண்கள்/ வளர்ச்சிகள் போன்றன பற்றிய அடிப்படைகளை இது கொண்டிருக்க வேண்டும்.

2. சினிமா, மனிதனின் தொடர்ந்த நடவடிக்கையில் ஆற்றும் பங்கு எத்தகையது, சினிமா மனிதனின் சமூக ஆளுமையை உளவியல் கட்டமைப்பை எவ்வாறு உருவாக்குகிறது என்பது பற்றிய அவதானங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, விமர்சனத்தில் கையாளப்படும் மொழி/ சொற்றொடர்கள் போன்றவற்றின் பாலியல்பு/வர்க்க/ ஜாதீய அர்த்தங்களை நிச்சயமாக கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

திரைப்படம் சமுதாய உணர்வை ஏற்படுத்துகிறதா இல்லையா என்பதைக்காட்டிலும், திரைப்படம் தரும் பிம்பம் நமது உளவியல் கட்டமைப்பில் என்ன மாதிரியான பாத்திரம் வகிக்கிறது என்று ஆய்வதே சரியாக இருக்கும்.

சிவகுமாரன் தனது கட்டுரையில் இரண்டு கருத்தாக்கங்களைக் கையாள்கிறார். இத்தொடர்கள் திரும்பத் திரும்ப அவரது கட்டுரைகளில் கையாளப்படுகிறது.

1. பெண்களின் அந்தஸ்தும் வாழ்நிலையும் உயர் நிலைபெறுவது.

2. பெண்களின் அழகையும், கவர்ச்சியையும் கலாரீதியாகக் காட்டுவது.

சிவகுமாரனின் விமர்சன அணுகுமுறையின்படி அவர் பட்டியலிடுகின்ற பல்வேறு படங்கள்/ பெண் இயக்குனர்களின் படைப்புக்களின் அடிப்படையில் பெண்களில் அந்தஸ்தும் வாழ்நிலையும் உயர் நிலை பெறுவதற்கான சாத்தியங்களாக கட்டுரையின் போக்கில் அவர் இரண்டு விசயங்களை முன் வைக்கிறார்.

1. பெண்களின் சமூகரீதியான ஒடுக்குமுறைகள் பற்றி படங்களில் சித்திரிப்பது.

2. பெண்களின் அழகையும் கவர்ச்சியையும் கலாரீதியாகக் காட்டுவது.

சிவகுமாரன் எடுத்துக்கொள்ளும் படங்களின் விமர்சனம் / விவரணத்தின் அடிப்படையில் அவர் வந்து சேருமிடம் அப்பட்டமான தமிழ் ஆண்மகனின் மிக மோசமான பாலியல்பு ஒடுக்குமுறைத் தன்மை வாய்ந்தது. இன்றைய பெண்நிலைவாத விவாதங்களில் பெண்ணின் ஒடுக்குமுறைக்கான காரணிகளாக பொருளியல்/அரசியல்/கலாசாரப் பார்வைகள் மட்டும் முக்கியத்துவம் பெறுவதில்லை. பெண்ணின் உடல் குறித்த அரசியல் மிக மிக முக்கியத்துவம் பெறுகிறது பெண் உடலின் அடிப்படையில் பிரிவினைகள் செய்வதை மிகக் கடுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்துகிறார்கள். ஆந்த்ரே துவார்க்கின் (Andre Duaratin) போன்ற பெண்நிலைவாதிகள்.

முரட்டுத்தனமாக 'ஜீன்ஸ் பேண்டும்' அதே துணியிலான மேல்சட்டையும், செயற்கையான உள்ளாடைகள், உதட்டுப்பூச்சு போன்றவற்றையும் அவர்கள் நிராகரிக்கிறார்கள். தமது உடம்பை 'கவர்ச்சியைக் குப்பைத் தொட்டியல் போட்டுவிட்டு' அதன் இயல்பில் கொண்டாடுகிறார்கள்.

இந்த நோக்கினின்றுதான் ஔவையின் கேள்விகள்எழுகின்றன்து.

பதிலாக சிவகுமாரன் அவர்கள் விவாதத்தில் பாவிக்கிற வார்த்தைகள் மிக மிக பிரச்சினைக் குரியவை:

அ.கவர்ச்சி

ஆ.கலாபூர்வம்

இ.எதிர்மறைகளின் கவர்ச்சி Attraction of the Opposite

ஈ. பெண்கள் தம் இரசனையை வெளிப்படையாத் தெரிவிப்பதில்லை.

உ. அழகியல்.

எதிர்மறைகளின் ஈர்ப்பு எலலா ஜீவராசிகளுக்கும் உரியது. மிக மிக இயல்பானது. உயிர்களுக்கு ஆதாரமானது. அடிப்படையானது. எளிமையானது. ஈர்ப்பு என்பது வேறு. கவர்ச்சி என்பது வேறு. எந்தப் பூச்சும், மைதீட்டலும், நகப்பூச்சும் உதட்டுப்பூச்சும், செயற்கையான உள்ளாடைகளும், நிறஜாலங்களும் இல்லாமலும் மிக மிக இயல்பாக ஏற்படும் உணர்ச்சியே பாலுணர்ச்சி. இது ஆண் பெண்ணுக்கு மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

ஒரு 'குட்சப்பாண்பா''வின் கண்களும், 'ஸ்பீல்பெர்க்கின்' கிரெம்ளின் ஜீவராசியின் கண்களும், குழந்தையின் கண்களும் நேசிக்கிற மனிதர்களுக்கு பரஸ்பர ஆண் பெண் கண்களும் அழகியல் தன்மை வாய்ந்தவை. அந்த இயல்பையும், எளிமையையும் கையகப் படுத்துவது தான் அழகு.

அழகு வேறு. கலாபூர்வம் வேறு. கவர்ச்சி வேறு. ஸத்யஜித்ரேயின் படங்களுக்கும் பாலுமகேந்திராவின் படங்களுக்கும் டி. ராஜேந்தரின் படங்களுக்கும் அவர்கள் சித்திரிக்கும் பெண் பிம்பங்களுக்கும் இருக்கும் வித்தியாசங்களை உணர முடியுமானால் அழகு/ கலாபூர்வம்/கவர்ச்சி போன்றவற்றுக்கான நடைமுறை வித்தியாசத்தை உணர முடியும்.

ரேயின் பெண் எளிமையான பெண். இது அழகு. பாலு மகேந்திராவின் மத்தியதரவர்க்கப்பெண் ஆளுமை கொண்டவள். இது கலா பூர்வம். டி. ராஜேந்திரன் பெண் பிறப்புறுப்புக்கள் மட்டுமே கொண்டவள். அது கவர்ச்சி. மனித விரோத அசிங்கம். பெண்கள் ஏன் வெளிப்படையாக ஆணின் உடம்பு ஏற்படுத்தும் சந்தோசத்தையும், ஈர்ப்பையும் வெளியிட வில்லையென்பதற்கான காரணங்கள் நமது மதக்கருத்தியலிலும் நிலப்பிரபுத்துவ அறிவியலிலும் இருக்கிறது.

சேகர் கபூரின் படத்தில் வருகிற பூலான்தேவி மேலிருந்து கலவி செய்வது அழகானது, இயல்பானது, எளிமையானது. உடம்பின் நிஜமும் மனதின் நிஜமும் பூச்சுக்களினின்று கவர்ச்சி எனும் வியாபாரப் படுத்தல், மலினப்படுத்தல் இன்றி சொல்லப்படுவது அழகு.

பாலியல்பை வெளிப்படையாகத்தெரிவிக்கும் பெண்கள் பற்றிய மனோவக்கிரம் வாய்ந்த பிரச்சினைகள் 'இந்தியா டுடே'யின் கட்டுரைகளிலிருந்து மீராநாயரின் காமசூத்ரா பற்றிய விவாதங்கள் வரை பேசப்பட்டிருக்கிறது.

பெண் இயக்குனர்களில் கூட, பெண்ணின் அழகைச் சித்திரித்தவர்க்கும், ஆணின் பார்வையில் பெண்ணின் கவர்ச்சியைச் சித்திரித்தவர்க்கும் உதாரணம் உண்டு. சுஹாஸினியின் இந்திரா படத்தின் முத்தக்காட்சி அழகு. கலாபூர்வம். ஸ்ரீபிரியாவின் படத்தில் வரும் ஊர்வசியின் மழை. நடனக்காட்சி. கவர்ச்சி. வக்கிரம். கலாபூர்வம், அழகு, கவர்ச்சி போன்றன வளர்ச்சியுற்ற கோட்பாடுகளின் வெளிச்சத்தில் பார்க்கப்பட வேண்டும். விளக்கப்பட வேண்டும். சிவகுமாரனின் விமர்சனம் மதம் சார்ந்த நிலப்பிரபுத்துவ அறிவியல்/ அழகியல் சொல்லாடல்களிலிருந்து அவர் இன்னும் தன்னை மீட்டுக் கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கிறது.

இன்றைய விமர்சன அணுகுமுறை என்பது சினிமாக்கலையின் நுண்களத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். வளர்ச்சியுற்ற விமர்சனக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அறிவு, அரசியல் விவாதங்கள், அனுபவ அறிவு, பகுப்பாய்வு போன்றவற்றை இணைத்ததாக இருக்கும் போதுதான் விமர்சனம் சமகாலத்தன்மையையும் சிருஷ்டித்தன்மையையும் பெறும்.

மணிரத்தினத்தின் சினிமாக்களைப் பற்றிய அணுகுமுறையில் நாம் பல்வேறு வகையில் வேறுபட முடியும். அவர் சொல்லியிருக்கிற ஒரு விடயம் நமது ஆழ்ந்த சிந்தனைக் குரியது என்றே நினைக்கிறேன்.

'சினிமா விமர்சனம் என்பது சினிமா இலக்கியம் பற்றிய ஆழ்ந்த பரப்பிலிருந்துதான் உருவாக முடியும்'

சினிமா இலக்கியம் (Cinema Literature) என்பது இலக்கியம்/ தொழில்நுட்பம்/கோட்பாடுகள்/ அரசியல்/ அழகியல் போன்றவற்றுக்கிடையிலான உறவை ஆய்வு செய்வதைக் கோருகிறது.

இத்தகைய விமர்சனத்தை உருவாக்கும் பொறுப்பு நம் எல்லோருக்கும் உரியது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆங்கிலப் பெண் கவி: 'ஆன் ரணசிங்ஹவின்- சின்னமும் குறியீடும்




ஆங்கில இலக்கியத்துறையில் இலங்கையில் புகழ்பெற்ற எழுத்தாளர் ஆன் ரணசிங்க அவர்களாவர். ஆங்கில இலக்கிய வட்டத்திலே மிகவும் பிரபல்யமாகப் பேசப்படுவர். இவருடைய படைப்புக்கள் ஆழமான கருத்தியலையும், சிந்தனை ரீதியான உணர்வுகளையும் முன்வைப்பதாக அமைகின்றன.

திருமதி ஆன் ரணசிங்க (Anne Ranasinghe) ஜேர்மனியில் பிறந்தவர். இயற்கையிலே பல்வேறுபட்ட மனித கஷ்டங்களால் வெந்து, வேதனைப்பட்டவர். தனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவங்களும், தான் சந்தித்த துயரங்களுமே தன்னை எழுத்தியலுக்கு கொண்டு சென்றது, கவிதை படைப்பதற்கும் தூண்டியது எனக் குறிப்பிடுகிறார்.

ஜேர்மனிய யூத (Jewis) குலத்திலே பிறந்த ஆன் ரணசிங்க 'நாசி' (Nazis) காலப்பகுதியிலே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. 'நாசி' சர்வாதிகார ஆட்சியிலே தனது கலாசாரம், சமூகம், தனது பாரம்பரியம் அனைத்தையும் இழந்து நொந்து போனவர். ஒட்டு மொத்தமாக தனது குடும்பத்தையே 'நாசி'யின் இரத்த வெறிக்கு பலிகொடுத்தவர்.

இதனைப்பற்றி ஆன் ரணசிங்க குறிப்பிடுகையில் எனது குடும்பத்தை மாத்திரம் 'நாசிஸ்டுகள்' பலி கொள்ளவில்லை. நான் வாழ்ந்த வீடு, எனது சிறுபராயம், எனது வாழ்வதற்கான உரிமை, அனைத்தையும் இழக்கச் செய்தனர். தான் ஜேர்மனிய மொழியில் பேசுவதில் இருந்தும் தடுக்கப்பட்டிருந்தேன்'' என்கிறார்.

ஜேர்மனியில் இருந்து தப்பிச் சென்று, பத்து ஆண்டுகள் ஜேர்மனிய அகதியாக இங்கிலாந்தில் புகலிடம் பெற்றார். அங்கு வைத்து ஆங்கிலம் கற்றுக் கொண்டார். ஆங்கில மொழியில் கவிதை புனைந்து, சிறுகதைகள் படைப்பதும் இங்கிலாந்து மண்ணில் இருந்தே ஆரம்பித்தாக கூறுகிறார்.

இங்கிலாந்திலே எழுத்தியல் பணியிலே ஈடுபட்டு இருந்த ஆன், எதேச்சையாக தனது துணைவரைத் தேர்ந்து கொண்டார். 1949ம் ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த வைத்திய பட்டதாரி டாக்டர் டி. ஏ. ரணசிங்க என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். டி. ஏ. ரணசிங்க என்பவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றியவர்.

தனது திருமணத்தின் பின் தனது வாழ்வு, இருப்புகளை இலங்கையில் அமைத்துக்கொண்டார். தனது வாழ்வில் 46 வருடங்களை இம் மண்ணில் கழித்துவிட்ட எழுத்தாளர், சமூகத்தின் தாக்கங்கள் குறித்து பாராட்டும் படியான படைப்புக்களை முன்வைத்திருக்கிறார். இவரது படைப்புக்களில் குறிப்பிடும்படியாக 'வடக்கு யுத்த நிலைமை' குறித்து விரிவாயும், விளக்கமாயும் தெளிவுடனும், கவிதை புனைந்திருக்கிறார்.

இலங்கை அரசு கடந்த காலத்தில் 'சர்வதேச மன்னிப்பு சபை' பணிகளை இலங்கையில் தடை செய்திருந்தபோது அதன் வெளிக்கள உத்தியோகத்தராக முதன் முதலில் வெளிப்படையாக கருமமாற்றிய ஒருவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்னால் மொழிபெயர்க்கப்பட்ட, ஜேர்மனிய மொழியில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட கவிதை, சிறுகதை என்பவற்றை 'மஸ்கொட் அன்ட் சிம்பல்'(Mascot and Symbol) என்ற தொகுப்பிலே வெளியிட்டு இருக்கிறார். இத்தொகுப்பு அவருடைய தனித்துவத்தையும், தனது புகழையும் மென்மேலும் ஓங்கச் செய்து இருக்கிறது.

இவருடைய படைப்புக்களில் அதிகமானவை சர்வதேச விருதுகளையும், தேசிய விருதுகளையும் பெற்றிருக்கிறது. தற்போது நடைமுறையில் இருக்கும் (க.பொ.த. உ/த) ஆங்கிலப் பாடத்தின் இலக்கியப் பகுதியிலே பெரும் பாலானவைகள் இவரது படைப்புக்களே, பரீட்சைக்கான ஆயத்தப் பகுதிகளாக அமைகின்றன.

25 வருடங்களாக எழுத்தியலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆன் ரணசிங்க ஆங்கில எழுத்தாளர்கள் வரிசையிலே தனக்கென்றொரு வித்தியாசமான போக்கினைக் கொண்டவர்.


ஆன் ரணசிங்கவின் நவீன படைப்பான மஸ்கொட் அன்ட் சிம்பல் பலகாத்திரமான உணர்வுபூர்வமான விடயங்களை உள்ளடக்கிய ஓர் கனதியான படைப்பாய் தோற்றமளிக்கிறது.

இதனுள் அடங்கப் பெற்றிருக்கும் கவிதைகளில் தான் அனுபவிக்க நேர்ந்தவைகளை எம்கண்முன் கொண்டு வருகின்றார். இவருடைய இப்படைப்பு குறித்து கருத்து வெளியிடும்போது களனிபல் கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி லக்ஷ்மி டி சில்வா, முன்னுரையில் ''ஆன் அவர்களுடைய படைப்பு கருத்தியல் விடயங்களின் சிறப்பம்சம் குறித்து பாராட்டப்படுகின்ற வேளை, மிக முக்கிய விடயமாக கருதப்படுவது, இவர் கையாண்டுள்ள புதிய அணுகுமுறைகள், நுட்பங்கள் என்பன எழுத்தியல் துறை வளர்ச்சிக்கு மென்மேலும் வழிகாட்டியாக அமையும்'' என்கின்றார்.

ஆன் ரணசிங்க இலங்கையில் மாத்திரம் செல்வாக்கோடு இருப்பவர் அல்ல. ஐரோப்பா, நியுசிலாந்து, அமெரிக்கப் பிரதேசத்தில் தனது படைப்புக்களின் மூலம் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளராக விளங்குகிறார். இவரது படைப்புக்களில் இன்றியமையாத ஓர் படைப்பாக 'சின்னமும்(மஸ்கொட் அன்ட் சிம்பல்)குறியீடும்' விளங்குகின்றது.

நன்றி: லங்கா கார்டியன்

ஐ.பயஸ் றெஜீஸ்லாக்




**'அம்மா'**

*S. Monoharan,*
*(Esc.E 13)*
*210, Ave . 8 Mai 1945,*
*93150 Blanc Mesnil, FRANCE.*

அம்மா - பிரான்சிலிருந்து வெளிவந்திருக்கும் சிறுகதைச் சஞ்சிகை. ''சிறுகதை, வடிவம் பற்றிய ஆரோக்கியமான கருத்தாடல்கள் இன்னும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆயினும் - சுந்தரராமசாமியைத் தெரியுமா என்றால், யார்? எவ்விடம்? திருகோணமலை தானே என்று கேட்கிற 'தீவிர இலக்கியவாதி'களுடன் எல்லாம் நவீன இலக்கிம் பற்றிக் கருத்தாடி எம்மை வளர்த்துக்கொள்வதற்கு நிறையவே பொறுமை தேவை'' என்று சொல்லும் அம்மாவில்-

'எலி வேட்டை' என்ற ஷோபா சக்தியின் சிறுகதை ஏழைச்சிங்களக் குடும்பங்கள் உல்லாசப்பயணிகளால் எவ்வாறெல்லாம் சீரழிகின்றன என்பது பற்றியும், இராணுவத்தில் இருந்து தப்பிவந்த காமினி என்கிற சிங்கள இளைஞனின்வறிய தாயும் தங்கையும் அனுபவிக்கும் அவலங்களையும், சகாயராசன் என்கிற தமிழ்முதலாளி ஒருவனின் பாலியல் துஷ்பிரயோகம் பற்றியும் சொல்கிறது.

'நியாயார்த்தங்கள்' - வாசுதேவன் எழுதிய சிறுகதை புலம்பெயர்ந்து வாழும் மக்கள் வெள்ளைக்கார முதலாளிகளால் சுரண்டலுக்குள்ளாவதை எதிர்த்துப்பேச இயலாது, வாழாதிருக்கும் இளைஞனொருவனின் மனக்கிலேசத்தின் வெளிப்பாடாயுள்ளது.

அடுத்ததாக 'நுளம்பு + நுளம்புகள்' என்ற அஸ்வதியின் கதை உறக்கத்தை அலைக்கழிக்கிற நுளம்புகள் பற்றியது.

ஆமிக்குப் பயந்து சுவிஸிற்கு புலம்பெயரப் போகும் இளைஞன் ஒருவனுக்கும் அவனது குடும்பத்திற்குமிடையிலான மனப்போராட்டங்களைச் சொல்கிறது புவனின் 'போய் வருகிறேன்'

அ. இரவியின் - 'மகிந்தவின் சாவு', அச்சம் மிகுந்த கல்வரக்காலங்களில் இரத்மலானையில் சிங்களக் குடியிருப்பொன்றில் வாடகைக்கு குடியிருந்த தமிழ்க் குடும்பமொன்று அனுபவித்த அவலங்களையும், அவர்களுக்குத் துணையாயிருந்த மகிந்த என்கிற சிங்கள இளைஞனையும் அவனுடைய சாவையும் பற்றி சொல்கிறது.

இன்னும் -'எனக்குப்பிடித்த கதை' என்று சுபமங்களாவில் வெளிவந்த மீ. விஸ்வநாதனின் 'தேர்' என்ற சிறுகதை மீள் பிரசுரமாகியுள்ளது. (இந்தப் பகுதிக்கு நீங்கள் படித்த உங்களைக் கவர்ந்த கதை ஒன்றினைத் தெரிவு செய்து அனுப்பலாம் - படைப்பாளி பற்றிய குறிப்பு விரும்பத்தக்கது.)

அமைப்பைப் பொறுத்தவரையில் - வடிவமைப்பில் இன்னுஞ் சிறிது கவனமெடுத்து, எழுத்துக்களை சிறியதாக்கிய (Font Size) இன்னும் ஒரிரு கதைகளை பிரசுரித்திருக்கலாம். இன்னும் அம்மாவின் வாசகர் பரப்பை விரிவாக்க அம்மா ஆவன செய்ய வேண்டும்.

படைப்புக்கள் பற்றிய விவாதத்தைத் தூண்டக்கூடிய கட்டுரைகள் மொழி பெயர்ப்புக் கதைகளை அம்மா எதிர்பார்க்கிறாள்.

*ராசாத்தி*




**நெஞ்சின் நெருடல்கள்**
**(கவிதைகள்)**
சி. பற்குணம்.
வெளியீடு:
தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்
விலை 20.00 ரூபா (இந்)

இலக்கியவாதியும், வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள பணிப்பாளருமாகக் கடமையாற்றியவருமான அமரர் சி பற்குணத்தின் கவிதைகளடங்கி தொகுப்பு.

நூலிலிருந்து ஒரு கவிதை:

*நியாயம் கேட்டோர்*
*யாரும் இல்லையால்*
*நியாயம் கேட்போர்*
*யாரும் இல்லை.*

*கல்லறைகள் கதைகளுக்கு*
*மொழிவளங்கள் ஏதுமில்லை.*

*ஆனால், அவை -*
*செவிப்பறையைக் குடைந்து,*
*விழித்திரையைக் கிழித்து,*
*இரத்தத்தைக் கொதிக்க வைக்கும்,*
*இதயத்தை உறையச் செய்யும்,*
*உடலத்தை உந்தித் தூக்கும்.*

*நியாயம் கேட்டோர்*
*கல்லறைக்குள் வாழும் வரை*
*நியாயம் உயிர்ப்படைந்து*
*கூர்ப்படைந்து குரல் கொடுக்கும்.*

***மௌனி***




**''அன்னை இட்ட தீ''**
**(நாடகங்கள்)**
குழந்தை ம. சண்முகலிங்கம்.
வெளியீடு:
தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்
விலை 45.00 ரூபா (இந்)

ஈழத்து நாடக உலகில் மிகவும் நன்கறியப்பட்டவரான குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'அன்னை இட்ட தீ' நாடகத்தினதும் அது தொடர்பானதுமான கட்டுரைகளினதும் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

''ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் சண்முகலிங்கம் - அரங்கிய வரலாற்று விமர்சனப் பதிகை'' எனும் கா. சிவத்தம்பியின் சிறப்புக் கட்டுரையும் இதில் இடம்பெற்றுள்ளது.

''அச்சகம்'' அள்ளுண்டு போனதில் எஞ்சிய பிரதியெழுத்துக்களுடன் இந்நூல் வெளிவந்திருக்கிறது'' என பதிப்புரைக் குறிப்பு சொல்கிறது.

நாடக ஆர்வலர்களுக்கான ஒரு நல்ல நூல் இது. *லீலா.*




**புறநானூறு முதல் புதுக் கவிதை வரை**
வெளியீடு:
தமிழ் நூல் வெளியீட்டு விநியோக மையம்.
விற்பனை உரிமை:
வசந்தம் புத்தக நிலையம்
44, மூன்றாம் மாடி,
கொழு[illegible]ந்திய சந்தை,
[illegible]ம்பு - 11.


தமிழ் நூல் வெளியீட்டு விநியோக மையத்தின் முதல் வெளியீடாக வந்துள்ள இந்நூல் க.பொ.த. உயர்தரத்[illegible] தமிழ்ப்பாடம் கற்கும் மாணவர்களை விஷேட கவனமெடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பியின் ''தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுகம்'', ''ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபு - ஒரு சுருக்கம்'' ஆகிய கட்டுரைகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

மொத்தம் 26 தலைப்புக்களின் கீழான இத்தொகுப்பு நூலை விதுரன், சேயோன், கலாலஷ்மி, மதுசூதனன் ஆகியோர் தொகுத்துள்ளனர்.

பொதுவான இலக்கிய வாசகர்களுக்கும் பயனளிக்கும் இந்நூலின் விலை குறிப்பிடப்படவில்லை.

தமிழ் நூல் வெளியீட்டு விநியோக மையத்தின் நல்ல நூல்களின் வெளியீட்டுக்கான கட்டியமாக இம் முதல் வெளியீடு உள்ளது.

*நில்ஷா.*




**மேற்பூச்சு**
**(கவிதை நாடகங்கள்)**
**முருகையன்**
வெளியீடு:
தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்
விலை 35.00 ரூபா (இந்)

1950களில் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்து, ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களில் ஒருவராக மதிக்கப்படுகின்ற முருகையனின் ஐந்து கவிதை நாடகங்கள் கொண்ட தொகுப்பு.

கவிதை வடிவப் பரிசோதனைகள் செய்தவர்களுள் முக்கிய மாணவராக க. கைலாசபதி கணித்துள்ள இவரின் 'செங்கோல்', ''கலைக் கடல்'', ''கொண்டு வா தீயை கொளுத்து விறகை எல்லாம்'', ''சும சும மகாதேவா'', ''அப்பரும் சுப்பரும்'' ஆகிய நாடகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

நூலிலிருந்து...


*''நாளை,*
*சனங்கள் திரள் திரளாய்*
*மைதானம் முட்ட நிரம்பி வழிவார்கள்*
*எப்படித்தான் தப்ப இயலும்?*
*இரவிருட்டிற்*
*கள்ளமாய் ஓடிக் கடப்போம் ஊர்*
*எல்லையை நாம்.*
*மற்றுமொரு நாட்டை அடைவோம்.*
*அடைந்து விட்டால்*
*சற்றும் இல்லை. அன்றோ*
*பயங்கொள்ளச் சந்தர்ப்பம்...''*

*- சத்யா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆணில் பூத்த கலாபூர்வமும் முகிழ்த்த ரசனையும்!

இதழ் 119இல் வாசகர் செ(ா)ல்லடி பார்த்தேன். எடுத்ததுக் கெல்லாம் அடி, குத்து, வெட்டு, சூடு என்று கேட்டுக் கேட்டு அலுத்துப்போன நிலை. வாசகர் சொல்லடியோ... செல்லடியோ.. போதாததுக்கு ஒரு கவசவாகனம் மாதிரி ஒண்டு... 4cmx6cm வெளி பத்திரிகையில் நாசம்.

சரி, விசயத்துக்கு வருவோம். வாசகர் கடிதம் பார்த்தேன். ஔவையின் வாதத்தில் சரிகாணாமல் போய் விடும் கே.எஸ்.எஸ். அடம்பிடிப்பதையும் பார்த்தேன். விவாதம் என்று ஒன்று எழுந்து விட்டாலே கதவை அகலத் திறந்து வைப்பது நல்ல முடிவுகளை வந்தடைய வழிகாட்டும். வாசலிலேயே மறித்து வைத்து ''நீங்கள் என்னதான் முடிவு கட்டினாலும், என்னைப் பொறுத்தமட்டில் அழகை (அது பெண்ணுருவத்தில் இருந்தாலும் கூட) கலாபூர்வமாக நான் ரசிக்கவே செய்வேன்'' என்று தனது முடிவைச் சொல்லி ஔவையைத் துரத்துகிறார் கே.எஸ்.எஸ்.

''நமக்குத் தேவை பெண்ணைப் பெண்ணாகச் சித்திரிப்பதேயன்றி, ஆண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணைச் சித்திரிப்பதல்ல'' என்ற ஆழமான கருத்தோட்டத்தை ஊன்றியபடி நிற்கின்றார் ஔவை. இதை பொதுப்புத்தியுடன் முகங்கொடுப்பது சரியல்ல.

பெண்ணின் அழகை வரையறுக்கும் சிந்தனை ஆணாதிக்க வயப்பட்டது என்பதை மறுக்கமுடியாமலே உள்ளது. ஒரு குழந்தையை ரசிக்கும் போது யாராவது கலாபூர்வமாக ரசிப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. துள்ளியோடும் மானைப் பார்த்து ரசிக்கிறோம்; புலியின் வரிகளைப் பார்த்து ரசிக்கிறோம்.

எங்குமே கலாபூர்வமாக ரசிப்பது, கலாபூர்வமற்று ரசிப்பது என்று வரைவு செய்வதில்லை. ரசிக்கிறோம்; உண்மை. ரசனை மறுக்கப்படுவதில்லை; அழகியல் மறுக்கப்படுவதில்லை. பிரச்சினை இதுவல்ல. பெண்களின் தலைமயிரிலிருந்து யோனிவரை அழகைப் பற்றிய வரைவுகளை யார் செய்தார்? ஆண்களின் கண்ணோட்டத்திலா, இல்லையா? என்பதே கேள்வி.

(அக, புற அழகு உள்ளிட்ட) பெண்மை எனும் கருத்தாக்கத்தைத் தந்ததும் ஆண்களேதான். அன்னம் போன்ற நடையும் நாணிய பார்வையும் பெண்ணுக்கு அழகாகவும், விரிந்த தோளும் நிமிர்ந்த நடையும் ஆணுக்கு அழகாகவும் சொல்லப்படுகிறது. இவ்வகை ஆண்நிலைக் கண்ணோட்ட அழகியலே பொதுமையானதாகவும் ஆனது. இப்படியாய் ஆண்நோக்கில் கற்பிதப்படுத்தப்பட்ட பெண்ணின் அழகியலை மீறி, 'கலாபூர்வமாக' ரசிப்பது என்பதை விளங்கக் கடினமாக இருக்கிறது. ஒரு பெண்ணை கலாபூர்வமாக ரசித்தது நாலு வரிகளை கே.எஸ்.எஸ். எழுதிக் காட்டுவாரானால் சிலவேளை எமது கருத்தைப் பரிசீலிக்க அவை உதவலாம்.

பெண்கள் ஆண்களை ரசிப்பது என்பதும், ஆண் பெண்ணை ரசிப்பது என்பதும் அல்லது பெண்ணை பெண்ணோ ஆணை ஆணோ ரசிப்பது என்பதையெல்லாம் மறுப்பது மனிதஜீவியின் ரத்தமும் சதையும் இறுகிக் கல்லாய்ப் போகும் போதுதான் சாத்தியப்படலாம். ஆனால் இங்கு 'கலாபூர்வம்' என்ற சொல் ஆண்களின் ஆதிக்க ரசனைக்கு ஆடை தந்து நாகரிகமாக்கிறது என்றே படுகிறது.

அழகியலை மறுப்பது என்பதும், அழகியலில் ஆண்நோக்கை மறுப்பது என்பதும் ஒன்றல்ல. ஆதிக்க சக்திகளினது கலை, இலக்கியம், மொழி, வரலாறு.. எல்லாமே ஏற்புடையதாக ஆக்கப்பட்டதும், ஒடுக்கப்பட்டோரினது எல்லாம் நசுக்கி அழிக்கப்பட்டதும் அல்லது இழிநிலைப்படுத்தப்பட்டதுமே நிகழ்ந்து வந்திருக்கிறது. அந்த உலகில்தான் நாம் வாழ்கிறோம். அதற்காக இவற்றையெல்லாம் மறுத்து இந்த உலகை விட்டே ஓடுவதில்லையே. அவற்றிலுள்ள ஆதிக்கக் கூறுகளை அடையாளம் காண்பதும், மாற்றத்திற்குள்ளாக்க நினைப்பதும் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்படும் சக்திகளாகிய பெண்கள் தரப்பிலும் நியாயமானது. இந்த வகையில் ஔவையின் மறுப்பு சரியானதுதான். அது (கலை, இலக்கியம், மொழி, வரலாறு, அழகியல்.. போன்ற) எல்லாவற்றையும் நிராகரித்து ஜடமாக வாழ்வது என்று பொருள்படாது.

ஔவையை மறுக்கும் கே.எஸ்.எஸ், ''..பெண்ணை வெறும் சடப்பொருளாக மாத்திரமே அணுக வேண்டியிருக்கும். பெண்ணை ஓர் ஆணாகவே உருவகப்படுத்தி உறவு கொள்ள வேண்டியிருக்கும்'' என்று கை தடுமாறி எழுதி விடுகிறார். பெண்ணை ஆணாக உருவகப்படுத்த நினைப்பதே ஒரு ஆணாதிக்கச் சிந்தனைதான். தன்னை ஏன் ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி உறவுகொள்ள வேண்டியிருக்கும் என்று தர்க்கரீதியாக சிந்திக்கும் ஒரு கணநேரப் பொழுதைக் கூட அவருக்கு ஆண்நோக்கு அவகாசமாகக் கொடுக்கவில்லை. (எம்மையறியாமலே எம்மில் வெளிப்படும் ஆணாதிக்க கூறுகளை அடையாளம் காட்ட) இதை ஒரு தர்க்கமாக முன்வைக்கிறேனேயொழிய இப்படியெல்லாம் உறவுகொள்ள வேண்டும் என்று பேச முன்வருவதாக அர்த்தப்படுத்திவிடக்கூடாது.

'எதிர்மறைகளின் கவர்ச்சி' என்ற விதி இயற்றை விஞ்ஞானம் சார்ந்தது. பெண் மீதான கவர்ச்சியோ பாலியலை மையமாக வைத்து பின்னப்பட்டுள்ளது (அது இயற்கையாய் பெறப்பட்டதல்ல) பாலியல் சம்பந்தப்பட்ட கருத்தோட்டம் இன உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. இதனாலேயே ஆண் - பெண் இடையிலான எதிர்ப்பாலியல் உறவு மட்டும் ஏற்கப்பட்டது. இயற்கையானது என்று கற்பிதம் செய்யப்பட்டது. ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு மாறானதாக கற்பிதப் படுத்தப்பட்டது. மறுக்கப்பட்டது. மறைவிடத்துக்குத் தள்ளப்பட்டது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் மனித ஜீவிகளில்லையா..? இந்த விடயத்தில் மிருகங்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதில்லை என்பதை அடிப்படையாக வைத்து 'இயற்கையானது', 'இயற்கைக்கு மாறானது' என்று வரையறுக்கும் பொதுப்புத்தியால் இவற்றை நாம் விளங்கிக்கொள்வது கடினமானது. மற்றைய எல்லா அம்சங்களிலும் மனித ஜீவியை மிருகங்களிலிருந்து வேறுபடுத்தி பிரலாபிக்கும் நாம், இந்த எதிர்ப்பாலுறவில் மட்டும் வசதியாக ஆதாரமாக வைத்து விடுகிறோம். இதன் மூலம் எதிர்ப்பாலுறவுதான் இயற்கையானது என்று ஏற்கச் செய்து 'எதிர்மறைகளின் கவர்ச்சி' என்பதைக் கருத்தோட்டமாக்கி திணித்து விடுகிறோம்.

''பெண்களின் கவர்ச்சியையும் அழகையும் கலாரீதியாக ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் ரசிப்பதுண்டு. பெண்ணை ரசிப்பதனால் வெறும் போகப்பொருளாக மாத்திரமே ஆணாதிக்கக்காரர்கள் அவளை நோக்குகிறார்கள் என்பது சரியான முடிவல்ல'' என்கிறார் கே.எஸ்.எஸ். பெண்ணின் கவர்ச்சியையும் அழகையும் பெண்ணும் ரசிக்கிறாள் தான்; உண்மை, ஆனால் எப்படியான கண்ணோட்டத்தில்? பெண்களின் கண்ணோட்டத்திலா. இல்லை. ஆணாதிக்கக் கருத்தியல் நீக்கமற நிறைந்த சமூகத்தின் ஒரு அங்கம்தான் பெண்களும். எனவே பெண்ணின் அழகு, கவர்ச்சி பற்றிய (ஆணாதிக்கத்தைக் கேள்விகேட்காத) பெண்ணின் அளவுகோலும் ஆண்களின் கண்ணோட்டத்திலிருந்து பெறப்பட்டதுதான். எனது அம்மாதான் எனது சகோதரியை ஒரு அசல் பெண்ணாக நெறிப்படுத்துவதில் அதிக தொடுகையில் இருக்கிறாள் என்றிருக்கும் போது, ஆண்களை ஏன் குறைகூறுகிறீர்கள் என்று கேட்க முடியுமா, என்ன!

''பற்பல காரணங்களுக்காகப் பெண்கள் தமது ரசனையை வெளிப்படையாகத் தெரிவிப்பதில்லை. ஆண்கள் செய்கிறார்கள். இதுதான் உண்மை'' என்கிறார். ஆண்நோக்கில் கற்பிதப்படுத்தப்பட்ட அழகியல் அடிப்படையில் எழும் ரசனை இங்கு இருவருக்கும் பொதுமையம். வெளிப்படையாக பேசுவது/பேசமுடிவது, பேசாதது/பேச முடியாதது என்பது ஒழுங்கு, கட்டுப்பாடு, பண்பு, ஆளுமை... என்பன சம்பந்தப்பட்ட விடயம். இரண்டையும் போட்டுக் 'குழப்ப வேண்டிய அவசியம் இல்லை.

விஞ்ஞானப் பட்டதாரி, கலை இலக்கிய மாணவன்.. போன்ற பிரயோகங்களெல்லாம் எமது விவாதங்களை முன்வைப்பதற்கு தேவையற்ற விடயங்கள். சொல்லப்போனால் நாம் எப்போதுமே மாணவனாக இருந்து கொள்வதே மாற்றுக் கருத்துக்களை பொறுமையுடன் பரிசீலிக்கவும், தேடிக்கொள்ளவும் உதவும்; தன்னைப் பார்த்துத்தான் மற்றவர் விசயத்தைப் புரிந்து கொண்டதாக முடிவுபண்ணும் மனவியாதியால் அவதிப்படுவதிலிருந்தும் தப்ப முடியும்!

**ரவீந்திரன்**
**சுவிஸ்**

## கோட்பாட்டு அடிப்படையிலான விவாதமே தேவை!

சரிநிகர் 118ல் ஔவையின் கடிதம் படித்தேன். மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சில விடயங்களை எவ்வித ஆய்வுகளுமின்றி ஒட்டு மொத்தமாக ஆணாதிக்கக் கருத்துக்களாக மறுதலிக்கும் போக்கு Radical Feminist களிடம் மலிந்து காணப்படுவது இன்றைய யதார்த்தம். இவர்கள் பெண்கள் மீதான ஒடுக்குமுறையை முதலாளித்துவ கட்டமைப்பிலிருந்து பார்ப்பதில்லை. இவர்கள் பேசும் தீவிரப் பெண்ணியக் கருத்துக்கள் அனைத்தும், அனைத்து விடயங்களையும் ஆணாதிக்க கருத்துக்களாக பார்க்க முனைவதால் சமுதாயத்தில் பெண்களை தனிக் குழுமமாக பார்க்கும் ஆபத்தையும் தோற்றுவித்து விடுகின்றது. இதற்கு இந்த பெண்ணிலைவாதிகளுக்கு Post Structural Feministகளின் பிழையான தத்துவ போதனைகளும் உடந்தையாகி விடுகின்றது. இதன் வெளிப்பாடுதான் ஔவையின் கவர்ச்சியும், கலாபூர்வமும் தொடர்பான கடிதம் என நினைக்கின்றேன்.

அழகு, ரசனை, கவர்ச்சி, கலாபூர்வம் அனைத்தும் எமது கலாசார கருத்தியலின் வெளிப்பாடுகளில் பிறப்பவை ஒரு பெண்ணை அழகாய் - கலாபூர்வமாக ரசிப்பது என்பது வர்க்க நிலைக் கண்ணோட்டத்தைப் பொறுத்தது. முதலாளித்துவ சமுதாயத்தின் சீரழிவு நுகர்வுக் கலாசாரத்தின் செயற்பாட்டை கவனத்தில் கொண்டு அழகுணர்ச்சியை நிராகரிப்பது ஆரோக்கியமானதல்ல. மனிதாபிமானம், மானுடநேயம், மானுட விடுதலை பற்றி பேசும் நாங்கள் அழகுணர்ச்சியை நிராகரிப்போம் ஆயின் எமது அடிப்படை மனிதநேயக் கோட்பாடே பிழையாகி விடும். அழகுணர்ச்சி வாழ்வில் மனிதனாய் வாழ்வதற்கு அவசியமும்- ஆரோக்கியமானதுமாகும். முக்கியம் அழகுணர்ச்சி என்பதை எவ்வகைக் கண்ணோட்டத்தில் நாம் கொண்டுள்ளோம் என்பதாகும். முதலாளித்துவம் பெண்களை மாத்திரம் போகப்பொருளாக பார்ப்பதில்லை. ஆண்களையும் போகப்பொருளாகவே பார்க்க முனைகின்றது. ஐரோப்பிய நாடுகளில் மலிந்து காணப்படும் Sex Shopகள் இதற்கு உதாரணம். இங்கு படையெடுக்கும் பெண்களைப் பற்றி ஔவை அறிந்தால் என்ன சொல்வாரோ தெரியவில்லை. **ஆண்களை 'ரசிக்கும்' எத்தனையோ பெண்ணிலைவாதிகளை எனக்குத் தெரியும்.** பிரச்சினை ஆண்/பெண் என்பதல்ல. கோட்பாட்டு அடிப்படையிலான விவாதமே இன்றைய தேவை.

**துடைப்பான்**
**பாரிஸ்**

## தர்க்க ரீதியான மறுதலிப்பு!

''துணிச்சல்'' வ.அ. இராசரத்தினத்தின் ஒரு அருமையான சிறுகதை. தன்னந்தனியான முஸ்லிம் கதாபாத்திரங்களின் ஒரு மொத்த வடிவம். அருமையான மூதூர் சோனக கிராமிய வழக்கில் எழுதப்பட்டுள்ளது. இவ்வளவு இஸ்லாமிய அரபு வழக்குக் கலைச் சொற்களை ஆழ்ந்து அனுபவித்து எழுதியுள்ளார். சாதாரண ஒரு தமிழ் மகனுக்குத் தெரியாதவை அவை. தொழுகை பற்றிய ஒரு அசமந்தப் போக்குடையது அவருடைய கதாபாத்திரம். வ.அ.இ.விற்கு தொழுகையின் பாரிய விழுங்க நியாயமில்லைத்தான். ஆனாலும் ஒரு தரமான சிறுகதை தந்த சரிநிகரைப் பாராட்டத்தான் வேண்டும்.

மோகனா சிவானந்தகுரு என்னும் பெயருடைய பெண் போராளியிடமிருந்த வந்த ராதிகா அவர்களின் கட்டுரைக்கான எதிர்வினை ஆழமானதாகவும் தெளிவான ஒரு மறுதலிப்பானதாகவும் இருந்தது. சாவினைத் தீர்மானிக்கும் உரிமையை இருபாலாருக்கும் பொதுவான கருத்தியல்பு பற்றிய மோகனாவின் விளக்கம் தர்க்கரீதியானது. திருமண நிகழ்வுகளும் இயக்கத்துக்குள் நிகழ்கின்றன, அங்கிருந்த மணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது போன்ற விபரங்களை கட்டுரை தெளிவு படுத்தியது. இன்னும் இதுபோன்ற தெளிவுகள் பெண் போராளிகளிடமிருந்தும் வர வேண்டும். ஆவ செய்யுமா சரிநிகர்.

''மணலுக்குள் தலையைப் புதைப்பதை விட வேறென்ன செய்ய முடியும்'' என்ற சிவசேகரம் அவர்கள், ராஜினியின் மறுபக்கம் ஒன்றினைப் புரட்டி விட்டு மௌனமாகி விட்டது ஏன்?

**இளைய அப்துல்லாஹ்**
**அக்குறணை**

## வைத்தியசாலையின் சீர்கேடு!

காத்தான்குடி மாவட்ட வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்களும், ஒரு உதவி வைத்திய அதிகாரியும் கடமை புரிகின்றனர். ஆனால் இவ்வைத்தியசாலையில் இரவில் ஒரு வைத்தியர் கூட தங்குவதில்லை. அத்துடன் வெளிநோயாளர் பிரிவு காலை 10 மணிக்கே ஆரம்பிக்கின்றது. உதவி வைத்திய அதிகாரி ஒவ்வொருநாளும் காலை 10 மணிக்குத்தான் வைத்தியசாலைக்கு வருவார். பிற்பகலில் மூன்று வைத்தியர்களில் ஒருவர் மட்டுமே வருவார். அதுவும் 3.30க்கு பின் வந்து அரை மணித்தியாலம் மட்டுமே நோயாளிகளைப் பார்வையிடுவார். பி.ப. 4 மணி தொடக்கம் அடுத்த நாள் காலை 9 மணி வரை எந்த வைத்தியரும் வைத்தியசாலைக்கு வருவதில்லை.

இதேவேளை ஒரு மாதத்திற்கு முன் இங்கு வேலைக்காக வந்த தமிழ் சகோதர வைத்தியர் ஒருவர் சில இரவு வேளைகளில் தங்கி சிகிச்சையளிக்க முடிந்தது என்றால் ஏன் இந்த மூன்று வைத்தியர்களினாலும் இவ் வைத்தியசாலையில் தங்க முடியாது? இந்த மூன்று வைத்தியர்களும் காலையில் 9 1/2 மணிமுதல் 11 மணி வரை 1 1/2 மணித்தியாலமும் பி.ப. 3 1/2 மணி தொடக்கம் 4 மணி வரை 1/2 மணித்தியாலமும் என எல்லாமாக 24 மணித்தியாலத்தில் 2 மணித்தியாலம் மட்டுமே வைத்தியசாலை எல்லைக்குள் இருக்கின்றனர். இது ஏனைய நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் ஊழல்களுக்கும் வழி வகுக்கிறது.

**உதுமா லெப்பை**
**காங்கேயன் ஓடை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# லிங்கநகர் மீது மீண்டும் இராணுவத்தின் கரிசனை!

லிங்கநகர் மீள் குடியேற்றக் காரர்கள் விடயத்தில் மீண்டும் இராணுவத்தினரின் கரிசனை திரும்பியுள்ளது. என்ன நேர்ந்தாலும் அவர்களை அகற்றியே தீர வேண்டும் என்ற முனைப்புடன் இராணுவத் தலைமை செயற்பட்டு வருகிறது.

இந்த முனைப்பின் காரணமாக இராணுவ அதிகாரிகளினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் அவர்களுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உடனடியாக அவர்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும்படி இரண்டு கடிதங்களிலும் வற்புறுத்தப் பட்டுள்ளன.

யாராவது நிரந்தர வீடுகள் அமைத்திருந்தால் அவற்றுக்கு நிவாரணம் வழங்க முடியுமென்றும் ஏனையவை புல்டோசர் மூலம் தரைமட்டமாக்கப்படும் என்றும் அக்கடிதங்கள் குறிப்பிடுகின்றன.

லிங்கநர் மீள் குடியேற்றமானது மூன்றாவது ஈழ யுத்தம் காரணமாக வீடுவாசல்களை முற்றாக இழந்தோர், சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியாதோர் ஆகியோரால் உருவானது. இது லிங்கநகர் கிராமத்திலிருந்து கடலில் துருத்திக் கொண்டிருக்கும் மலைப்பாங்கான பிரதேசமாகும். தங்கள் சுடுவீச் செல்லைக்குட்பட்ட பிரதேசம் என இராணுவம் தன்பாட்டில் கூறிக்கொண்டிருப்பினும் இதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. முன்னாள் ஆளுநர் நளின் செனவிரட்ன மாத்திரமல்ல லயனல் பெர்னாண்டோவும் இதனை எழுத்துமூலமும் மறுத்துரைத்துள்ள போதிலும் இராணுவம் இக்குடியிருப்பு தனது சுடுவீச்செல்லைக்குட்பட்டதேயென திரும்பத் திக் கூறிவருகிறது.

திருகோணமலையின் மூத்த அரசியல் பிரமுகர் ஒருவருக்கு ஜனாதிபதி, இந்த மக்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் என உறுதி மொழி தெரிவித்துள்ளதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் குழறுபடிகள் எல்லாம் கீழ் மட்ட நடவடிக்கைகளே எனவும், மக்கள் அஞ்சத்தேவையில்லையெனவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும், இராணுவத்தால் எழுத்துமூலம் மக்களை அகற்றும்படி கேட்கப்படும் பிரதேச செயலாளர், பேசாமல் இருக்க முடியுமா என்பதும், அவ்வாறு அவர் நடவடிக்கையில் இறங்கி மக்களை அப்புறப்படுத்தியபிறகு மீளவும் அந்த மக்கள் அங்கே குடியமர்த்தப்படுவதும் நடக்கக் கூடிய காரியமா என்பதும் சிக்கலான கேள்விகளே. இதற்கு உடனடியாக அரசியல்வாதிகள் தான் விடையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அரசியல்வாதிகளால் விடை காணப்பட்டாலும் எழுத்து வடிவம் பெறாத பதிலால் மட்டிக்களி காணியின் இழுபறி இன்னமும் முடிந்தபாடில்லை.

கோயில்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான சுமார் 30 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட மட்டிக்களிக் காணியை கையேற்று மீனவக் குடியேற்றத் திட்டமொன்றை ஆரம்பிப்பது அரசின் நோக்கம் என்று நம்பப்படுகின்றது. இந்தக் குடியிருப்பு ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் நகர சபை எல்லைக்குள் இன விகிதாசாரத்தில் பாரிய மாறுதல் ஏற்பட வாய்ப்புண்டு. குடியேற்றத்திட்டத்தின் மூல நோக்கமும் அதுவே தான் என மக்கள் நம்புகிறார்கள்.

1995இலேயே இந்தக் காணிச் சுவீகரிப்புக்கான ஆயத்தங்கள் தொடங்கி விட்டன. இதனை உணர்ந்த நகர சபைத் தலைவர் கே. சூரியமூர்த்தி காணியற்ற மக்களுக்கு இந்தக் காணியைப் பகிர்ந்தளிக்க முற்பட்ட போது உள்வீட்டுக்குள்ளேயே கழுத்தறுப்புக்கள் நிகழ்ந்து காரியம் கெட்டு விட்டது.

ஆனால், அரசின் ஆயத்தங்களே படிப்படியாக முன்னேறி செக்ஷன் 5 எனப்படும் கடைசிப்படி வரை வந்துவிட்டது. பிரதேசச் செயலகத்தின் கூற்றுப்படி செக்ஷன் 5 நடவடிக்கை என்பது ஏறத்தாழ பூரணமான நிலைக்குச் சமமானது. ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளனர். சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களின் கூற்றுப்படி இம்முயற்சி கைவிடப்பட்டதாக பத்திரிகைகள் அறிவித்துள்ளன.

ஆனால், உத்தியோக ரீதியில் பிரதேச செயலகத்துக்கோ வேறு எங்குமோ இக்காணிச் சுவீகரிப்பு கைவிடப்பட்டது என அறிவிக்கப் படவில்லை. இவ்வாறான ஒரு அறிவித்தல் கிடைக்காத வரை காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் அடுத்த கட்டத்துக்கு நகர்வது தவிர்க்க முடியாதது என பிரதேச செயலகம் கூறுகிறது.

அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் சரியாகச் செயற்படத் தவறினால் மீனவக்குடியேற்றம் நடந்தே தீரும் என அதிகாரி ஒருவர் கூறுகிறார். பத்திரிகை அறிக்கை மட்டும் நடவடிக்கைகள் ஆவதில்லை என்பதை அரசியல்வாதிகள் உணரவேண்டும்.

-விவேகி

## பிரதேசசபைத் தலைவர் மறுக்கிறார்!

கடந்த சரிநிகர் இதழில் மூதூர். தோப்பூர் பிரதேசத்தவர்களுக்கு புலிகளிடமிருந்து வரும் கப்பக் கடிதங்கள் சம்பந்தமான செய்தியொன்று பிரசுரமாகியிருந்தது. குறித்த பிரதேச மக்களின் வாய்மொழிச் செய்தி மூலமான நம்பிக்கை மிகு ஆதாரங்களைக் கொண்டே குறித்த செய்தியை ''பாதுஷா'' என்பவர் எழுதியிருந்தார். எனினும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ''இவ்வாறானதொரு கப்பக் கடிதம் மூதூர் பிரதேச சபைத்தலைவருக்கும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது'' என்பது தன்னாலன்றி வெளியே வந்திருக்க முடியாதென்றும் தனக்கு அவ்வாறான தொரு கடிதம் வரவில்லை. அப்படியிருக்கையில் இவ்வாறான செய்தியை எவ்வாறு வெளியீடுவீர்கள் என்றும், இவ்வாறானதொரு செய்தியால் தனது உயிருக்கு ஏதாவது நடக்காதென்பதற்கு எவ்வாறு உத்தரவாதமளிக்கப் போகிறீர்கள் என்றும் பிரதேச சபைத்தலைவர் சரிநிகரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவினார்.

இவ் விடயம் தொடர்பான பிரதேச சபைத்தலைவரின் நியாயமான ஆதங்கத்தினை சரிநிகர் மதிப்பதால் மறுப்பொன்றை வெளியிடுவதாக கூறியது. அதைவிட செய்தியாளரைத் தெரியப்படுத்தினால் தன்னிடம் புலிகள் இதுதொடர்பான விசாரணைக்கு வந்தால் அவரது தவறான செய்தியாலேயே இது நிகழ்ந்தது என்று கூறலாம் என்று பிரதேச சபைத் தலைவர் கூறினார். இது சாத்தியமில்லை என்று சரிநிகர் தெரிவித்து, இம்மறுப்பை வெளியிடச் சம்மதித்தது.

மூதூரில் நடைபெறும் சம்பவங்கள் எமது செய்தியில் குறிப்பிடப் பட்டதுபோல் அப்பிரதேச முஸ்லிம்களை 'இரு தலைக்கொள்ளி எறும்பு நிலைக்கும்' 'மிகுந்த அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கியுள்ளது என்பதை மூதூர்ப் பிரதேசத்தவர்களுடனான உரையாடல்கள் மூலமும் அறிய முடிகிறது.

இவ்வாறான செய்திகளைப் பிரசுரிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தைக் கோருவதும் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான உந்துதல்களையும் வழங்குவதே எமது பிரதான நோக்கமாக இருக்கிறது. மாறாக யாரையும் காட்டிக்கொடுப்பதோ, யாருக்கும் ஆபத்து விளைவிப்பதோ எமது நோக்கமல்ல. அது தவிரவும் செய்தியில் குறிப்பிடப்பட்டவர்கள் எமக்கு நேரடியாகத் தெரிந்தவர்களும் அல்ல.

எனினும், இது தொடர்பாக பிரதேச சபைத் தலைவருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களையிட்டு சரிநிகர் வருத்தம் தெரிவிக்கின்றது.

இதுபோக மூதூரில் இன்னுமிரு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மூதூர் பிரதேச இரு கிராம சேவகர்களது இரு வாகனங்கள் (மோட்டார் சைக்கிளும், சிறிய உழவு இயந்திரமும்) புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கப்பமாகக் கோரிய தொகை கொடுக்கப்படாததாலேயே இவ்வாறு கடத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதில் மோட்டார் சைக்கிள் அரபிக் கல்லூரி வீதிக்கு அண்மையில் வைத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பின்னர் இவ்வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக மூதூர் முஸ்லிம்கள் ஒரு பக்கத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருக்க மறுபக்கத்தில் இவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டாமென்றும், அவர்களுக்கு கொடுக்கிற பணத்தை தங்களுக்கு 'பன்சலை' கட்டுவதற்கு தருமாறும் இராணுவத்தினர் கேட்டுவருவதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

இன்னுமொரு சம்பவம் மூதூர் பிரதேச சபைக்குள்ளே சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. ஒரு கட்சியைச் சேர்ந்த பிரதேச சபையின் முக்கியஸ்தர் ஒருவர் அதே கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரை கதவைப் பூட்டிவிட்டு நையப்புடைத்திருக்கிறார். இக்கதை ஊரெல்லாம் பிரபலமாகி நாறிக்கொண்டிருக்கிறது. மூதூர் பிரதேச மக்களும் சம்பந்தப்பட்டவர்களும் இதற்கான ஆதாரங்களாகும்.

மூதூர் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் எல்லாவிதமான அச்சுறுத்தல்களும் இச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களால் வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதே சரிநிகர்ச் செய்தியின் நோக்கமாகும்.

○

## கொழும்பில் கெடுபிடி!

தமிழ் மக்களுக்கெதிரான வழமையான பாதுகாப்புக் கெடுபிடிகள் தலைநகர் கொழும்பில் தொடர்ந்த வண்ணமே இருக்க வன்னியில் புலிகளுக்குகெதிரான அரச படைகளின் போர் முஸ்தீபுகளையொட்டி கொழும்பில் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் மேலும் இறுக்கி விடப்பட்டுள்ளது.

வழமையான சோதனைகள் தேடுதல்கள்களை விட வன்னியில் 'ஜயசிக்குறு' படை நகர்த்தல் ஆரம்பமாகுவதற்கு சில தினங்களுக்கு முன்பிருந்தே கொழும்பில் பொலிசாரும் இராணுவத்தினரும் இரவு பகலாக தங்களது பாதுாப்புக் கெடுபிடிகளை அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

புறக்கோட்டைப் பகுதி, மருதானை, கொட்டாஞ்சேனை பகுதிகளிலுள்ள தனியார் விடுதிகள் பொலிசாரினால் சுற்றி வளைக்கப்பட்டு (புதன் வியாழன், வெள்ளி) பலர் விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டும் உள்ளனர்.

மருதானைப் பகுதியில் வீடுகளிலும் விடுதிகளிலும் கைது செய்யப் படுவோர் மருதானைப் பொலிசாரால் மிகவும் மோசமாக நடத்தப் படுவதாகவும் விடுதிகளில் தங்கியிருப்போரை பொலிசார் சிவிலில் சென்று மிரட்டி பணம் பறிப்பதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் மட்டக்குளி முகத்துவாரம் பகுதிகளிலும் வீடுவீடாகச் சென்று தேடுதல் நடத்திய படையினர் பல இளைஞர், யுவதிகளை கைது செய்து முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர். வியாழன் வெள்ளி தினங்களில் முகத்துவாரம் பொலிஸ் நியைம் முன்பாக கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் குழுமி நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதே வேளை கிராண்ட்பாஸ், தெமட்டகொடை, வத்தளை, புறகோட்டை பொலிஸ் நிலையங்களிலும் பல தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

வீதிகளில் நடந்து செல்வோரையும் வாகனங்களை மறித்தும் படையினர் தீவிரமாக சோதனையிடுகின்றனர். பல தமிழ் இளைஞர், யுவதிகள் வீதிகளின் ஓரங்களின் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததையும் நேரடியாக காணக்கூடியதாக இருந்தது.

○

## சிவாவுக்கு கல்தா?

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்காக அக்கட்சியினுள் கடும் போட்டியொன்று நடைபெறுவதாக அறியக்கிடைக்கிறது.

அக்கட்சியின் தலைவர் மு.சிவசிதம்பரத்தைக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கி விட்டு அப்பதவிக்கு கட்சியின் ஸ்தாபகத் தலைவரான சா.ஜே.வி செல்வநாயகத்தின் புத்திரரான செ. சந்திரஹாசனை நியமிக்கச் சில நபர்கள் முயல்வதாகத் தெரியவருகிறது.

சந்திரஹாசன் 1983 இலிருந்து சென்னையில் இருப்பதுடன் அங்கு அவர் இலங்கை அகதிகளுக்கான அரச சார்பற்ற அமைப்பொன்றை நடத்தி வருகிறார். த.வி.கூவின் இப்போதைய பொதுச் செயலாளரான இரா. சம்பந்தனை அப்பதவியிலிருந்து அகற்றி விட்டு அப்பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தை நியமிக்கச் சந்திரஹசான் தரப்பினர் முயல்வதாக மேற்குறித்த தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்ட பா.உ. அ. தங்கத்துரை, முன்னாள் பா.உ. மாவை சேனாதிராஜா ஆகியோரும் இக்குழுவுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்று தெரிய வருகிறது. இதேவேளை இத்தகவல் தொடர்பாக சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பதை சுட்டிக் காட்டி உண்மையை அறிந்து கொள்வதற்காக தங்கத்துரை அவர்களுடன் சரிநிகர் தொடர்பு கொண்ட போது அவர் 'அது வெறும் கற்பனைக் கதையே' என்று கூறி மறுப்புத் தெரிவித்தார்.

○

## தனிப்பட்ட சொத்தல்ல!

எப்பாவல பொசுபேற் சுரங்கத் தொழில் பாதுகாப்பு ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட எதிர்ப்புக் கூட்டமொன்று மே 15 அன்று எப்பாவல நகரத்தை அண்டி வாழும் விவசாயிகளினால் நடத்தப் பட்டது. அன்றைய தினம் அப்பொசுபேற் சுரங்கத்தை பல்தேசிய நிறுவனம் ஒன்றின் அந்நியப் பிரதிநிதிகளுக்கு காட்டுவதற்காக உத்தேசிக்கப் பட்டிருந்த கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்னவின் எப்பாவல வருகை நிறுத்தப்படும் அளவிற்கு அவ்வெதிர்ப்பு பிரபலமாக இருந்துள்ளது.

எப்பாவல பொசுபேற் சுரங்கத் தொழிலை அந்நியர்களுக்கு காட்டிக் கொடுக்காதே அது சி.வி.குணரத்னவின் தனிப்பட்ட சொத்தல்ல என 5000க்கும் அதிகமான விவசாயிகள் இக் கூட்டத்தில் ஒரே குரலில் கூறியுள்ளனர். வெளியிடங்களில் இருந்து எப்பாவல நகருக்குள் விவசாயிகள் ஒன்று சேர்வதைத் தடுக்கும் முகமாகப் போக்குவரத்துச் சேவைகள் கூட இடைநிறுத்தப் பட்டிருந்தன.

○

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை, கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 234. காலி வீதி. இரத்மலானை. 19970517

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்